
# குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர்: சா. குருசாமி



டாகூர்

50 காசு

ஊசி 2 குத்து 4

★ ஜனவரி 1964 ★

இதனுள் :

வெறி நாய்கள் !
அபார மூளை அர்ச்சகர் !
இசையோ இசை !
பெசண்ட் வரலாறு !!!
டில்லி மக்கள் !!
நானே நீ ; நீயே நான் !
இருட்டிலே கபிலர்
உங்கள் மன உறுதி
மரபு நிலை
—முதலியன

| டெலிஃபோன் நம்பர் : | நிறுவனம் : | தந்தி : |
| --- | --- | --- |
| 51451 | 1930 | ORIDOL |

தரத்தில் சிறந்த

எங்கள் பருப்பு வகைகள்

| பட்டினத்தார் உளுந்தம் பருப்பு | எப்போதும் வாங்கி உபயோகியுங்கள் — எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். | ஷெல் துவரம் பருப்பு |
| --- | --- | --- |

தயாரிப்பாளர்கள் :

P. புன்னவன நாடார் (FIRM)

235, திருவொற்றியூர் ஹைரோடு,

சென்னை-21.

# MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

Manufacturers of:

**Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.**

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

# குத்தூசி

[ஆசிரியர்: சா. குருசாமி]

— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ் : விலை 50 காசு ;

ஆண்டுக் கட்டணம் :

உள் நாடு : ரூ. 5 கொழும்பு : ரூ. 6

வெளி நாடு : ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.
விற்பனையாளர் இல்லாத ஊர்களில்
ஆண்டுக் கட்டணம் அனுப்புவதே நல்லது.

## விற்பனையாளர் :

விற்பனையாளர்கள், தங்களுக்குத் தேவையான இதழ்களுக்கு, இதழ் ஒன்றுக்கு 40 காசு வீதம் 15-ந் தேதிக்குள் தெரிவித்து விடுவது நல்லது. 100 இதழ்களுக்குமேல் பெறுபவர்களுக்கு 25% கழிவு தரப்படும்.

## விளம்பர விகிதம் :

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய் ; அட்டைப் பக்கத்துக்கு 75 ரூபாய் ; இரு வர்ண அட்டைப் பக்கத்துக்கு 100 ரூபாய்.

(அரைப் பக்கம் : 25 ரூபாய்)

குறிப்பு :- நீடித்த விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

குறிப்பு :—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை ; முன் அனுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.

# எமது புதிய வெளியீடுகள்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| காலநிலை இயல்<br>இர. இராதா, M.A., L.T., M.A. | 10 | 00 |
| பகவதி எம். எல். ஏ.<br>"துமிலன்" | 8 | 00 |
| முதன்மைபெற்ற அமெரிக்கப் பெண்மணிகள்<br>தமிழில்: ஏ. ஆர். இந்திரா | 6 | 00 |
| இனி நாம் செய்ய வேண்டுவது யாது?<br>—டால்ஸ்டாய்<br>ரா. விசுவநாதன் | 3 | 50 |
| பாய் பரமானந்தன்<br>தென்காசி ச. சொக்கலிங்கம் | 3 | 25 |
| யார் அவர்?<br>மகரம் | 2 | 50 |
| இமயத்தில் நூறு மைல்<br>எஸ். அருண் | 1 | 50 |

## பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம்;
சென்னை - 5

தெப்பக்குளம்;
திருச்சி - 2

# தமிழ் நூல் நிலையம்

84, ஷெனாய் நகர் : : சென்னை-30

| | | ரூ. காசு |
|---|---|---|
| 1. | பிச்சைக்காரி (சிறு கதைகள்)<br>சா. குருசாமி. | 2·00 |
| 2. | பன்னீர்ச்செல்வம் (நாடகம்)<br>சா. குருசாமி. | 0·40 |
| 3. | குத்தூசி (12 இதழ்கள்)<br>பைண்டு செய்யப்பட்டது. | 8·00 |
| ★ 4. | குத்தூசி (கிண்டல்)-கட்டுரைகள்<br>புதிய தொகுப்பு | அச்சில் |
| ★ 5. | கட்டுரைக் கொத்து<br>சா. குருசாமி. | அச்சில் |

★ இவை இரண்டும் இதுவரையில் புத்தக உருவில் இல்லாதவை; திருத்தியும், பெருக்கியும், தனிச் சுவையுடன் எழுதப்பட்டவை. மார்ச் இறுதியில் கிடைக்கும்.

குறிப்பு :—மேற்கண்டவைகளுக்கு அஞ்சல் செலவு தனி.


# குத்தூசி

## உறுப்பினர்கட்கு:

*திங்கள்தோறும் இதழ்கள் 1-ந் தேதியன்றே அஞ்சலில் சேர்க்கப்படுகின்றன. மும்முறை ஒத்திட்டுப் பார்த்த பிறகே அஞ்சலகத்துக்கு அனுப்பப்படுகிறது. ஆதலால் இதழ் கிடைக்காவிடில் அஞ்சல் துறையினருக்கு முறையிடுவதே முறை.*

*இதழ் கிடைக்காத முறையீடுகள் அந்தந்த மாதம் 7 – 8 தேதிக்குள்ளாக வரவேண்டும்; பிறகு வருபவைகளை (சிறப்பாக நூலகங்களிலிருந்து) கவனிக்க வசதியில்லை.*

## விற்பனையாளர்கட்கு:

*ஒவ்வொரு மாதமும் 30-ந் தேதிக்குள் (அடுத்த மாதத்துக்கு வேண்டிய இதழ்களுக்கான) முன் பணத்தை அனுப்பி வைத்தால் முதல் தேதியன்றே ஒரே தடவையில் எல்லோருக்கும் கட்டுகளை அனுப்பி வைக்க வசதியாயிருக்கும். தாமதமாக அனுப்புகிறவர்களுக்கு 8 அல்லது 10-ந் தேதிதான் அனுப்ப வசதிப்படும்.*

உரிமையாளர்.

## தி மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்.

23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, (போன்: 82926) சென்னை-34.

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவ சென்னை அரசாங்கம் மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் பிக்ஸட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்திரவாதம் அளித்திருக்கிறது.

*எங்கள் டிபாசிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்:—*

| | | | |
|---|---|---|---|
| ஒரு ஆண்டும் அதற்கு மேலும் | ... | 4½% | ஒரு ஆண்டிற்கு |
| இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 4¾% | ,, |
| மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 5% | ,, |
| நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும் | ... | 5¼% | ,, |
| ஐந்து ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை | | 5½% | ,, |

ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் மூன்று ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் டிபாஸிட் செய்தால் மேற்கண்ட வட்டி விகிதங்களை விட 1/4% வட்டி அதிகமாக அளிக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

**எஸ். இராஜரத்தினம்**


*காரியதரிசி.*


## கட்டுரையாளருக்கு வேண்டுகோள்:

1. *நல்ல வெள்ளைத் தாளில், நெருக்கமில்லாமல், ஒரே பக்கத்தில்,*
2. *ஒரு படி (நகல்-காப்பி) வைத்துக்கொண்டு,*
3. *கூடுமானவரையில் பிறமொழிக் கலப்பின்றி எளிய, இனிய நடையில், கூறியது கூறாமல், சுருக்கி, சொல் சிக்கனத்துடன்,*
4. *கூடுமான வரையில் 5 பக்கங்களுக்கு மேல் இராமல்,*

எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

**'குத்தூசி''**


கோட்சே

"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

குத்தூசி

ஊசி 2 | ஜனவரி 1964 | குத்து 4

# வெறி நாய்கள்!

மரணம் எல்லோருக்கும் பொது. மரணத்துக்கு எந்நேரமும் ஆயத்தமாயிருப்பதுதான் மனிதனின் சிறந்த அறிவு. மரணத்திலுங்கூட சுவையான மரணமுண்டு: கசப்பான மரணமும் உண்டு.

சாக்ரட்டீஸ், காந்தி, கென்னடி போன்றவர்களுக்குக் கிடைத்த மரணம் சுவையானது; உண்மையான பொதுத்தொண்டுக்குக் கிடைத்த இணையற்ற பரிசு; பொதுநலத் தொண்டர் பொறாமைப்பட வேண்டியது. மற்ற மக்களின் மரணம் பிணியினாலும் மூப்பினாலும் கிடைப்பது; இது கசப்பானது; ஆனால் இயற்கையானது.

ஜூலியஸ் சீசர் போன்ற பேரரசர்கள் முதல், லியாகத்அலிகான் போன்ற முதலமைச்சர் வரையில் — எத்தனையோ மாபெரும் தலைவர்கள் மாற்றான் கையினால் படுகொலை செய்யப்பட்டு மாண்டிருக்கின்றனர். சார்லஸ்(I) போன்ற மன்னர்கள் அரசியல் காரணத்துக்காகத் தூக்குமேடைக்குச் சென்றிருக்கின்றனர்.

இவர்கள் யாவரும் பதவிப்பிரியர்களால் கொல்லப்பட்டவர்கள்.

ஆனால் மேலே கூறிய மூவரும் அப்படியல்ல.

சாக்ரட்டீஸ் பகுத்தறிவுப் பிரசாரத்துக்காகக் கொல்லப்பட்டார். காந்தியார் மதவெறியனின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானார். கென்னடி இன வெறியனால் படுகொலை செய்யப்பட்டார்.

இம்மாதம் காந்தியார் படுகொலை செய்யப்பட்ட மாதம். 1948 ஜனவரி 30 ல் அல்லவா?

அவர் கொல்லப்பட்டது யாரால்? எதற்காக? பிரிட்டிஷ்காரனால் அல்ல; முஸ்லீமினால் அல்ல; குடிவெறியனால் அல்ல. கோட்சே என்ற மதவெறிப் பார்ப்பனன் குண்டினால்! சுட்டுக் கொல்லப்பட்ட வுடனே அவனைச் சேர்ந்தவர்கள், தமிழ்நாட்டிலுங்கூடப் பல இடங் களில் மிட்டாய் வழங்கி குதூகலப்பட்டனர்.

இந்து—முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார்; இந்து-மத வெறி யனால் சுட்டு வீழ்த்தப்பட்டார்.

எந்த வர்ணாசிரமத்தையும், அதன் மூத்த பிள்ளையாகிய சாதியை யும் பாதுகாப்பதற்காக ஆயுள் முழுவதும் பாடுபட்டாரோ, அதே கொள்கையைக் கொண்ட ஒரு மராத்தி மத வெறியனால், உயர் சாதிக்காரன் என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மதம் என்ன செய்யும்? மகாத்மாவின் உயிரையும்கூடக் குடித்து விடும்.

பிற தலைவர்களைப் போலப் பதவி ஆசையுண்டா? பணத்தாசை உண்டா? குடும்ப பாசம் உண்டா? தனக்கென்று பத்து ரூபாய் மதிப் புள்ள உடைமையாவது உண்டா? துறவியாக வாழ்ந்தார்; தியாகியாக வீழ்ந்தார்!

1948 ஜனவரி 30 உடன் இந்நாட்டிலுள்ள சாதியும், வர்ணாசிரம மும், மத வெறியும் — இவற்றை வளர்த்துவரும் விழாக்கள், புராண இதிகாசங்கள், பண்டிகைகள், யாவும் ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இல்லையே! அதற்குப் பிறகு அடையாறு ஆலமரம் போல் அல் லவா மத வெறி பரந்து வளர்ந்திருக்கிறது?

இன்னும் எத்தனை மகாத்மாக்களின் உயிரைக் குடிக்கப்போகின் றதோ, தெரியவில்லை!

ஆனால் ஒன்று! மறைந்த மாபெரும் தியாகியை நினைத்து மதவெறி யற்ற மக்கள் யாவரும் ஜனவரி 30-ந் தேதியன்று ஒரு சொட்டுக் கண்ணீர் விடாமல் இருக்க முடியாது!

கொள்கை வாதிக்கு இத்தகைய மரணம் அல்லவா கிடைக்க வேண்டும் ?

வாழ்க, காந்தியார் தியாகம்!

# அபார மூளை அர்ச்சகர்!!

ஆந்திர அரசாங்கத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை அர்ச்சகர்களாக நியமனம் செய்ய முடிவு செய்திருக்கிறார்களாம்! ஆனால் அதற்கான தகுதியுள்ளவர்கள் — பயிற்சி பெற்றவர்கள் — கிடைக்கவில்லையாம்!

அடி சக்கை! இதேபோலத்தான் வெள்ளையர்கூட இரண்டு நூற்றாண்டுகளாகச் சொல்லி வந்தனர்! "கவர்னராகவும், கலெக்டராகவும், உயர்மன்ற நீதிபதியாகவும், போலீஸ் மேலதிகாரியாகவும், இராணுவத் தலைவராகவும், மருத்துவ மாநிலத் தலைவராகவும், பிற உயர் தரப்பதவிகளுக்கும் "தகுதி வாய்ந்த" இந்தியன் கிடைக்கவில்லையே, என்ன செய்வோம், அய்யகோ!" என்று "வாஸ்லின் கண்ணீர்" வடித்துக்கொண்டிருந்தனர்!

இப்போது இந்நாட்டுப் பழங்குடி மக்களுக்காக அதே 'கண்ணீர்' வடிப்பதில் "உயர்சாதி"க்காரர் தீவிரமாயிருக்கின்றனர்!

நாம் கேட்கிறோம்! கோவில் நுழைவுச்சட்டமிருக்கிறது! அரசியல் சட்டத்தின் 17 வது (தீண்டாமை ஒழிப்பு) பிரிவுகூடத்தான் இருக்கிறது! நடைமுறையில் என்ன நடக்கிறது? ஆந்திராவில் மட்டுமல்ல; தமிழ் நாட்டிலுங்கூட!

"அர்ச்சகர்த் துறையில் ஆந்திராவில் யாதகிரி, தெனாலி, சிமாசலம் ஆகிய ஊர்களில் பயிற்சி பெற்ற" அர்ச்சகர்தானே அரிஜனங்களிடையே கிடைக்கவில்லை! போகட்டும்! சுத்த மண்டுகள்! யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தலைவராகவும், தமிழ்நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் தலைவராகவும், கலெக்டர்களாகவும், நீதிபதிகளாகவும், அரசாங்க செக்ரட்டரிகளாகவும், எஞ்சினியர்களாகவும், டாக்டர்களாகவும் தகுதி பெறக்கூடிய அற்ப அறிவுதான் இக்கூட்டத்துக்கு இருக்கிறது, என்பது நமக்குத் தெரியும்! முதிர்ந்த அறிவு இல்லாத கூட்டந்தானே! ககாரின், டென்சிங் — போன்றவர்களின் சாதனைகளைவிடப் பல்லாயிரம் மடங்கு மகத்தான சாதனையல்லவா, அர்ச்சகர் வேலை? இதற்கான பயிற்சியைப் பெறமுடியாதுதான்!!

நாம் கேட்கிறோம்! கோயிலுக்குள்ளே விளக்குப்போடவும், பூக்கட்டவும், மூலஸ்தானத்தில் திருவலகு கொண்டு திருத்தொண்டு செய்யவும், கடவுள் என்ற சிலையைத்தூக்கிச் சுமக்கவும்கூடவா தனிப் பயிற்சி தேவை? பளு மூட்டை தூக்குகின்ற பழங்குடி மகனுக்கு வாகனத்தையும் அதன் அருகில் அமர்கின்ற புளி மூட்டை மனிதனையும் தூக்கவா முடியாது?

எத்தனை கோயில்களில் இந்த வேலையை இவர்களிடம் ஒப்படைத்து உங்கள் தீண்டாமை ஒழிப்பையும், சோஷ்யலிச மனித சமத்துவத்தையும் காட்டியிருக்கிறீர்கள்?

சரி! அர்ச்சகன் (சர்க்கஸ்) திறமைதான் வராது! மண்டுக்களுக்கு! மடப் பள்ளிக்குள் பொங்கலும் வடையும் புளியோதரையும் சுண்டலும் செய்யக்கூடவா பயிற்சி வேண்டும்? இதற்காவது ஒரு போட்டிவைத்து 'தகுதியான' ஆதித்திராவிடரை — சக்கிலியரை — நியமிக்கலாமே! ஆதித்திராவிடர் கிடக்கட்டும்! அறநிலையப் பாதுகாப்பு அமைச்சரின் சொந்தக்காரரை — அல்லது அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவருடைய சுற்றத்தாரில் ஒருவரை, அல்லது இரும்பு — எஃகு மந்திரியாரின் குலத்தாரில் ஒருவரை — நியமித்துக் காட்டலாமே!

அதெல்லாம் முடியாது சாமி, முடியாது! பேசலாம்! எழுதலாம்! நடிக்கலாம்! பாடலாம்! ஆடலாம்! புளுகலாம்!

கருப்பய்ய நாடாரை மடப்பள்ளிக்குள்ளே வேலைக்கு விட்டு, சேரி சின்னான் மகனை சிலை—வாகனம் சுமக்கச் செய்ய உத்தரவிட்டால், அடுத்த நாளே இதற்குப் பொறுப்பானவருக்கு, 1948 ஜனவரி 30 வெள்ளிக்கிழமைதான்!

நமக்கெதற்கு அதெல்லாம்! இது கச்சேரி "சீசன்" அல்லவா? பத்திரிகைச் செய்திக் கச்சேரியோடு நிறுத்திக்கொள்வதே பச்சை அரசியலுக்கழகு என்க!

பழமை வாழ்க! புதுமையும் புரட்சியும் அடியோடு வீழ்க!! ஓம், தத் சத்!!

# இசையோ இசை!!

"கடவுள் எங்கேயிருக்கிறார்?" என்று சில நாத்திகர் நாத்தழும்பேறிக் கடாவுகின்றனர்! அவர்களுக்கு யாம் அறைவோம், "தமிழ் நாட்டில்தான் இருக்கிறார்; பிற உலகப் பகுதிகளில் மாண்டு மறைந்து போய்விட்டார்!"

பிறநாடுகளில் (வட இந்தியா உட்பட) இசை என்றால், ஓவியம் என்றால், காவியம் என்றால், நாடகம் என்றால், நாட்டியம் என்றால், கடவுளையும் மதத்தையும் கடுகின் கால் பகுதியளவாவது காணமுடிகிறதா? தொலையட்டும்; அத்தனை கோடிப்பேரும் மீளா நரகத்தில் வீழ்ந்து நெளியட்டும்!

தமிழ் நாட்டார் அனைவருக்கும், சிறப்பாக முஸ்லீம்—கிருஸ்துவர் போன்றவர்களை நீக்கிய மதத்தார் அனைவருக்கும், எப்போதுமே மோட்சத்தில் முன்பகுதி மெத்தை நாற்காலிகள் (சோஃபா) ஒதுக்கி

ரிசர்வ்) செய்யப்பட்டுவிட்டன! வேறு எந்த நாட்டு ஆத்மாவும் அதன் கிட்டே நெருங்கவே முடியாது!

இசையா? "ஏ இராமா! அய்யகோ அம்பலவாணா? அந்தோ, ஆறுமுகா!"

நாட்டியமா? "காலைத்தூக்கி ஆடினார் கனகசபேசர்!"-கிருஷ்ணன் செய்த துஷ்டத்தனம் கேளடி சகியே!"

கதாகாலட்சேபமா? ருக்மணி கல்யாணம்! வள்ளி திருமணம்! திருப்பாணாழ்வார்!

ஓவியமா? தொந்திக் கணபதி! திருப்பதி வெங்கடாசலபதி! சரஸ்வதி! லட்சுமி! இப்படியாக் பல்லாயிரம்! இத்தனை பேரையும் நேரிற் கண்டு ("இண்டர்வ்யூ" செய்து) நிழற்படமும் எடுத்ததுபோல; அவரவர் இன்றும் அணிந்துள்ள வர்ணத்துணிகளுடன், அப்படியே அச்சாக!

சிற்பமா? மேற்படியானுக்குத் தம்பி!

மற்றநாடுகளில் மற்ற மதத்தினர் அவரவர் கோயில்களோடு (வீட்டில் கூட இல்லை!) கடவுளை விட்டு வைத்திருக்கிறார்கள்! ஆத்திகமே ஆக்சிஜனாக (உயிர்க்காற்று) உள்ள நம்தம் செந்தமிழ்நாட்டின் கண்ணே,—

இசையில் கடவுள்! தெரு ஓரத்தின் நடைபாதை மேடையில் கடவுள்! முச்சந்திகளில் கடவுள்! பணிமனையிலே கடவுள்! வானொலிப் பெட்டிக்குள்ளே கடவுள்! வீட்டுக்குள்ளே (மலம் கழிக்கும் இடம் தவிர மற்ற) எல்லா இடங்களிலும் கடவுள்!

இது மட்டுமா? மார்கழி மாதக்குளிரில் நம் கடவுள் நெடுநேரம் கொசுவலைக்குள்ளே உறங்கிவிடுகிறார் என்பதற்காக, நாள்தோறும், "பள்ளி எழுந்தருளாயே!" என்ற திருப்பள்ளி எழுச்சி!

"தூங்குமூஞ்சியா உன் கடவுள்?" என்று பிற மதத்தான் நம்மைப் பார்த்துக் கேட்கத்துணிவானா?

"இதையெல்லாம் கேலி செய்வதானால், ஓடிப்போ, வேறு மதத்துக்கு" என்று சொல்லித்தான் இருபது கோடிப்பேருக்கு மேலாகவே அடித்துத்துரத்தி விட்டோமே!

இதுநிற்க! துவங்கலாம், இனி நாம்:—

*பிலகரி ராகம்: அட தாளம்*

*"மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்*
*நீராடப்போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!*
*நாராயணனே நமக்கே பறை தருவான்*
*பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்!"*

# தேவையற்ற திருவிழா !

தமிழ்நாட்டிலுள்ள 64 நகரசபைகளுக்கும் சென்னை நகரசபைக்கும் பொதுத்தேர்தல் நடைபெறப்போகிறது.

ஏறத்தாழ 12 அரசியல் கட்சிகள் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு, ''நகரங்களைக் காப்பாற்றியே தீருவோம்'' என்று இடி முழக்கம் செய்து கொண்டிருக்கின்றன.

''என் கட்சிக்குத்தான் தூய்மையாகக் குப்பையள்ளவும், மலம் எடுக்கவும், சாக்கடை சுத்தம் செய்யவும் தெரியும்! என் கட்சிக்குத்தான் பள்ளிக்கூடம் நடத்தவும், தெருவைப்பழுது பார்க்கவும் தெரியும்! என் கட்சிக்குத்தான் கடைக்கு லைசென்ஸ் கொடுக்கவும், வீட்டுக்கும் நாய்க்கும் வரி விதிக்கவும் தெரியும்! மற்றக் கட்சிகள் காட்டுமிராண்டிகள்'' என்று தேர்தலுக்கு நிற்கின்ற ஒவ்வொரு கட்சிக்காரரும் மார்தட்டிக் கூறுகிறார்! சுயேச்சை (உதிரி) 'ஜோக்கர்' பிரபு தியாகியும் இப்படியே கூறுகிறார்!

அதுசரி! சிபார்சு, லைசென்ஸ், கண்ட்ராக்ட்—லஞ்சம் சங்கதி என்ன?" என்று கேட்கிறார், உயர் திருவாளர் ஒரு ரூபாய் பிச்சை வோட்டர் பிரபு!

"லஞ்சமா? இதிலும் வேறு எந்தக் கட்சிக்கும் சளைத்தது அல்ல, என் கட்சி'', என்று பனிரெண்டு கட்சிகளும் புஜம் தட்டி அறைகூவி அழைக்கின்றனர்!

''ஏனய்யா இந்த உயர்பண்பு கவுன்சிலர்கள்? கமிஷனரே போதுமே நகரசபை நிர்வாகத்தை நடத்த? வண்டிக்கு அய்ந்தாவது சக்கரம் மாதிரி! கையில் ஆறாவது விரல் முளைத்த மாதிரி! கவுன்சிலர்கள்! இவர்கள் இல்லாவிட்டால் நகரம் என்ன ஆகிவிடும்? ஒரு மாவட்டத்தையே ஒரு கலெக்டரும் அவர் கீழுள்ள பணியாளர்களும் நிர்வகிக்கவில்லையா? என்று கட்சித் தலைவர்களைக் கேட்டால், ''நாங்கள் வளர்த்து வரும் "சிரஞ்சீவி''களுக்கு இந்தப் பொட்டுக்கடலை கூடப் போடவில்லையானால் எங்கள் மேலே விழுந்து பிடுங்கிவிடுமே'', என்று பதில் சொல்கிறார்கள்!

ஆகவே, நகரமன்றப் பிதாக்கள் அவசியம் என்க!

இவர்களின் முக்கிய தினசரிப் பொதுத்தொண்டு:—

கள்ளச்சாராயத் தமிழ்ச் செல்வர்களுக்கு ஜாமீன் (பொறுப்பு)

கொடுத்து காவல் (போலீஸ்) நிலையத்திலிருந்து மீட்டு வருதல்!

எனவே, நகரசபைத் தொண்டு வாழ்க! ஜனநாயகம் வாழ்க! அதாவது வரிப்பணம் கரியாகுக! லஞ்சம் ஓங்குக!! ஒழுக்கக்கேடு உயர்க!!!

சுய சோதனை :

# உங்கள் மன உறுதிக்கு உரைகல்

From "The Psychologist"

(தமிழாக்கம் : கே. அருணாசலம், B.SC., B.L.

வாழ்க்கையில் வெற்றி பெறுவது ஒரு புறம் இருக்கட்டும். வாழ்க்கையை நல்ல முறையில் நடத்திக் கொண்டு செல்வதற்கே - மன உறுதி மிக அவசியமாகிறது. அது மட்டுமல்ல. இந்த உறுதி சமநிலையில் இருக்க வேண்டும். அளவுக்கு மீறிய உறுதி, உரக்கப் பேசுபவராகவும், அதிகாரப் போக்குள்ளவராகவும் உங்களைச் செய்து விடக் கூடும்.

உறுதி, அளவு குறைந்தும் இருக்கக் கூடாது; அவ்வாறு இருந்தால் நமக்கு வேண்டியவர்கள் கூட நம்மை நினைவில் வைத்துக் கொள்ள முடியாத அளவுக்கு, ஏறெடுத்தும் பார்க்க முடியாத அளவுக்கு நம்மை ஆக்கிவிடும்.

கீழ்க்காணும் 'சுய சோதனை'யை நீங்கள் செய்து பாருங்கள். அடியில் கொடுக்கப் பட்டிருக்கும் விடையைப் பார்ப்பதற்கு முன், கொடுக்கப் பட்டிருக்கும் ஒவ்வொரு கேள்விக்கும் தக்கபடி 'ஆம்' அல்லது 'இல்லை' என்று திட்டவட்டமாகக் கணக்கிட்டு உங்கள் விடையைத் தனியே ஒரு தாளில் குறித்துக் கொள்ளுங்கள். பிறகு அடியில் உள்ளதுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்:–

(1) நாலு பேர் கூடியிருக்குமிடத்தில் உங்கள் பேச்சால் பிறரைக் 'கவர்ந்திருக்க முடிகிறதா உங்களால்?

(2) அடுத்தவரின் கருத்து உங்களுக்குச் சரி என்று தோன்றிலோ, அல்லது சரிபாதி சரியென்று தோன்றினாலோ உங்கள் கருத்தையே திரும்பத் திரும்ப நீங்கள் சொல்லிக் கொண்டிருப்பீர்களா?

(3) உங்களது திறமைகளைப் பற்றியும் சாதனைகளைப் பற்றியும் மற்றவர்களுக்கு மனக் குழப்பமில்லாமல் உங்களால் கூற முடியுமா?

(4) 'கல, கல' வென்று எல்லோரிடமும் கலந்து பேசுவது உங்களுக்குப் பிடிக்குமா? பேட்டிகளில் (Interviews) சிறந்த முறையில் உங்களால் விடையிறுக்க முடிகிறதா?

(5) மற்றவர்கள் உங்களை மறக்காமலிருக்க முடிகிறதா?

(6) நீங்கள் எங்கு சென்றாலும் மரியாதையான உழைப்பும் அதற்கேற்ற ஊதியமும் உங்களுக்குக் கிடைக்கின்றனவா?

(7) அடிக்கடி யாராவது உங்களிடம் வந்து அறிவுரையோ, ஆலோசனையோ, உதவியோ கேட்பதுண்டா?

(8) உங்களுக்கு எதிர்ப்போ அல்லது தூற்றுதலோ நேரிடும் பொழுது, உங்களது சொந்த அறிவைப் பயன்

படுத்தி அவைகளைச் சமாளிக்கிறீர்களா?

(9) "என்னுடைய முன்னேற்றத்தில் நான் திருப்தியடைந்திருக்கும் வரை, என்னைப் பற்றி மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் அல்லது நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை", என்ற கொள்கையுடையவரா நீங்கள்?

(10) உங்களை யாராவது அதிகாரம் செய்தாலோ அல்லது உங்கள் காரியங்களில், யாராவது குறுக்கிட்டாலோ நீங்கள் மனக்கசப்படைவதுண்டா?

(11) "தோல்விகள், தடங்கல்கள் இவையெல்லாம் எதிர்த்துப் போராடும் உணர்ச்சியைக் கிளப்ப உதவும் ஊக்கிகள்" என்று கருதுகிறீர்களா?

(12) உங்கள் தேவை என்ன, நீங்கள் என்ன செய்ய வேண்டும், எப்படி இருக்க வேண்டும்—என்பதையெல்லாம் நன்கு அறிந்து வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?

(13) உங்களுக்கு ஏற்படும் அனுபவங்களை ஒரு வழிகாட்டியாகக் கருதுகிறீர்களா?

(14) கடினமான காரியங்களையும், மோசமான மனிதர்களையும் சமாளிக்க முடிகிறதா உங்களால்?

(15) ஒரு நகராட்சி மன்ற உறுப்பினராகவோ தலைவராகவோ, கமிட்டி மெம்பராகவோ அல்லது ஒரு பொதுக் கூட்டத்தில் பேச்சாளராகவோ வருவதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தால் அதை வரவேற்பீர்களா?

(16) பொழுதைப் போக்க முடியாமலிருக்கும் சமயங்களில் நீங்கள் மனச் சோர்வடைவதுண்டா?

(17) ஓய்வு நேரங்களில் வேலையில்லாமல் வீட்டிலிருப்பதைவிட வெளியே சென்று நண்பர்களைக் காண்பதே சிறந்தது என்ற கொள்கையையுடையவரா, நீங்கள்?

(18) உங்கள் வாகனத்தில் செல்லும்பொழுதோ, வாழ்க்கையில் பொருள் ஈட்டுவதிலோ, அல்லது பதவி உயர்விலோ, அல்லது எந்தத் துறையிலாவது உங்களை யாராவது முந்திக் கொண்டால் நீங்கள் வெறுப்படைவீர்களா?

---

ஒவ்வொரு "ஆம்"க்கும் 5 மதிப்பெண்கள் கொடுக்கவும். 'இல்லை'க்கு மதிப்பெண்கள் இல்லை. மொத்தம் 60 வந்தால் ........நீங்கள் நடுநிலை உறுதி உள்ளவர் என்பது பொருள். அது தான் தேவை.

60–70........திருப்திகரமானது.

70க்கு மேல்........உங்கள் உறுதியைச் சிறிது நீங்கள் குறைத்துக் கொள்வது அவசியம்.

50–60........பரவாயில்லை.

50க்கும் கீழ்........மற்றவருடன் நட்புறவில் நீங்கள் அக்கறை காட்டவில்லை என்றும் நண்பர்களைத் தவிர்க்க முயல்கிறீர்கள் என்றும் தெரிகிறது.

# கடிதங்கள்

## தமிழ்மட்டும் இல்லையே !

இங்கு (இங்கிலாந்தில்) உள்ள நூல் நிலையங்களில் காணப்படும் இந்தியமொழி நூல்களுக்கான முதற்குறிப்புகள்-அட்டவணைகள் முதலியன மராத்தி, வங்காளி முதலான மொழி நூல்களுக்கெல்லாம் இருக்கின்றன. ஆனால் தமிழுக்கு மட்டும் இல்லை. லண்டன் தமிழ்க்கழகம் என்ற ஒன்று பெயரளவில் உண்டு; மூச்சுப் பேச்சில்லை. காரணம், இங்கு வரும் தமிழர்களெல்லோரும் மொழிப் பற்றில்லாத சுயநலக்காரர்களாயிருந்திருக்கலாம்; சமுதாய வளர்ச்சியும் பரந்த நோக்கமும் இல்லாதவர்களாயிருக்கலாம். எதுவாயினும் சரி; இது வேதனைக்குரிய செய்தியே...

—ஷண்முகசுந்தரம்
(M. A., M. Litt.) (லண்டன்)

## குழந்தைகள் நாள்

சென்னை மாநகராட்சி விளையாட்டு அரங்கில் பிரதமர் நேரு அவர்களின் 74-ஆம் பிறந்த நாளை முன்னிட்டு 14-11-63 அன்று கொண்டாடிய குழந்தைகள் நாள் அனைவரின் கருத்தையும் கவரும் சிறப்பு மிக்கதாகும்.

விண்வெளியில் சுற்றிவிட்டு நலமாக மீண்டதால் மனித வரலாற்றிலேயே ஒரு புதிய வழியைத் திறந்த உருசிய வீராங்கனை வாலண்டினா, நிகாலேவ் முதலியவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வரவேற்புக்கு 'வணக்கம்!' சொல்லி 'நன்றி!' என்று கூறியமை ஒரு தனிப்பெருமை தந்தது.

சென்னை மாநகர், புறநகர் மாணவ மாணவிகள் மஞ்சள், சிவப்பு, பச்சை, நீலம், வெள்ளை முதலிய வண்ணச் சீருடை பூண்டு அதேநிற மலர் சூடிப் பல்லாயிரக் கணக்கில் கூடியிருந்தனர். அவர்கள் ஐந்நூறு, ஆயிரம் என்று ஒவ்வொரு தொகுதியாக வந்து நடத்திய கும்மி, கோலாட்டம், நாட்டிய நிகழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சியே ஆகும்...

குழந்தைகள் நலம்நாடும் ஆசிரியைக் குழுவினர் பொருள் சேர்க்க உண்டி குலுக்கினர்; குறையில்லை. ஆனால், அதற்கு நினைவாக அளித்த அட்டையில் "பாரதீய பால விகாஸ் ஸமிதி பால திவஸ்" என்று அச்சிடப் பட்டிருந்தது. அதை வாங்கிப் பார்த்த பக்கத்தில் இருந்த இரு சிறுவர்கள், 'ஒன்றும் புரியவில்லையே!'' என்றது மட்டுமில்லை; அது பெரியவர்க்கும் புரியாத மொழியில் இருந்தது உண்மைதான். உள்ளத்தைக் குத்துகிறது. தமிழ்நாட்டில் பிஞ்சுக் குழந்தைகள் விழாவில் இப்படிப்பட்ட சொற்களை அச்சிட்டு வழங்குவது நினைவு அட்டையாகி மகிழ்விக்குமா? இல்லை. புண்ணிலே வேல் பாய்ச்சும்! "பாரதக் குழந்தைகள் நலக்கழகம், குழந்தைகள் நாள்'' என்னும் சொற்கள் எவ்வளவு இனியன! வேண்டுமென்றே உள்ளத்தைக் குத்திப் புண்ணைக் குடைந்து பார்க்கும் இந்தக் கல்நெஞ்ச ஆணவ வேலைவேண்டா. குழந்தைகள் தாயின் அரவணைப்பில் மலர்ந்து மகிழட்டும்.

—மனசை ப. கீரன். பி. ஏ.
(சைதாப்பேட்டை)

அட்டைப் படம் :

# ரவீந்திரநாத் டாகூர்

[ சா. கு. ]

ஜனகணமன: – நாட்டுப் பாடல்!

மகாத்மா என்று காந்தியாருக்குப் பட்டம்!

கீதாஞ்சலி என்ற உலகப் புகழ்பெற்ற கவிதைக் கொத்து!

நோபல் பரிசு: - இலக்கியத் துறைத் தொண்டுக்காக 'முதல் இந்தியர்'.

இவ்வளவுக்கும் காரணமாக இருந்தவர் ரவீந்திரநாத் டாகூர். பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த வங்காள ஜமீந்தார் குடும்பத்தில் பிறந்தவர்.

பிறந்தது 7—5—1861; மறைந்தது 7—8—1941.

கவிஞர், ஓவியர், பாடகர், நடிகர், நாவலாசிரியர், நாடகாசிரியர், பத்திரிகையாளர், தத்துவ ஞானி, பள்ளி ஆசிரியர், மேடைப் பேச்சாளர் : இவ்வளவுமாக இருந்தவர் டாகூர்.

இவரது பரம்பரையே வைதீகத்தின் வைரி. தந்தை, பாட்டன் - முதலியோர் சாதி ஒழிப்பு இயக்கமான பிரம்ம சமாஜத்தில் தீவிரமான பங்கெடுத்திருந்தவர்கள்; முஸ்லிம்களுடன் கலந்துண்ட காரணத்துக்காக பார்ப்பன சாதியைவிட்டு விலக்கப் பட்டவர்கள்.

பள்ளியில் இவர் நன்ருகப்படிக்காத காரணத்தினல் வீட்டிலேயே சமஸ்கிருதம், இங்கிலீஷ் முதலியவற்றைக் கற்பித்தார்கள். இருமுறை இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டும் பட்டம் எதுவும் பெருமலே திரும்பினுர்.

22 ஆம் வயதில் திருமணம்; 41 ஆம் வயதில் ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையாகி, மனைவியையும் இழந்தார்.

டாகூர் சாதியைக் கடுமையாக எதிர்த்தது போலவே, மேனுட்டுத் தேசீயத்தையும், காந்தியாரின் கதர்த்திட்டத்தையும் எதிர்த்தார்.

1911 டிசம்பரில் கல்கத்தாவில் கூடிய இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தான் முதன் முதல் 'ஜனகணமன' தேசீயப் பாட்டு பாடப்பெற்றது; 1950ல் இந்தியாவின் நாட்டுப் பாடலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இவர் வங்காளியிலும் இங்கிலீஷிலும் ஏராளமான நூல்கள் எழுதியுள்ளார். இவரது சிறப்பான நூல்களில் ஒரு சில:—

பாடல்கள்: — கீதாஞ்சலி; கேயா; நைவேத்தியம்; கணிகா முதலியன.

சிறு கதைகள்: —கல்பகுச்ச; லிபிகா, தின்சங்கி முதலியன.

நாவல்கள்: — கோரா; நவ்காடுபி; துயிபோன் முதலியன.

நாடகங்கள்: —சித்திராங்கதா; மாலினி; ராஜா; சந்நியாசி; தபால் ஆபீஸ் முதலியன.

இவரது பெரும்பாலான வங்காளி நூல்கள் மற்றவர்களால் இங்கிலீஷில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

சா. கு.

# பெசண்ட் அம்மையார்

## (III)

பெசண்ட் துணை ஆசிரியராயிருந்து வந்த "நேஷனல் ரிஃபார்மர்" பத்திரிகையின் தலையங்கப் போக்குப் பிடிக்காத காரணத்தினால் அதைவிட்டு விலகினார். இது பிராட்லாவுக்குப் பெரிய மன வேதனையாயிற்று. 13 ஆண்டுகளாக நெருங்கி வேலை செய்து வந்த இருவரும் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. பகுத்தறிவுப் பிரசாரத்தைக் குறைத்துக் கொண்டு சோஷலிசப் பிரசாரத்திலேயே முழுமூச்சாக இறங்கினார், பெசண்ட்.

"நான் பிராட்லாவுக்கு உதவியாக இருப்பதற்குப் பதிலாக இடையூறாக இருப்பேனோ என்ற எண்ணம் தோன்றிற்று. ஆகவே மெள்ள வழுக்கி நழுவிக் கொண்டேன்" என்று மிகுந்த மன வேதனையுடன் பெசண்ட் கூறினார்.

இதேபோல் ப்ராட்லாவும் தம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

வேலை கிடைக்காதாரின் ஊர்வலக் கிளர்ச்சியில் ஈடுபட்டு, போலீஸ் தடையை எதிர்த்தும், நீதி மன்றத்தில் வாதாடியும் கிளர்ச்சி உரிமையை நிலை நாட்டினார், பெசண்ட்.

இதற்குள் வில்லியம் ஸ்டீடு என்ற பத்திரிகாசிரியரின் நட்புக் கிடைத்தது. இருவரும் அரசாங்க அடக்குமுறைக் கொடுமைகளை எதிர்த்துப் பாமர மக்களுக்காகப் போராடுவதில் ஈடுபட்டனர். உலக மக்கள் எல்லோரும் சகோதரர்கள் என்ற பொது நோக்கு பெசண்ட் அம்மையாரைஈர்த்தது. இக் கொள்கையைப் பரப்புவதற்காக 'லிங்க்' (Link) என்ற வாரத்தாளைத் தொடங்கினார்: "மக்கள் வாய் மூடிக்கிடக்கின்றனர். இவர்களுக்காக வாதாடுவதே என் பணி. 'ஊமை' யர்களுக்காகப் பரிந்து பேசுவேன்; சிறியவர்களைப்பற்றிப் பெரியவர்களிடம் பேசுவேன்; வலுவற்றவர்களுக்காக வலிமையாளரிடம் வாதாடுவேன்". இதுதான் இவ்வாரத்தாளின் குறிக்கோள்.

### புதிய பாதை.

இதற்குப் பிறகு பெசண்ட் வாழ்க்கை முற்றிலும் புதுத்துறையில் புகத்தொடங்கிற்று. பிர்ம்ம ஞான சபையைச் சேர்ந்த மாடம் ப்ளாவட்ஸ்கி என்ற ருஷ்ய அம்மையாரின் தொடர்பு ஏற்பட்டது. மனதில் ஏதோ ஒரு குறை ஏற்பட்டிருப்பதாக உணர்ந்து, அதை நாத்திகக் கொள்கை நிறைவேற்ற வில்லை என்று கருதினார். எல்லா மதங்களின் அடிப்படைத் தத்துவம் ஒன்றே என்று கூறினார். ஆத்மார்த்த உண்மையை நாடவேண்டுமென்று எண்ணினார்.

இப்போக்கைக் கண்ட எதிரிகள் கேலி செய்தனர்; உடனிருந்து பணியாற்றிய பகுத்தறிவு வாதிகள் திடுக்கிட்டனர். சார்லஸ் ப்ராட்லாவும் தம் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் தெரிவித்தார்; ஆனாலும் நாத்திகத்

துக்கு நேர் முரணான பிர்ம்ம ஞானக் கொள்கையைக் கண்டிக்கத் தயங்கவில்லை.

அதன் கொள்கைகள்:— மத–இன வேற்றுமையில்லாமல் அகில உலக நட்பை ஏற்படுத்துவது; ஆரிய இலக்கியம் – தத்துவம் ஆகியவற்றின் அறிவை வளர்ப்பது; காரணம் காண முடியாத இயற்கை சக்திகளைப் பற்றி ஆராய்வது; இச் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தனிப்பட்ட கடவுள் (Personal God) என்ற ஒன்று கிடையாது; உருவமில்லாத ஒரே கடவுள் தான்; மதக் கருத்துக்களைப் பற்றி அவரவர்க்குத் தனிப்பட்ட உரிமை உண்டு.

''நான் ஏன் தியாசஃபிஸ்ட் ஆனேன்?'' என்ற ஒரு சிறு நூலை வெளியிட்டார். ''உண்மையைப் பின்பற்ற முயன்றாள்,'' என்ற ஒரே ஒரு வாக்கியம் மட்டும் என் நினைவுச்சின்னத்தில் பொறித்தால் போதும்,'' என்று இதில் குறிப்பிட்டுள்ளார்.

உடனே பல இடங்களிலிருந்து பெயர் தெரிந்தும் தெரியாமலும் பெசண்டுக்குத் தாராளமாக நன்கொடைகள் வந்து குவிந்தன. ஆனாலும் சோஷலிசப் பிரசாரத்தையும், கிளர்ச்சியையும் நிறுத்தாதபடி தொடர்ந்து செய்துகொண்டிருந்தார். லண்டனில் பல தொழிற் சங்கங்களைப் புதிதாக உண்டாக்கினார். பஸ்ஸிலும் படித்தார்; ட்ராமிலும் படித்தார். ரயில் வண்டியிலும் படித்தார். இடைவிடாது எந்நேரமும் படித்துக் கொண்டேயிருந்தார்..

பலமான கருத்து வேற்றுமைக்கிடையிலும்கூட, ப்ராட்லாவும் பெசண்ட்டும் இறுதிவரையில் நெருங்கிய நண்பர்களாகவே இருந்தனர். 1889 ல் ப்ராட்லா திடீரென்று மறைந்தார்,

பெசண்ட் அம்மையார், லெட்பீட்டர், சின்னெட், கர்னல் ஆல்காட் போன்ற பெரிய பிர்ம்ம ஞானத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார்.

## இந்தியா வருகை

பிறகு 1893 நவம்பர் 16 ல் இந்தியாவுக்கு முதன் முறையாக வந்தார். சென்னைக்கருகிலுள்ள அடையாறு என்னும் பகுதியில் மாடம் பிளாவட்ஸ்கியும், கர்னல் ஆல்காட்டும் பிர்ம்மஞான சபையின் தலைமை நிலையத்தை நிறுவி, அங்கிருந்து உலகம் முழுவதும் இவ்இயக்கத்தைப் பரப்பிக் கொண்டிருந்தனர். பெசண்ட் அம்மையார் இங்கு வந்து தங்கி அவ் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு இயக்கத்தின் "தாயார்'' ஆனார். விரைவில் அதன் தலைவராகவும் பதவியேற்றார். பகவத் கீதையை இங்கிலீஷில் மொழி பெயர்த்தார்.

## அரசியல் நுழைவு

இச்சமயத்தில் இந்தியாவில் விடுதலை இயக்கம் முழு வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. பெசண்ட் அம்மையார் இதில் கலந்து கொண்டு இந்தியாவுக்கு சுய ஆட்சி (Home Rule) வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார். அப்பெயராலேயே திலகருடன் சேர்ந்து ஒரு தனி சங்கத்தையும் தொடங்கினார். ''நியூ இந்தியா''; ''காமன் வீல்" முதலியன பெசண்டின் பத்திரிகைகள்.

நாடெங்கும் சுய ஆட்சிக் கிளர்ச்சி வலுப்படவே பிரிட்டிஷ் அரசாங்கம் பெசண்டையும் அருண்டேல் – வாடியா ஆகிய கூட்டுத் தோழர்களையும் சிறைப்படுத்தியது. (11-6-1917)

இந்தியா முழுவதும் கொந்தளித்து எழுந்தது. நாடெங்கும் மாபெரும் கிளர்ச்சிகள் குமுறி எழுந்தன. அரசாங்கம் அடி

பணிந்தது. மூன்றே மாதங்களில் மூன்று தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். சுய ஆட்சி வித்து முளை கண்டு விட்டது. ஆனாலும் 30 ஆண்டுகள் கழித்துத்தான் (1947) பிரிட்டிஷ் ஆட்சி வெளியேறியது. பாவம்! பெசண்ட் அம்மையார் இருந்து கண்டுகளிக்கவில்லை!

சிறையிலிருந்து விடுதலையானதும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவி அம்மையாரைத் தேடிவந்து சேர்ந்தது. காங்கிரசின் பிரசாரம் தீவிரப்பட்டது. இச்சமயம் காந்தியார் காங்கிரசில் செல்வாக்குப் பெற்ருர்; ஒத்துழையாமை — சட்ட மறுப்புத் திட்டங்களை மேற் கொண்டார். இவைகளை ஆதரிக்க முடியாத பெசண்ட் காந்தியாரைக் கடுமையாக எதிர்த்தார். ஆனல் அம்மையாருக்குப் போதுமான ஆதரவு கிடைக்கவில்லை. (காங்கிரசின் மூவர்ணக் கொடியை முதன் முதல் அமைத்து ஏற்றி வைத்தவர் பெசண்ட்தான்).

ஆதலால் அரசியலைக் காட்டிலும் பிறதுறைகளில் மிகுந்த அக்கரை கொள்ளலானுர். காசியில் சென்ட்ரல் ஹிந்து கல்லூரியை நிறுவினுர். பிறகு அது பல்கலைக் கழகமாகவே வளர்ந்து விட்டது. கல்வித்துறையில் மேலும் மேலும் தீவிரமாகப் பணியாற்றவே பல லட்சக்கணக்கில் மன்னர்களும், குறுநில மன்னர்களும், வெளிநாட்டுச் செல்வர்களும் பெசண்ட் அம்மையாரிடம் நன்கொடைத் தொகையை மலைமலையாகக் குவித்தனர். "கல்வித்துறை டாக்டர்" பட்டம் பெற்ருர், அம்மையார்.

## புதிய சிக்கல்

இரு தமிழ்நாட்டுப் பார்ப்பனச் சிறுவர்களை தம் சபைக்குக் கொண்டு வந்து, அவர்களில் மூத்தவரான கிருஷ்ணமூர்த்தி என்பாரை, "வருங்கால உலக குரு" என்று விளம்பரப் படுத்தினுர். (ஆனல் நாளடைவில் இவர் பெசண்ட் அம்மையாரின் மதப்பற்றையும் பிரம்ம ஞான சபையின் மூடு மந்திரங்களையும், மூட நம்பிக்கைகளையும் கடுமையாகத் தாக்க ஆரம்பித்து விட்டார். இன்றும் இதே பணியைத் தான் உலகெங்கும் சென்று செய்துகொண்டிருக்கிருர்). முதலில் இருமக்களையும் பெசண்டிடம் கொடுக்க இசைந்த இவர்களது தந்தை, பிறகு அம்மையார் மீது வழக்குத் தொடர்ந்தார். வழக்கம் போல் பெசண்ட் தாமாகவே வாதாடி, இரு நீதி மன்றங்களில் தோல்வியுற்று, இறுதியாக லண்டன் உயர்நீதி மன்றத்தில் (ப்ரீவி கவுன்சில்) வெற்றி பெற்ருர். சிறுவர்களின் (வயது 18 ம் 15 ம்) பிரியத்தைக் கேட்காமல் அவர்களை வெறும் மூட்டைகளாகக் கருதிக் கொண்டு தீர்ப்புக் கூறுவது தவறு என்றும், இருவரும் தந்தையிடம் செல்ல இசையவில்லையாதலால், பெசண்ட் இடமே இருக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

## ஒப்பற்ற உலகப் பெண்ணரசி

இவ்வாறு பல துறைகளிலும் இடைவிடாத போராட்டம்! ஊக்கம் குன்ருத உழைப்பு! ஒலி பெருக்கியில்லாத அக்காலத்தில் ஏறத்தாழப் பத்தாயிரம் மக்கள் தெளிவாகக் கேட்கும்படியாக வெண்கலக் குரலுடன் பேசக் கூடிய ஒரே மேடைப் பேச்சாளர், பெசண்ட்! எதற்கும் அஞ்சாத உலகப் பெரியார்களில் ஒருவர்! பெண் இனத்தில் முதன்மையானவர்! அமைப்பு வேலையில் தனித்திறமை வாய்ந்தவர்.

இந்திய பத்திரிகாசிரியர்களுக்கெல்லாம் வழி காட்டி! எப்படி? அரசாங்கத்தின் கேடான நடத்

தைகளைக் கடுமையாகத் தாக்கி எழுத வேண்டும்; ஆனால் சட்டத்துக்குள் சிக்கிக் கொள்ளக் கூடாது. கடுமையாக; ஆணித்தரமாக; ஆதாரங்கொண்டதாக; ஆனால் தீய எண்ணத்துடன் தாக்குதல் இல்லாமல் — ''லண்டன் டைம்ஸ்'' மாதிரித் தலையங்கம் எழுத வேண்டும் என்பதற்கு, வழிகாட்டியாக இருந்தார், பெசண்ட்.

''பெசண்ட் பேச்சைக்கேட்டு கற்கள் கண்ணீர் விடும்! மாண்டவர் மீண்டெழுந்து செயலாற்றுவர்", என்று கூறுவதுண்டு. ஆண்களோ, பெண்களோ, எவரும் இதில் இவருக்கு ஈடு-இணை இல்லை.

இந்தியாவில் இறங்கியது முதல் இந்துவாகவே வாழ்ந்தார்! உண்ணும் முறையில்! உடையில்! பழக்க வழக்கத்தில்! எல்லாவற்றிலும். ஆகவே வைதீகத்தின்-அக்கிரகாரத்தின் - ஆதரவு அமோகமாகக் கிடைத்தது. நீதிக் கட்சியையும் எதிர்த்துப் போராடினார். இந்தியாவில் கிடைத்த வெற்றிக்கும், புகழுக்கும் இதுவும் ஒரு காரணம்!

47 ஆவது வயதில் இந்தியாவுக்கு வந்த பெசண்ட், ஆயுள் முடிவு வரையில் இதையே தம் தாய்நாடாகக் கொண்டிருந்தார். இந்திய சாரணர் இயக்கத்துக்கும் தாயானார்.

மாதந்தோறும் பல லட்சக் கணக்கான ரூபாய் நன்கொடையாக வந்து கொண்டேயிருக்கும். பல பாங்குகளில் கணக்கு வைத்திருப்பார். ஆண்டு முடிந்ததும் எல்லாப் பணத்தையும் கல்வித் துறைக்குச் செலவிட்டு விடுவார்! உலகெங்குமிருந்து எத்தனையோ கோடி ரூபாய் வந்தது; ஆனால் தமக்கென்று இருந்த சொந்தச் சொத்து, அல்லது பணம், சுன்னம்!

> ''பணத்தை ஒரு உடைமையாகக் கருதாமல், சேவைக்குரிய சாதனமாகக் கருதுவாயானால் உனக்குப் பணத்தேவை என்பதே இருக்காது,"

என்று அடிக்கடி கூறுவாராம்!

இப்படிக் கருதும் பொதுஜனப் பெருந் தலைவர் இன்று இந்நாட்டில் ஒருவராவது உண்டா, பெசண்ட்டுக்குப் பிறகு? காந்தியாருக்குப் பிறகு?

பெசண்டின் வாழ்க்கை மாற்றம்—கொள்கை மாற்றம்—எப்படியிருந்த போதிலும், எடுத்த காரியத்தைத் தனித்துணிவுடனும், முழு முயற்சியுடனும், செய்வதில் பெசண்ட் அம்மையார் ஒப்புயர்வற்றவர்!

இன்னொரு பெசண்ட் எப்போது? எங்கே?

---

*''எவ்வளவு பெருமைவாய்ந்ததாயினும் சரி—வீரச் செயல் எதையும் விட துன்பத்தை சகித்துக் கொள்ளும் சக்தியே மனிதனுடைய உயர்குணத்திற்குரிய சிறந்த சோதனையாகும்.''*

—ஆவ்பரி

# முறித்திடுவோம், ஜாதியை!

[தமிழாக்கம் : ப. திருவேங்கடம்]

[பிரிஜேஷ் கே. வர்மா — Anthropologist, Indian Statistical Institute Calcutta என்பவரால் அமிர்தபஜார் பத்திரிகையில் (கல்கத்தா) மார்ச் 1963-ல் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம்.]

[இந்நாட்டு நிற (பிறவி) வேற்றுமையைக் கண்டிக்காமல், பிறநாட்டு நிறவேற்றுமையைக் கண்டிப்பது மாபெரும் போலித்தனம்; கேலிக்கூத்து. சாதி ஒழிக்கப்படாத வரையில் தீண்டாமை ஒழியாது; மக்கள் ஆட்சி (ஜனநாயகம்) என்பதும் நீடித்து நிற்காது. சாதி ஒழிப்புத் தலைவர்கள் என்பவர்களோ அக்கொள்கையை உதறித் தள்ளிவிட்டு, தமக்குப் பிறகும் தம் கட்சிக்கும், பொதுச் சொத்துக்கும் தம் குடும்பத்தாரே, தம் சாதியாரே, வாரிசு ஆகவேண்டும் என்கின்றனர். ஆளும் கட்சியாருக்கும் சாதி ஒழிப்புபற்றிக் கவலையில்லை; இதைச் சுட்டிக்காட்டுகிறது, இக்கட்டுரை.]

"இந்தியன், குறிப்பாக இந்து என்றழைக்கப்படுவோன், தன் சுயசிந்தனையின் துணைகொண்டு முன்னேற அறியாதவன்" - என்று மேலை நாட்டவுக்ளே என்பார் இடித்துரைக்கிருரே — இதில் ஏதாவது உண்மை இருக்கக் கூடுமா?

அதோடு. "இந்து மத தத்துவத்தில், முன்னேற்ற நோக்கம் அறவே கிடையாது" - என்றும் சாடுகிருரே - அதற்கும் நம்முடைய பதில் என்ன?

இம்மாதிரியான பிரச்னைகள் நம் சிந்தையைக் கிளறியே தீரும். ஆம்! நமது முன்னேற்றம் கூர் மழுங்கியதாகவும், தட்டுத் தடுமாறி தேக்க நிலையடைவதாகவும், போலியாகவுந்தான் தோன்றும். குற்றம் யாருடையது? பழி யார் மீது? சாதி முறை தான் அதற்கு முழுப் பொறுப்பு. சாதி நிலைக்கு மட்டும் இந்துக்களின் முன்னேற்றம் குதிரைக் கொம்பே!

சாதிப் பாகுபாட்டால் விளைகிற விபரீதம் என்ன? கணக்கற்ற குலங்கள், குலவழி கோத்திரங்கள், யாவருக்கும் உயர்வாகக் கருதும் புரோகிதக் கூட்டம், ஒட்டு உறவு அற்ற மக்கட் கும்பல் - இப்படிப் பலவாருகப் பிரிந்து சிதறி நிற்கும் நிலையை உருவாக்குவதுதான் சாதியின் தொண்டு!

இந்துக்களிடையே எவ்வித வேற்றுமை மனப்பான்மையுமின்றி, நெருங்கியுண்ணும் தன்மைக்கும் வேலி போடுகிறது சாதி.

இயற்கையில் நிகழ வேண்டிய இரத்தக் கலப்பிற்கு, அதாவது, கலப்பு மணத்திற்கு தடை விதிக்கிறது சாதி.

'குலத் தொழில்', குலத் தொழில் என்று கூறி, தொழில் மாற்ற நாட்டங்களுக்கும் தாழிடு கிறது சாதி.

தத்தமது உயர்வு நிலையை எவ் வகையானும் மாற்றி அமைத்துக் கொள்ளலாம், உயர்வு காண லாம், என்ற முயற்சிக்கும் முற் றுப் புள்ளி வைக்கிறது சாதி.

ஆக, இந்து சமூக மக்களின் உள்ளங்களிலே, பொருமைக் கனலை மூட்டி, தீய போட்டி மனப் பான்மையை எழச் செய்து, ஒரு வரோடொருவர் சண்டையிட்டு, வெட்டி வீழ்த்திடும் செயலைத் தான் இந்தச் சாதி செய்ய வல் லது!

## அவமானம்

"ஒவ்வொரு படியிலுள்ள சாதி இந்துக்கள் தத்தமது அதிகார வரம்புகளைப் பற்றியும், உரிமைப் பிரச்னைகளைப் பற்றியும், ஆவேச எழுச்சியுடன் சண்டையிட்டு மடி வது ஒரு பெரிய கேலிக் கூத்தா கும். சண்டைகளின் மூலக் கார ணங்களை அறிந்தால் வேடிக்கை யிலும் வேடிக்கையாக இருக்கும்!

"அவனுக்கென்ன ஆணவம் என் எதிரில் செருப்பு அணிந்து வர?"

"அவன் கெட்ட கேட்டிற்கு பல்லக்கு ஊர்வலமா?"

"இவனுக்கு குதிரைச் சவாரி ஊர்வலமா?"

"எம் ஊர்வலத்தில் அவன் மேளம் தட்டலாமா?"

"இத்தகு புனித விழாவிற்கு அந்த நாட்டு வாத்தியம் உத வுமா?"

"இந்த வண்ணமுடைய, இந்த வடிவுடைய கொடியைக் கட்டுவது தான் எம் குல வழக் கம்; அதைத் தடுக்க நீ யார்?"

இப்படி அற்பக் காரணங்களுக் காக, மண்டையுடை போராட் டங்களும், கழுத்தறுப்புச் சதிக ளும், சண்டைகளும், சடுதியில் மூண்டு விடும்"-என்று நெஸ் ஃபீல்டு என்பார் எழுதியிருக்கி ருர்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள், முன் பிருந்ததைப் போல், அவ்வளவு மோசமாக இன்றைய நாட்களில் இல்லாமல் இருக்கலாம். ஆனு லும் சாதி வேற்றுமையை இன் றும் பாராட்டிக் கொண்டு தானே வருகிருேம்?

ஒவ்வொரு சாதியும் ஒவ்வொரு தர்மத்தின் அடிப்படையில் தோன்றியுள்ள தென்ருல், இந்து தர்மம் என்று எதை அடையாளங்கண்டு கூறுவது? இந்துக் கொள்கையென்று ஒன்று உள்ளபடியே நிலவு கிறதா? அல்லது கேவலம், சாதிக் கோட்பாடுதான் இந்துக்களின் மதமா? அது போது, "சாதியின் கட்டு திட்டங்கள் மிக மிக முனைப்பு வாய்ந்தன. அவைகளை மீறி அன்னியன் எவனும் இந்து மதத்தில் நுழையவே முடியாது" என்று ரிஸ்லே என்பார் கூறு வது முற்றிலும் உண்மையல் லவா?

சாதி மதக் கோட்பாடுகளே, அதாவது, வர்ணுசிரம தர்மமே, இந்து தர்மம் என்பதாக ஆகிவிட் டது. சாதிகளுக்கேற்ற கடவுள் கள் என்பதாகவும் பிரிவினை ஏற் பட்டு விட்டது. கீழ்ச்சாதி மக் கள் உயர் சாதி இந்துக் கடவு ளின் தரிசனத்தைக் கூட காண முடியாது என்ற நிலையும் உண்டு [உதாரணம்: நந்தனும் நடராசரும்.]

## இன ஒற்றுமை எங்கே?

சாதி முறையை அனுசரிக்கும் சாதி இந்துக்களுக்கு "பிறப்

பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற தத்துவம் கசக்கும். பிறப்பிலேயே வேற்றுமை கற்பிப்பார்கள். ''சாதியந்த புத்தி; குலமந்த ஆச்சாரம்'' என்று வேதாந்தம் பேசுவார்கள். ஆனால் பகுத்தறிவுவாதி அப்படியல்ல. அவனுக்கு "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்'' - என்கிற பரந்த நோக்க முண்டு. உயர்வு தாழ்வு என்பது அவனவனது செய் கருமத்தாலும், தியாகத்தாலும், எண்ணத்தாலும் அமைவதேயன்றி பிறப்பால் அல்ல என அறிந்துரைப்பான்.

உலகில் தோன்றிய ஏனைய மதங்களெல்லாம் பொதுநல அடிப்படையில் அமைந்துள்ள போது, இந்து மதம் மட்டும் சுய நலத்தையே மையமாகக் கொண்டு கிளம்பிற்று. அப்போது உலக மதங்களில் இந்து மதம் கடை நிலையுற்றது என்பதில் தப்பென்ன?

இந்துக்கள் என்போர், சாதியின் பெயரால், நெல்லிக்காய்களாகச் சிதறுண்டு தனித்து, தனித்து நிற்கிற வரையில், அவர்களிடையே ஒற்றுமையோ, ஒழுக்கமோ, நாணயமோ ஏதும் எதிர்பார்க்க முடியாது. அத்தகு நிலையில் ''இந்து கலாசாரம்'' என்பது ''காட்டுமிராண்டித் தனமா''கவே பரிமளிக்கும்.

சாதிப்பாகுபாட்டின் காரணமாகவே, பல நூற்றுண்டுகளாகியும், இந்துக்களிடையே தேசிய மனப் பாங்கு தோன்றவே முடியாமற் போய்விட்டது. எனவே, ரிஸ்லே என்பார் எடுத்துரைப்பதே போல், இந்து சமூகத்தினிடையே தேசிய அமைப்பு, இன ஒற்றுமை, தேசப்பற்று, என்பன போன்ற சீரிய அம்சங்கள் மருந்தளவேனும் இல்லாமல் போய் விட்டன. அன்னியர் வந்து இங்கு புகுகின்ற வேளையிலும், நம் நாட்டு மக்கள், நாட்டுப் பற்று மேலோங்க எழுச்சி கொண்டு அவர்களை எதிர்த்து விரட்டினார்கள் இல்லை. வெட்கித் தலை குனிந்திடும் வகையில், சாதி - சாதிப்பற்று என்றே வாளாகக் கிடந்து, வந்தவனுக்கு வழி வகுத்து அடிமையானார்கள். சாதியை எவன் ஒருவன் மிக மிக ஏற்றிப் போற்றி ஒழுகுகிறானோ அவனே ''உத்தமன்'' என்பதாகக் கருதப்பட்டது. நாடு, நாட்டு மக்கள் என்பன போன்ற உணர்வெல்லாம் சாதிக்குப் பிறகுதான்.

## மக்கள் ஆட்சியா?

இப்படி சாதீ முறையால், சாதிப்பற்றுத் தான் உயர்வான தியாகம் என்றால், தேர்தல் காலங்களில், வாக்காளன், ''என் சாதி வோட்டு, அன்னிய சாதியானுக்குக் கிடையாது''- என்று முழங்குவதில் விந்தையேது? அத்தகு சூழ்நிலையில் சாதி நலத்தை நீக்கி, நாட்டு நலம் எப்படி மேலோங்கி நிற்கும்? விளைவு? நாடு சீர்கெட்டு, நாமும் சீரழிந்து போக வேண்டியது தானே? நம் நாடு, நம் நாட்டு மக்கள், நம் நாட்டுச் சுதந்தரம் எல்லாம் பாழ்! பாழ்!! அதோடு, சாதிப் பாகுபாட்டால் மக்கள் தத்தமது உரிமைகளையும் பறிகொடுத்து, மானமிழந்து, மரக்கட்டைகளாய் வாழவேண்டி வருமேயல்லாது, முன்னேற்றங் காணவா இயலும்? இயலாது! இயலாது!! ஒருக்காலும் இயலாது!!!

சனநாயகத்தின் பலனை முழுமையாக அடைய வேண்டுமானால், சனநாயகக் கொள்கைக்கு நேர் முரணான சாதி அடியோடு தொலைந்தொழிய வேண்டும். மக்களிடையே மண்டிக் கிடக்கும்

ஏனோ தானோ என்ற போக்கும், சாதிக்குள் சாதி வெட்டு குத்து என்கிற நிலையும் சனநாயகத்திற்கு முற்றிலும் முரண். எனவே. சனநாயகப் பயிர் தழைத்தோங்க வேண்டுமானால், சாதிக்களையைப் பிடுங்கி எறிந்தே ஆக வேண்டும்.

ஒரே சமுதாய மக்களுக்குள் ஏற்றத் தாழ்வு கற்பித்தல் மடமையிலும் மடமை என்று வெறுத்துத் தள்ளல் வேண்டும். மனிதராய்ப் பிறந்த யாவரும், ஒருவருக்கொருவர் சமமே என எண்ணுதல் வேண்டும். இந்திய சனநாயகத்தில், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம் மேலோங்கி நிற்கும்படியான புது சமுதாயத்தைச் சமைக்கப் பாடுபடல் வேண்டும்.

உலகில் எந்த மூலையிலாவது இனத் தகராறுகள் மூண்டால், அங்கெல்லாம் நம் கவனங்களைப் பாயவிட்டு கண்டிக்கத் தயங்குவதே இல்லை. ஆமாம்! ஊருக்கு உபதேசிப்பதும், தகராறு தீர்க்கும் அரியாசனத்தில் இந்தியாவைஅமர்த்தி "குரு உபதேசம்" செய்வித்தலிலும் நாம் ஒருபோதும் தயங்கவே மாட்டோம்! ஆனால் நமது உள் விவகாரம்???

"தென் ஆஃபிரிக்கா வாழ் இந்திய குடிகளுக்கும், கென்யா வாழ் இந்தியக் குடிகளுக்கும், ஆங்கே இந்தத் தண்ணீரைத் தொடாதே; அந்த விளக்கொளியைப் பயன்படுத்தக் கூடாது; இந்தப் பொதுவழியில் நடக்கக் கூடாது; அந்தப் பள்ளியில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள முடியாது; இந்தப் பொதுக் கூடத்தில் நுழைய அனுமதி கிடையாது—என்றெல்லாம் இன்னல்கள் சூழ்கின்ற போது, இந்தியாவினின்று எழும் கண்டனக் குரல்களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் அளவே கிடையாது! ஆனால்...அதே இந்தியாவில், தாழ்ந்த சாதி மக்களாகக் கருதப்படும் ஐந்துகோடி மக்களுக்கு சாதிக் கொடுமையால், பற்பல இன்னல்கள் வந்துற்ற போதும், ஆஃப்ரிக்காவுக்குக் குரல் கொடுத்த வாய்கள் மூடிப்போகின்றனவே ஏன்?..." என்று சர். மைகேல் ஒட்வையர் என்பார் அறைகிறாரே, அவருக்கு என்ன பதில் சொல்லக் கூடும் நாம்?

## வேற்றுமை

இனவேற்றுமையைவிட சாதி வேற்றுமை பன்மடங்கு கொடுமையானதும் பயங்கரமானதுமாகும். இந்தியாவில் கீழ்ச்சாதி மக்களுக்கு மேற்சாதி மக்களால் இழைக்கப்படும் அநீதிகளும், கொடுமைகளும், கிழக்கிந்தியர்களுக்கு அங்குள்ள வெள்ளையர்களால் விளையுந் தீங்குகளைக் காட்டிலும் பல மடங்கு தீமையும், அநியாயமும் பொருந்தியவையாகும்.

கொச்சியிலுள்ள தீண்டாதவனுக்கு, சாதிச் செருக்கால் மறுக்கப்படும் மனித உரிமைகள், தென் ஆஃபிரிக்கா வாழ் இந்தியனுக்கு மறுக்கப்படும் மனித உரிமையைவிட மிக மிக மோசமானவை என்று காந்தி அடிகளே ஒருமுறை கண்டித்துள்ளார்.

தென் ஆஃபிரிக்காவில் இந்தியர்களுக்கிழைக்கப்படும் நிற வேற்றுமைக் கொடுமைகளைக் கண்டு எல்லா இந்துக்களும் வெள்ளையர்பால் கொதித்தெழுகிறார்கள். இதில் மட்டும் நமது இன உணர்ச்சி, மான உணர்ச்சி பொங்கி எழுகிறது. ஆனால் நமது சமுதாயத்தை, சாதியற்ற, சம உரிமையோடு கூடிய சமூக

மாக மாற்றிடுவோம் வாரீர், என்ருல் வளையில் ஓடி ஒளியும் நண்டுகளாய் மாறிவிடுகின்றனரே ஏன் ?

இன்றைய நிலையுணர்ந்து, இனியேனும், இந்து சமூகத்தைச் சீர்திருத்திப் பயன் பல அடையுமாறு செய்ய முனைந்திடுவோமாக. இன்றைய உலகம் புதுமை நிறைந்தும், விண் முட்டும் அளவு முன்னேறியும் திகழ்கின்றது. காட்டு மிராண்டிக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட அதே சாதி முறையை இன்றும் கட்டி அழுவது அறிவிற்கு ஒவ்வாச் செயலாகும். தற்காலத்திற்கேற்ற பழக்க வழக்கங்களை மேற்கொண்டு, பகுத்தறிவிற்கு ஏற்ற சட்டங்களை வகுத்துக்கொண்டு, புதுப் புது கருத்துக்களுக்கும், புதுப் புது எண்ணங்களுக்கும் ஊக்கமளிப்போமாக. புத்துலகைச் சமைத்திடுவோமாக.

சனநாயகம் என்பது ஆட்சி முறையோடு நின்று விடாமல், நமது வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் ஊடுருவி, அறிவு முன்னேற்றத்திற்கும், மனவள மேம்பாட்டிற்கும், அவரவரது விருப்பத்திற் கொப்ப முயற்சியின் துணை கொண்டு எந்தத் துறையிலும் சிறந்து வாழ்வதற்கும் — வழி கோலட்டும்.

பிறந்து விட்டோம் என்ற காரணத்திற்காக, பிறந்த சாதியையே பிடித்துக் கொண்டு பாழ்பட்டுப் போகாமல், சாதியும் வேற்றுமையும் வேண்டாம் என வெகுண்டெழுந்து, சாதியற்ற —சாதிபேத மற்ற — சமுதாயத்தை உருவாக்க முயல்வோமாக.

இந்து சமூகத்தின் வயிற்றிலே சிக்கிக் கொண்டு வாட்டிடும் சாதியென்னும் சீரணிக்க முடியாத கல்லை, எந்த விலை கொடுத்தேனும் நீக்கிடல்வேண்டும். ஓயாத சாதிப் பூசல்களையும், சாதிப் பிணக்குகளையும் மாய்த்திடல் வேண்டும். சாதி வேற்றுமை பாராட்ட மாட்டோம்; ஆனால் சாதி முறை இருந்துவிட்டுப் போகட்டும்; என்ற வாதம் முக்காலத்திற்கும் பொருந்தாத வாதமாகும். சாதியை சல்லிவேர், ஆணிவேர் உட்பட அறவே கல்லி எறிய வேண்டும். மீண்டும் தலை காட்டாதவாறு அடியோடு ஒழித்தாக வேண்டும்.

சாதி ஒழிக! சமதர்மம் தழைத்திடுக!

*"மரணப் படுக்கையில் தன் செய்கைகளுக்கு மனம் வருந்தி மன்னிப்புக் கோருபவனுக்கு மறுமையில் இன்பம் நிச்சயம் என்கிறது மதம். ஆனால், பின்னால் என்றுமே இரங்க வேண்டாத வகையில், இன்று வாழ்க்கை நடத்துபவனுக்கு இவ்வுலகத்திலேயே கைமேல் பலனாக இன்பம் கிடைப்பது உறுதி என்கிறது, நாத்திகம்."*

—சார்லஸ் ப்ராட்லா.

# டில்லி மக்கள்

—( சாலை இளந்திரையன், எம்.ஏ., எம்.லிட். )—

(11)

*[நல்லதையும் கெட்டதையும் நகைச்சுவையோடு சொல்ல முடியும் - இது ஒரு தனிக்கலை; எல்லோராலும் முடியாது. இடுக்கண் வருங்கால் நகுதல் வேண்டு மல்லவா? ஆனால் எல்லோராலும் முடிகிறதா? டில்லி மக்கள் வாழ்க்கையின் நிறை - குறை இரண்டையுமே சிரிக்கச் சிரிக்க படம்பிடித்துக் காட்டுகிறார், கட்டுரை யாளர். தமிழ்நாட்டைவிட்டு வெளியே சென்றிராத மக்களுக்கு இந்த இரு கட்டுரைகளும் தனிச்சுவை தரு கின்றன; இந்நாட்டு மக்களின் பழக்க வழக்க வேற் றுமைகளைக்காட்டுகின்றன. மக்களின் சிற்சில இயற்கை இயல்புகளை மாற்றவே முடியாது என்பதற்கு இக் கட்டுரை சிறந்த எடுத்துக் காட்டு.]*

*சரி நிகர் சமானம்*

வாழ்க்கை நோக்கங்களில், டில்லி மக்கள் மூச்சுப் பிடிக்க முடியாத ஆழத்தில் முங்குவதுமில்லை; நீந்தமுடியாத நீள அகலங்களை நினைப்பதுமில்லை. 'உண், உடு, படு, எழு இவற்றுக்காக ஏதாவது செய்'—இதுவே இங்குள்ள பெரும்பாலாரின் வாழ்க்கைத் தத்துவம். சான்றாக, ஆசிரியரில் மிகப்பெரும்பாலார்க்குச் சம்பளத்திலேயே கண்; மாணவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற் றொன்பது பேருக்குத் தேர்வே நோக்கம். எதிலும் தத்துவக் கனமுள்ள சிந்தனை இல்லை. அதனால் எதிலும் சம்பிரதாயங்கள், வரம்புகள் என்பன பொதுவாக இல்லை. பெரியவர்கள் வந்தால் எழுந்து மரியாதை செய்ய வேண்டும், யாரிடமும் எதையும் இடது கையால் வாங்கக் கூடாது என்பன போன்ற சம்பிரதாயங்கள் நம் ஊர்களில் உண்டல்லவா? அப்படி ஒன்றும் இங்கே கிடையாது. நம் நோக்கில், விற்பனந் தெரியாத இளம் பிள்ளைகளாகவே இங்குள்ளவர்கள் காட்சியளிக்கின்றார்கள்.

பாருங்களேன்; ஒரு சைக்கிளில் இரண்டு பேர் அல்லது மூன்று பேர் போவார்கள். அவர்களில் சைக்கிள் ஓட்டுகிறவன் ஆண்; முன்னாலும் பின்னாலும் இருப்பவர்கள் அவனுடைய தாய், மனைவி, வயது வந்த தங்கை அல்லது தெரிந்த யாராவது, ஒரு பெண்ணாக இருப்பார்கள். இதில் அவர்கள் வேற்றுமை பாராட்டுவதில்லை. அதாவது, ஆண்-பெண்கள் தொட்டுப் பழகுவது எந்த வயதிலும், எந்த உறவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. நம் ஊரில் இன்றைக்கும் பஸ்களில் பெண்ணோடு பெண்ணே உட்காருவாள்; ஓர்

ஆடவன் உட்கார நேர்ந்தால், அருகிலுள்ள பெண்ணைத் தொட்டுவிடாதபடி எச்சரிக்கையாகவே உட்காருவான். ஏன், பஸ்ஸில் ஏறும்போது, எவ்வளவு கூட்டம் இருந்தாலும் ஆண்-பெண்கள் ஒருவர்மேல் ஒருவர் உராய்வதில்லையே. இப்போதும் தமிழகத்து வெளியூர் பஸ்களில் பஸ் புறப்படும் சமயம் சிலபோது 'அந்த அம்மாளோடே சேர்ந்த ஆள் யாரையா? அங்கே போய் உட்காருங்க' என்று கண்டக்டர் கேட்டுக் கொள்வதைக் கேட்கலாம். ஓர் இருக்கை (சீட்)யில் ஒரு பெண் உட்கார்ந்து, அவளுடன் உட்கார வேறு பெண்கள் இல்லையென்றால், அந்தப் பெண்ணோடு அவள் கணவனை அல்லது உறவினரை அழைத்து உட்கார வைக்கிறார்கள். அப்படி யாரும் உடன் வந்திராவிட்டால், அருகில் உட்காரும் ஆடவன் ஒதுங்கி ஒடுங்கி உட்காருகிறான். இங்கே இந்த மாதிரியாகப் பெண்களை ஒதுக்கி வைப்பதே கிடையாது. ஏன், கண்டக்டர்களே பெண்களின் தோளில் தட்டிக் கூப்பிட்டுத்தான், 'எங்கே போக வேண்டும்' என்று கேட்டு டிக்கட்டு கொடுக்கிறார்கள்!

'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என்று நமது கவிஞர் பாடினாரல்லவா? அந்த விந்தை மனிதர்கள் இங்கே எப்போதுமே இருந்ததில்லை என்று தெரிகிறது. தமிழகத்தில் அந்த விந்தை மனிதர்கள் இன்னும் இருக்கிறோம்: எவ்வளவு புழுக்கக் காலமானாலும் நமது பெண்களைத் தெருவில் வந்து படுக்க விடுகிறோமா? இங்கே அப்படி இல்லை. வெயிற் காலத்தில் எந்த வயதுப் பெண்ணும், மற்ற ஆண்களோடு தனக்கொரு கட்டில் போட்டுக் கொண்டு, தெருவில் அல்லது வீட்டில், மொட்டை மாடிகளில் படுத்துக்கொள்கிறாள்.

பெண்கள் பொதுவாக சல்வார் என்னும் முழுக்கால் சட்டையும், கமீஸ் என்னும் ஜிப்பா போன்ற உடம்புக்குப் பிடிப்பான நெடுஞ்சட்டையும் அணிகிறார்கள். ஒரு மெல்லிய, அகலம் குறைந்த நீளத் துண்டைக் கழுத்தில் போட்டுக் கொள்கிறார்கள். அது சரியான மேலாடை அல்ல; அதை மேலாடையின் நோக்கத்தோடு அவர்கள் அணிவதுமில்லை. எங்கேயும் போலவே, கல்லூரிப் பெண்கள் இந்த ஆடைகளிலும் தங்கள் சிக்கனத் திறன் காட்டுகிறார்கள்!

படித்தவர்களில் பெரும்பாலார் (ஆண்கள்) இப்போது கால் சட்டை போட்டுக் கொள்ளுகிறார்கள். எனக்கு எப்போதுமே வேட்டி உடுத்துக் கொள்ளுகிறவர்களைப்பற்றிய ஓர் உயர்ந்த எண்ணமும் கால்சட்டை மாட்டிக் கொள்ளுகிறவர்களைப்பற்றி, "விற்பனந் தெரியாத சிறுபிள்ளைகள் மாதிரி" என்ற எண்ணமும் உண்டு. பித்தான் போட்டு மாட்டிக் கொள்வதும் கயிறு போட்டுக் கட்டிக் கொள்ளுவதும் உடம்பில் 'ஓர்மை'யில்லாத சிறுபிள்ளைகள் செயல் என்பது என்கருத்து. எப்போதும் சண்டைக்குத் தயாராக இருப்பவர்கள் போல இவர்கள் ஏன் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் நான் நினைப்பதுண்டு!

இந்த ஊரில் ஆண், பெண் அனைவரும் கால்சட்டையே பெரும்பாலும் போட்டுக்கொள்ளுகின்றார்கள். இங்குள்ள கடுங் குளிர், "ஆந்தி" என்னும் புயல்—புழுதிக்காற்று இவைகளுக்கு நம் மூர்ச்சேலையும் வேட்டியும் சரிப்பட்டு வராது என்பது மிக முக்கி

கியம். (தமிழகத்துச் சினிமாத் துறை மேதைகள் இவ்வூர்ப் பெண்களின் சல்வாரைக் கூடக் காப்பி யடிக்கிறார்கள் என்பது தமிழகத்துக்குப் பெருமை. தமிழன் மற்றதில் கோட்டை விட்டாலும் காப்பியடிப்பதிலாவது, ஒன்றுவிடாமல் அடிக்கிறானே!)

கலைவாணரின் 'அய்ம்பது—அறுபது' என்னும் நாடகத்தில் ஒரு காட்சி: ஒரு இளம்பெண் நிறைய நகைகள் அணிந்து கொண்டு, நள்ளிரவில் தனியே வழிநடந்து சில கல் தொலைவிலுள்ள வேறோர் ஊருக்குப் பத்திரமாகப் போய்ச் சேர்ந்து விடுகிறாள். இது அவர் கண்ட லட்சியம். ஆனால் இன்றைக்கும் தமிழகப்பெண் தனியாக ஒரு டாக்சியிலோ ஆட்டோ ரிக்ஷாவிலோ (பகலில் கூட) சிலகல் தொலைவு செல்லமாட்டாள். தனி ஆண்களைப்பற்றிய அச்சம் இன்னும் நீங்கவில்லை. இங்கே நிலைமை முற்றிலும் வேறு. எந்த இரவிலும், எந்த ஒரு பெண்ணும், காடு போலவே உள்ள இந்த நகரத்தின் எந்த மூலைக்கும் தனியாக டாக்சியில் போய் வந்து விடுவாள். காரணம், அவளிடம் நகை நட்டு என்று அதிகம் இராது; இயல்பாகவும் அவள் ஆண்களுக்கு அஞ்சியஞ்சி வளர்ந்ததில்லை. உடற்கட்டிலும், சாதாரணமாக ஒரு பெண் ஒரு ஆடவனை எதிர்த்துச் சமாளிக்கும் அளவு வலுப்பெற்றிருக்கிறாள். நம் ஊர்ப் பாமரப் பெண்களைப் போல எல்லாப் பெண்களுமே வேலை செய்து உடம்பை வலுப்படுத்திக் கொள்ளுகிறார்கள். வலிய உடம்பில் வலிய உள்ளம்.

ஆண்டில் சில மாதங்கள் கடுங் குளிராக இருப்பதனாலோ என்னவோ இங்கு புகைப்பழக்கம் அதிகமாக உள்ளது. அதுவும், படித்து அலுவல் பார்ப்பவர்களுக்கு அது ஒரு நாகரிகமல்லவா? இந்தப் பழக்கம் அலுவலகத்துள்ளும் புகுந்து பரவிவிட்டது! (புகையல்லவா?) தேநீர் அருந்தும்போதே சிகரெட்டைக் கைவிடாத தீரர்கள், வேலை பார்க்கும்போது கை விடுவார்களா? அங்குள்ளவர்களின் மனப்புகைச்சல் போல, அலுவலகமெங்கும் எப்போதும் புகைமண்டிக் கொண்டே யிருக்கும்; அதிலே சிறியவர் பெரியவர் என்ற வேற்றுமை எதுவும் கிடையாது. எல்லாரும் சரிநிகர் சமானமாகப் புகைபிடிப்பார்கள். பெரிய அதிகாரியைப் பார்த்தால் பீடி, சிகரெட்டை மறைத்துக் கொள்ள வேண்டுமென்பதும் இல்லை. அவர் வாயிலும்தான் புகைக்குச்சி இருக்குமே!

அலுவல் உயர்வு தாழ்வுகளால் மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வு மிகுதியும் ஏற்படுவதில்லை. மேல் அதிகாரியைக் கண்டு தாழ்ந்த அதிகாரியும் சேவகர்களும் நடுங்குவதில்லை. ஒருவரைக்கண்டு ஒருவர் எழுந்து உட்காருவது கூட இல்லை. கல்லூரிகளில் ஆசிரியர் வகுப்புக்குள் நுழைந்ததும், மரியாதைக்காக மாணவர்கள் எழுந்து உட்காருவது கூட அநேகமாகக் குறைந்துவிட்டது. கூட்டம் போட்டுப் பாராட்டுவது போன்ற பொது மரியாதைகள் இருந்து வந்தாலும் தனி மனித மரியாதைச் சம்பிரதாயங்கள் அதிகமாக இல்லை. "உருவத்தில் எல்லாரும் ஒன்று; எல்லாரும் மனிதர்களே. அதில் பெரியவர் சின்னவர் என்ற வேறுபாடு எதற்கு?" இதுதான் இவர்களின் போக்கு என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அறிவாளர், முதியவர், பெற்றெடுத்துப் பேணி வளர்த்தவர் என்ற தொடர்புகளோடு ஒட்டிய மனப்பாங்கு பெரும்பாலும் குன்றிவிட்டது.

## தெருப்பந்தல்

இங்கு அமைக்கப்படும் திருமணத் தெருப்பந்தல் மிக முக்கியம். இங்குள்ள மக்களின் மனப்பாங்குக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக அமைகிறது இப்பந்தல். ரெயில் பிரயாணத்தின் போது, இந்தப் பக்கத்து மக்கள் தங்கள் பாய்படுக்கைகளைப் பரப்பி மற்றவர்களின் இடத்தையும் அடைத்துக் கொள்ளுவார்கள் என்று ஒரு குறை சொல்லப்படுவது உண்டு. ஒரு பெரிய தெருவிலுள்ள ஒரு வீட்டில் திருமணம் என்றால் அந்த வீட்டின் முற்றமாகவும் உள்ள தெருவை (இரு பக்கமும்) முழுவதும் அடைக்கும்படியாகத்தான் பந்தல் போடுவார்கள். அந்தத் திருமணத்திற்குப் போகிறவர்கள் தவிர வேறு யாரும் அந்தத் தெருவழியாகப் போக முடியாது. பஸ் போக்குவரத்து உள்ள தெருக்களில் கூட இப்படிப் பந்தல் போட்டுக்கொண்டு, பஸ்ஸை அடுத்த தெருவழியாகத் திருப்பி விட்டு விடுகின்றார்கள்! ஒரு வீட்டாரின் சௌகரியத்துக்காக ஊரரெல்லாம் தொல்லைப்பட வேண்டியதிருக்கிறதே என்று அவர்கள் நினைப்பதே இல்லை. இது இப்பகுதி மக்களின் மனப்பான்மையில் உள்ள ஓர் அடிப்படை அம்சம்!

இதே மனப்பாங்கைக் காட்டும் வேறு இரண்டு காட்சிகளையும் இங்கே குறிக்க வேண்டும். ஊரில் ஒவ்வொரு வீடும் ஒவ்வொருவருக்குச் சொந்தம்; அவ்வீடுகளைக் கொண்ட தெருக்கள் எல்லாருக்கும் சொந்தம். இத்தகைய பொதுப் பொருள்களைப் பெரும்பாலும் தவறாகப் பயன்படுத்துவதில் பாரத மக்களிடையே பெரிதும் ஒற்றுமை உண்டு! 'ஆளுக்கு ஒரு குட்டு குட்டினால் அடியேன் தலை மொட்டை' என்பது பழமொழி. இப்படியே, ஆளுக்கு ஆள் அசுத்தங்களையும் குப்பைகளையும் தெருவில் கொட்டுவதும் சாய்க்கடைகளைத் தெருவில் திறந்துவிட்டு விடுவதும் 'பாரத மாதாவின் புத்திர பாக்கியங்கள்' தவறாது கடைப்பிடித்துவரும் பழக்கங்கள்!'

தில்லித் தெருக்களில் வேறு பல தொல்லைகளையும் உரிமையோடு நாள்தோறும் ஏற்படுத்தி வருகிறார்கள் இங்குள்ள மக்கள். காலையில் வயிற்று வேள்விக்காக அடுப்பு மூட்டும் பெண்மணிகள் இதைத் தொடங்கி வைக்கிறார்கள். பிறகு அடுப்புக்குப் பதிலாகக் கரியடுப்பை உபயோகிக்கும் பழக்கம் சென்னை போன்ற பட்டணங்களிலும் உண்டு. அடுப்பில் தீ மூள்வதற்காக குடும்பவிளக்குகள் விசிறிகொண்டு வீசி வியர்த்துக் கொட்டுவார்கள். இந்தப் புகைமண்டல் நடக்கும் இடம் அவரவர் வீட்டுச் சமையல் அறை. தில்லியில் இந்த நிகழ்ச்சி நடுத்தெருவில் நடக்கும். அடுப்பை விசிறும் பொறுப்பைத் தெருவில் வீசும் காற்றுக்கே விட்டுவிடுவார்கள். தெருவெல்லாம் ஒரே புகை மயம். காலையில் அப்பக்கம் போகின்றவர்கள் கண்ணீர் பெருக்கிக் கொண்டுதான் போகவேண்டும்!

சொந்தத்தில் கார் வைத்திருப்பவர்கள் காருக்கென்று ஒரு தனி 'கார்த்தொழுவம்' (காரேஜ்) தேடுவதில்லை. அவரவர் வீட்டு முன்னால், தெருவிலே நிறுத்தி வைத்துவிடுவார்கள். மற்றொரு கார் செல்ல முடியாதபடி ஒடுசலான தெருவாக இருந்தால், மற்றவர்கள் தெருமுனையில் இறங்கி நடந்துதான் வீடுகளுக்குச் செல்ல வேண்டும்!

பஸ்களில் இரண்டிரண்டு பேருக்கு ஓர் இருக்கை வீதம் அமைத்திருக்கிருர்களல்லவா? இதில் இந்த ஊர்க்காரர் ஒருவர் முதலில் உட்கார்ந்து விட்டால் இரண்டாவது உட்காருகிறவருக்குப் போதிய இடம் கிடைப்பது அரிது. ஒவ்வொருவரும் காலைக் கையை விரித்துப் போட்டுக் கொண்டு ஒன்றேமுக்கால் இடத்தை அடைத்துக் கொள்ளுவார்கள். அதில் வருந்தத்தக்கது என்னவென்ருல், மற்ெருருவர் வந்து உட்கார்ந்த பின்னும், நாலாகோலமாகக் கிடக்கும் தங்கள் கால்கைகளை ஒடுக்கித் தங்களுக்குரிய இடத்துக்குச் சுருங்க மாட்டார்கள்.

## தமிழர்கள்

தமிழர்கள் கட்டாயமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு செய்தியும் உண்டு. இந்த ஊர் மக்களுக்குத் தமிழர்கள் என்ருல் ஒரு தனி அன்பு. தங்கள் வீடுகளைத் தமிழர் (மதராசி)களுக்கு வாடகைக்குவிடவே எல்லாரும் விரும்புகிருர்கள். இதற்குக் காரணங்கள் பல. தமிழர்கள் வாடகை வீட்டையும் கூடியவரை தங்கள் சொந்த வீடு போலவே அழுக்குப்படாமல், அழிவுசிதைவு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுகிருர்கள்; ஆண்டுக் கணக்கில் வீட்டுக்காரர் வெள்ளையடித்துக் கொடுக்காவிட்டாலும் பொறுத்துக் கொள்ளுகிருர்கள்; அல்லது தங்கள் செலவிலேயே அதைச் செய்துகொள்ளுகிருர்கள்; மாதம் தவருமல் வாடகையைக் கொடுத்து விடுகிருர்கள்; மூன்று மாதத்துக்கொருமுறை, (பேசியதை விட) அதிக வாடகை கேட்டாலும், 'இவனேடு வம்பு எதற்கு?' என்று முணுமுணுத்துக் கொண்டாவது கொடுத்து விடுகிருர்கள்.

இங்கு அலுவல் பார்க்க வரும் தமிழர்களில் பலர் பலகாலம் பிரம்மச்சாரிகளாக உணவு விடுதிகளில் உண்டு உறங்கி அலுத்த பிறகே திருமணம் செய்து கொள்கிருர்கள். அதனுல் எப்படியாவது ஒரு வீடு கிடைத்து அதில் மனைவியோடு வாழ்ந்தால் போதும் என்று எண்ணுகிருர்கள். இதைப் பயன்படுத்திக் கொண்டு இங்குள்ளோர் வீட்டு வாடகையைக் கண்மண் தெரியாமல் உயர்த்திக்கொண்டே போகிருர்கள். ஆகையால் இங்குள்ள தமிழ்ப் பையன்களுக்கு நடைபெறும் ஒவ்வொரு திருமணத்திலும், சம்பந்தப்பட்டவர்களைவிட இங்குள்ள வீட்டுக்காரருக்கே அதிக மகிழ்ச்சி. ஆகவே இங்கே திருமணம் செய்து கொடுக்கப்படும் ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் 'சீதேவி'யே என்பதில் அய்யமில்லை! அவள் காலடிபட்டதும் மாதம் 30, 40 ரூபாய் (வீட்டுக்காரருக்கு) அதிகம் கிடைக்கிறதே!

வீட்டுவாடகைச் சட்டம் இல்லாமலில்லை. சட்டம் இருந்து விட்டால் போதுமா? '24 மணி நேரமும் நான் அரசாங்க ஊழியன்' என்று ஒப்பந்தம் செய்து கொண்டு வேலைக்கு வரும் அப்பாவிக்குக் கோர்ட்டுக்குப் போய் வர நேரம் ஏது? அதனுல், "இங்கே அதிக வாடகைக்காவது வீடு கிடைக்கிறது. பம்பாயில் இதுதானும் கிடைக்கவில்லையே!" என்று தங்களைச் சமாதானப் படுத்திக்கொண்டு, தில்லி மக்களின் பேரன்பிற்குப் பாத்திரராகத் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிருர்கள்.

இங்குள்ளவர்களுக்கு வீட்டை வாடகைக்கு விட்டால் என்ன நடக்கும் என்பதை விவரிக்கத் தேவையில்லை. மேலே தமிழருக்குச் சொன்ன குண நலன்

களை எல்லாம் எதிர் மறையாக்கிப் படித்தால் போதுமானது. அந்த நிலையையெல்லாம்வீட்டுக்காரர் விரும்புவார்களா? அதை விட, வீட்டை அவர்களே இடித்துப்போட்டுவிட்டுச் சும்மா இருக்கலாமே!

## முயற்சி உடையார்

இத்தனைக்கும் மத்தியில் ஒரு நல்ல குணமும் இவர்களிடம் இருக்கிறது. எந்த நிலையிலும் ஏதாவது தொழில்செய்வதையே இவர்கள் விரும்புகிறார்கள். பலர் பருவத்திற்கேற்ற சிறுசிறு வேலைகளை மாறிமாறிச் செய்கிறார்கள்: வெயில் காலத்தில் (மே, ஜூன், ஜூலை) வெயில் கடுமையாக இருக்கும் பசியைவிடத் தாகத்துக்கே அக்காலத்தில் முதலிடம். ஆதலால் ஐஸ்தண்ணி' வண்டிகளைப் பலர் தெருத்தெருவாக (முக்கியமாகக் கடைத் தெருக்களில்) தள்ளிக்கொண்டு போவார்கள். ஒரு தம்ளர் தண்ணீரின் விலை இரண்டு நயாப் பைசா. வசதி உள்ளவர்கள் இந்த வண்டிகளை வைத்திருப்பார்கள்; ஏழைகள் அவற்றை வாடகைக்கு வாங்கிக்கொள்வார்கள்; அல்லது சம்பளத்துக்குத் 'தண்ணி' விற்பார்கள். இதைச் செய்ய விரும்பாதவர்கள் இரண்டு மண்பானைகளும் இரண்டு தம்ளர்களும் வாங்கிக்கொண்டு நெடுஞ் சாலையில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொள்வார்கள். அங்கும் ஒரு தம்ளர் தண்ணி இரண்டு நயாப் பைசாதான். இடத்தையும் நேரத்தையும் பொறுத்து, விலை மூன்று பைசாவாக உயர்வதும் உண்டு!

பச்சைக் காய்கறி வெயில் காலத்தில் மற்றொரு முக்கியமான வியாபாரம். வெள்ளரிக்காய், முள்ளங்கி, தக்காளிபோன்றவைகளை அழகழகாகச் சீவி அதில் உப்பும் மிளகுத் தூளும் தூவி விற்பார்கள். பலருக்கு இது விருப்பமான வெயில் காலச் சிற்றுண்டி. சிலர் முள்ளங்கி அல்லது வெள்ளரிக்காயை மட்டும் கழுவி இரண்டாகப் பிளந்து, உள்ளே உப்பு மிளகுப்பொடி தூவி விற்பார்கள். இவைகளை வாங்கி அரக்கிக்கொண்டு வழி நடப்பவர்களைப் பார்த்தால் அவர்கள் வாயில் முள்ளங்கி இலை முளைத்து தழைத்து இருப்பதாகத் தோன்றும்! அடுத்த விநாடி அதுவும் உள்ளே போய் விடும்!

வெயில் மாறிக் குளிர்காலம் தொடங்கியதும், காய்கறி வியாபாரிகள் பழ வியாபாரிகளாக மாறி அங்கே சாலை ஓரங்களில் உட்கார்ந்திருப்பார்கள். அல்லது சைக்கிள் பின்னால் கட்டிய பெரிய கூடைகளில் (இயங்கும் கடைகளாக) வைத்துக்கொண்டு நிற்பார்கள். தண்ணீர் வியாபாரிகள் மக்காச் சோளக் கதிர்களை வாட்டி விற்பவர்களாக மாறியிருப்பார்கள். அங்கங்கே வேள்விப் புகைபோல் கிளம்பும் 'வாட்டுப் புகை' அவர்களின் உழைப்பு வேள்வி (முயற்சி)யை நமக்குக் காட்டும். வறிய கோலத்தோடு இந்தச் சிறிய தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்களைப் பார்க்கும் (உழைப்பு மேன்மையறிந்த) உள்ளம் ஒருபால் கலங்குகிறது; ஒருபால் மகிழ்கிறது.

அலுவலகங்களில் குறைந்த ஊதியத்துக்கு வேலை பார்க்கிறவர்கள் காலையிலும் மாலையிலும் சிறுசிறு துணைத் தொழில்கள் மூலம் வருமானம் தேடுகிறார்கள். பால் வாங்கி விற்பது, 'பேப்பர்' போடுவது, 'ஆட்டோ ரிக்ஷா' ஓட்டுவது முதலியன அத்தகைய துணைத் தொழில்கள். சைக்கிளைப்பற்றி அரைகுறையாகத் தெரிந்தவன், இரண்டு பழைய

சைக்கிள்களை முறித்து ஓர் இடத்தில் போட்டுக்கொண்டு அதையே "சைக்கிள் ஆஸ்பத்திரி" ஆக்கிக்கொள்கிருன்!

வேலையில் இவ்வளவு ஆர்வம் இருந்தாலும், இவர்களில் பலரால் எதையும் சுறுசுறுப்பாகச் செய்ய முடிவதில்லை. தபால் நிலையங்களில் எந்தக் காரியமாக நாம் போனுலும், அதற்குரிய நேரத்தைவிட அதிக நேரமே செலவிட்டாக வேண்டும். பாங்குகள், ரெயில் நிலையங்கள் போன்ற பொதுமக்கள் தொடர்புடைய இடங்களும் இப்படியே. "வங்காளிகளும் தமிழர்களும் அலுவலகப் பணிகளுக்கு மட்டுமே தகுதி; தொழில்களும் வியாபாரமும் அவர்களுக்குக் கைவராதவை. அதேபோல் இந்தப் பகுதி மக்கள் அலுவலக வேலைக்கு ஆகார். தொழிலிலும் வியாபாரத்திலும் கெட்டி" என்று வங்காளி நண்பர் ஒருவர் கூறிஞர். நமது ஒரே நாட்டு மக்களை இப்படிப் பகுதி பகுதியாகப் பிரித்துப் புதிய 'சாதி'களை ஏற்படுத்த முடியாது என்பது உண்மையே. ஆயினும் வெவ்வேறு பகுதிகளில் பெரும்பான்மையாக உள்ள இந்த இயல்புகள் சிந்தனைக் குரியவை.

பிச்சை எடுப்பதை இப்பகுதி மக்கள் அறவே வெறுக்கிருர்கள். ஆனுல் தாராளமாகப் பிச்சை போடுகிருர்கள். அதை வாங்குவதற்குத் தமிழகத்திலிருந்து இங்கே வந்து வாழ்கிற பிச்சைக்காரர்கள் இந்தப் பகுதி மக்களை வாயார வாழ்த்துகிருர்கள்!

முடிவுரை

இங்குள்ள மக்களின் வாழ்வில் குறைகளும், தாழ்ந்த பழக்கங்கள் போல் பிறருக்குத் தோன்றும் நடைமுறைகளும் இடம் பெற்றிருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், இங்குள்ள வெப்ப தட்ப நிலை. 'நாலாறு மாதம் காடாறு மாதம்' என்ற பழைய விக்கிரமாதித்தன் கதை போல, ஆண்டின் ஒருபாதி கடுமையான வெயில்; மறுபாதி கடுங்குளிர். இதற்கேற்ற நடைமுறைகளும் பழக்க வழக்கங்களும் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. இரண்டாவது காரணம், இங்கே அண்மைக்காலம் வரை சண்டைகள் நடந்துவந்துள்ளன; கடைசியாக ஏற்பட்ட நாட்டுப்பிரிவினைச் சண்டையின் புண் இன்னும் முழுவதுமாக ஆறிவிடவில்லை. சண்டை வாழ்வே இவர்களின் வரலாறு. அதனுல் புதிய புதிய இனத்தினர் இங்கே புகுந்து கலந்திருக்கிருர்கள். அவர்களிடம் ஒரே சீரான வாழ்க்கைப் போக்கை எதிர்பார்க்கமுடியாது. மூன்ருவது காரணம், இது பட்டணம். இந்த ஊரின் நிரந்தரக் குடிகள் மிகச் சிலரே. மற்றவர்களெல்லாம் அக்கம் பக்கங்களிலிருந்து வந்து குடியேறியவர்கள். குடிபெயர்ந்து வந்த அகதிகளும் உண்டு. ஆகையால் ஒரு குழப்பநிலைச் சமுதாய வாழ்வே இங்கு நிலவுவதில் வியப்பில்லை.

தில்லி மாநகருக்கு வெளியே உள்ள பஞ்சாப் பகுதிகளுக்குச் சென்ருல் வாழ்க்கைக் காட்சியே வேறுமாதிரித் தோன்றுகிறது. மக்கள் மிகமிக நல்லவர்களாகக் காண்கிருர்கள்.

> "விருந்தினரை வரவேற்பான் தமிழன், அந்த
> விருந்தினர்க்கு நலஞ்செய்வான் தமிழன்"...

என்று நாம் பாடுகிருேமல்லவா? இப்படியே பஞ்சாபியரைப் பற்றியும் பாடவேண்டுமென்றே எண்ணம் உண்டாகிறது. வள்ளுவ விருந்தோம்பலை அப்படியே அங்குக் காணமுடிகிறது. தில்லியில் சென்று வாழும் அவர்கள் இன

மக்களைப் பற்றி அவர்களுக்கே நல்லெண்ணம் இல்லை. இடம் பெயர்ந்து சென்றதால் அவர்கள் பண்பு குன்றிப் போய்விட்டதாகவே சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டில் ''மதராஸ் வேலை'' என்பது போல இங்கும் "தில்லி வேலை'' என்று இருக்கிறது போலும்!

ஆயினும் தில்லிமாநகரையும் அதில் வாழ்வுபெறும் பல லட்சம் மக்களில் பெரும் பகுதியினரையும் புறக்கணித்துவிட முடியுமா? அவர்களோடு இணைந்துதானே மற்றவர்கள் செயல்பட்டாக வேண்டும்? சிலபோது தலைநகர் நாகரிகமே மற்ற இடங்களுக்குப் பரவவும் கூடுமே!

இவர்களின் குறைநிறைகளைத் தெரிந்துகொள்வது இவர்களைப் பழித்துரைப்பதற்காக அல்ல; இவர்களோடு இணைந்து வாழ வேண்டிய மக்கள் இவற்றைத் தெரிந்துகொண்டால், அவர்களை நேரில் சந்திக்கும்போது "திடுக்கீடு'' ஏற்படாது. தேசீய ஒற்றுமை என்பது நாலைந்து அரசியல் தலைவர்களின் மேடைப் பேச்சாலோ, ஒரு சில எழுத்தாளர்களின் இலக்கியங்களாலோ மட்டும் ஏற்பட்டுவிடாது. மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, இணங்கி இனம் பொருந்தி வாழ்வதன் மூலம் தான் ஒருமைப்பாடு உண்டாக முடியும். அவ்வாறு புரிந்து கொள்ளுவதற்கு அவ்வவரின் அன்றாட பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம். அந்த நோக்கிலேயே இச்செய்திகளைப் படித்துச் சிந்திக்க வேண்டும்.

*''ஒருவனின் மனைவி தன் கணவனுக்கு அவனது சிறு வயதில் ஒரு எஜமானி; நடுத்தர வய்தில் ஒரு கூட்டாளி; தள்ளாத வய்தில் ஒரு தாதி.''*

—பேக்கன்.

*　　*　　*

*''ஒரு வகையான அறிவிலிகள் வழக்கத்தைச் சட்டம் என்கிறார்கள்; மற்றொரு வகை அறிவிலிகள் நவநாகரீகத்தை சட்டம் என்கிறார்கள். இருசாராரும் அடிக்கடி மோதிக் கொள்கிறார்கள். ''முன்னால் நடந்தது'' என்பவர் முதல் வகையினருக்கு சட்டமியற்றியவர்; ''புதுமை'' என்பவர் இரண்டாம் வகையினருக்கு சட்டமியற்றியவர்.''*

—கால்ட்டன்.

கவிதைப் பகுதி :

# முயற்சி வேண்டும்!

— உதயை மு. வீரையன் —

1

எள்ளுகின்ற சிறுக்கரையான் வியக்கும் வண்ணம்
ஏதிர்பாரா பெரும்புற்றை அமைத்தல் காண்பாய்!
துள்ளுகின்ற எண்ணத்தால் நம்பிக்கையால்
துவளாத அதன்உழைப்பை நினைத்த துண்டா?
வெள்ளத்தைக் கடந்திடவே உறுதி கொண்டு
விரைவாக நீந்துகின்ற எறும்பைப் பாராய்!
பள்ளத்தைக் கண்டோடும் தண்ணீர் போல
பாய்ந்தின்றே செயலாற்ற முயற்சி கொள்வாய்!

2

'விதிவிதி'யென் றேயுரைத்தே ஆற்றல் தன்னை
விழலுக்கே இறைக்காதீர் மாணிடர்காள்!
'மதிமதி'யென் றேயுரைத்து முயலா விட்டால்
மறுமலர்ச்சி விஞ்ஞான உலகம் ஏது?
நதிகடலை நோக்கித்தான் ஓடும்; இன்று
நம்மறிவும் மடமையினை நோக்கி ஓடும்
அதிசயத்தை என்னென்றே எடுத்தியம்ப?
அறிவோடு முயற்சியினை ஏற்றுக் கொள்வீர்!

3

எண்ணத்தை அழியாத இதயந் தன்னில்
என்றென்றும் மறையாத வண்ணம் தீட்டி
திண்ணியராய்ச் செயலாற்றத் துணிந்து விட்டால்
திக்கெட்டும் வெற்றிமகள் அணைத்துக் கொள்வாள்!

கண்ணீரில் மிதந்திட்ட வாழ்க்கை 'ஓடம்'
களிப்பினிலே 'கப்ப'லென உயரும் என்றே
மண்ணுலகின் பெரும்புலவன் 'வள்ளு வன்'தான்
மறையாத குறள்தீட்டி வாழு கின்ருன்!

4

"எல்லாமே அவன்செயல்தான்!' என்று வாழ்ந்தால்
எதற்காக நாம்பிறந்தோம்? பயன்தான் என்ன?
முல்லைமலர் பிறர்க்காக மணத்தை ஈந்து
முழுநாளில் அதுசெய்தல் தொண்டு தானே!
இல்லையென்பார் இன்றில்லை; ஆனால் எல்லாம்
இறைவன்மேல் பழிபோட்டு வாழல் நன்ரு?
சொல்லையா! நாம்தொண்டு செயவேண் டர்வோ?
சுற்றுகின்ற தேனீயாய் முயன்று ழைப்பீர்!

5

சின்னஞ்சிறு எறும்பூரக் கல்லும் தேயும்;
சிறுபறையின் ஒலிகூட விண்ணை முட்டும்;
இன்னலெலாம் சிறுதுரும்பாய் எண்ணி விட்டால்
இன்பமெனும் இன்சோலை எதிர்வந் தெய்தும்;
மின்னலெனும் இவ்வாழ்வோ என்றும் மாரு
மேதினியில் நிலவாக ஒளிரும் அன்ரே?
கன்னலென வாழ்க்கையினை சுவைக்க வேண்டின்
கலங்காதே உழைத்திடுவாய்! முயற்சி வெல்லும்!!

6

போராட்டம் நிறைந்திட்ட வாழ்க்கை இன்று
புதிராட்டம்! மிகசொன்னல் பொம்ம லாட்டம்!
தேராட்டம் போல்ஆடி திரிந்து விட்டால்
திண்டாட்டம் தான்கண்ட பலனாய்ப் போகும்;

பாராட்டும் படிஉயர்ந்து வாழ சோம்பல்
பகைஓட்டம் கண்டிடவே ஓட்ட வேண்டும்;
தாராள மாருட்டம் மடமைக் கென்றும்
தலையாட்டம் போடாதீர்! அறிவு காண்பீர்!

7.

தண்ணீரில் படகோட்ட துடுப்பு வேண்டும்;
தமிழறிவு பெற்றிடவோ ஆவல் வேண்டும்;
வெண்ணிலவு சிறந்திட ஒளியும் வேண்டும்;
விடைநன்ருய் எழுதிடவோ படிக்க வேண்டும்;
வண்ணங்கள் ஒளிர்ந்திடவோ கலவை வேண்டும்;
வையந்தான் முன்னேற உழைப்பு வேண்டும்;
மண்ணுலகில் நாம்என்றும் தோல்வி கண்டு
மயங்காது வெற்றிபெற முயற்சி வேண்டும்.

## கவிஞர்கட்கு வேண்டுகோள் !

சோஷலிசம் (சமதர்மம்), ரேஷனலிசம் (பகுத்தறிவு), சமுதாயப் புரட்சி—ஆகிய துறைகளில் கருத்தாழ்ம் கொண்ட, இரு பக்கங்களுக்கு மேற்படாத, உயர்ந்த முறைக் கவிதைகளை மட்டுமே அனுப்ப வேண்டுகிருேம். பிறவற்றை வெளியிட வசதியில்லை. மன்னிக்க. —ஆசிரியர்

*"நல்லவனும் அறிவாளியும் சில சமயங்களில் உலகத்தைக் கோபிக்கலாம்; சில சமயம் அதற்காக வருந்தலாம். ஆனல் உலகில் தன் கடமையைச் செய்பவன் எவனும் அதனிடம் ஒரு பொழுதும் அதிருப்தி கொள்வதில்லை என்பது உறுதி."*

—கதே.

# நானே நீ: நீயே நான்!

[உ.க.]

*[கட்டுரையாளர் நகைச்சுவையுடன் காட்டுகின்ற 'தர்ம கர்த்தாக்கள்' இல்லாத இடம் இல்லை; எங்கும் நிறைந்துள்ளனர். கோவிலுக்கு வெளியிலும், பொது வாழ்விலும்கூட இருக்கின்றனர். பொதுச் சொத்துக்கும் சொந்தச் சொத்துக்கும் வேற்றுமை காணாத—காட்டாத—"பரமாத்மாவே ஜீவாத்மா" என்ற அத்துவைத தத்துவத்தைக் கொண்ட 'பெரியவர்கள்' வாழ்க்கை வெற்றியின் இரகசியத்தைக் கண்டு பிடித்த சான்றோர்கள்!! சுற்றுமதில் சுவரே இல்லாத கோவில் சுவருக்கு சிமெண்ட் பூசி சுண்ணாம்பு அடிக்கும் தர்மகர்த்தாக்கள், எக்சிக்யூடிவ் ஆஃபீசர்கள்; கோவிலுக்காக யானை வாங்கப்பட்டதாகவும், அதற்குத் தீனி போடப்பட்டதாகவும், பிறகு அது இறந்துபோய் புதைக்கப்பட்டதாகவும் "திலகர் நிதி"க் கணக்கு எழுதும் புண்ணியவான்கள்போன்றவர்களைப்பற்றி இக்கட்டுரையாளர் நிறையத் தெரிந்துள்ளார்.]*

மேற் கண்ட தலைப்பு எந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு முடிந்த முடிபு என்பது எனக்கோ எங்கள் கிராம மக்களுக்கோ தெரியாது. ஆனால் எங்கள் கிராமத்தில் எழுந்தருளி, குடிகொண்டிருக்கும் சிவன் கோயில் தர்மகர்த்தா அவர்கள், பெரிய கோவில் "கர்ப்ப கிரகத்திற்குள்" நடப்பட்டிருக்கும் கருங்கல் சிவலிங்க மூர்த்தியின் முன்னால் கைகூப்பி, "என்னப்பனே, நானே நீ, நீயே நான்," என்று உரக்கக் கூவி கன்னத்தில் தாமே அடித்துக் கொள்வதைக் கண்டும் கேட்டும் வந்த எங்களுக்கு—மேற்கண்ட சொற்கள் தெரிந்து பழக்கம் ஆகிவிட்டன.

உங்களூர் பெரிய கோயிலைப் பற்றியும், அக்கோவிலின் பரம்பரை தர்மகர்த்தாவைப் பற்றிய "மகாத்மியத்தை"யும் மற்றவர்கள் தெரிந்து கொள்வானேன்? என்று நீங்கள் நினைக்கலாம்.

கரப்பான் பூச்சி, கொக்கிப்புழு, சினிமா நடிகை உபயோகிக்கும் கூந்தல் தைலம், சோப்பு முதலியவை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டியவை என்று இருக்கும்போது, எங்கள் தர்ம கர்த்தா அவர்களைப் பற்றி மற்றவர்களுக்கு அறிமுகமாக்காமல் இருப்பது அவரது பெருமைக்கே இழுக்கல்லவா?

அதோடு. "நானே நீ, நீயே நான்" என்கிற ஆதி சங்கரரது அத்வைத மத வாக்கியங்கள் கோயில் தர்மகர்த்தா அவர்களை எப்படி ஏழ்மையிலிருந்து செல்வச் சீமானாக மாற்றியது? "பக்திமான்" என்ற பெருத்த விளம்பரத்தையும் பரப்பி, உலக விவகாரங்களில் சிறந்த "லௌகீகி" என்ற வடமொழி பட்டத்தையும் வழங்கியது என்ற "அதிசயத்

தை"யும் தெரிந்துகொள்ள வேண்டாமா ?

அப்பொழுதிருந்த இந்து மத பரிபாலன போர்டாரோ, அல்லது சட்ட நீதி மன்றமோ எங்கள் தர்மகர்த்தா அவர்களைக் கோயில் டிரஸ்டியாக நியமிக்கவில்லை. அவர் "பரம்பரை டிரஸ்டி." அதாவது ஆதியும் முடிவும் இல்லாத உத்தியோகம். அவர் எப்படி, யாராலும் உத்தியோக பூர்வமாக நியமனம் செய்யப்படவில்லையோ, அது போல் அவரை உத்தியோக "காலாவதி" தீர்ந்த தென்று கோயிலினின்று நீக்கவும் முடியாது, அவர் ஆயுள் முடியும் வரையில். தர்மகர்த்தா உத்தியோகம் அவரது குடும்பச் சொத்து. அவரும் அவருக்குப்பின் அவருடைய "சந்ததி-வார்சு"களும் அதனை அனுபவிக்க சட்டப்படி உரிமை பெற்றவர்கள்.

கடல் நீர் குடிநீராக மாறுகிறது, சூரியன் தேய்ந்து கொண்டே போகிறது என்று ஆராய்ச்சி சொல்லுகிறது. பெரிய மண்டலாதிபதிகளெல்லாம் தங்கள் தங்கள் "மகுடத்தை"க் கழற்றி, வந்த விலைக்கு விற்றுவிட்டு, குடிமக்களுள் ஒருவராக மாறி வருகிறார்கள். சந்திர மண்டலத்திற்கு நெடுஞ்சாலை போட முயற்சி நடைபெறுகிறது! உலகில் என்ன மாறுதல்கள், அழிவுகள், வளர்ச்சிகள் உண்டானாலும், இந்து மத கோயில்களில் மட்டும் "பூஜாக்கிரம" மாறுதல்களோ, அல்லது அந்த கோயிலில் உத்தியோகம் பார்க்கும் கோயில் திருவலகு ஊழியரிலிருந்து மேல் 'ஸ்தானிகம்' 'அர்ச்சகர்' முதலிய ஊழியர் வரை வரிசைக் கிரமமான பரம்பரை வார்சு உரிமையோ—மாறாமல், திரியாமல், உடும்புப் பிடியாக நிலைத்து நிற்பது உலகின் எட்டாவது அதிசயம் தானே!

**கலவை உலோகங்கள்**

உலோகக் கலவைதான் அல்லாய் (alloy) என்பது. 3 பங்கு செம்பும், 2 பங்கு துத்தநாகமும் கலந்தது பித்தளை (brass). 95 பங்கு தாமிரம், 4 பங்கு வெள்ளீயம், 1 பங்கு துத்தநாகம் கலந்து உருவாவது வெண்கலம் (bronze). துத்தநாகம், நிக்கல், தாமிரம் சேர்ந்து உருவாவது ஜெர்மன் வெள்ளி (german silver). எஃகுடன் குரோமியத்தைச் சேர்த்து உருவாக்கப்படுவது துருவேரு எஃகு (stainless steel).

இவ்வாறு எவ்விதத்திலும் அறுந்துபோகாத "பாரம்பரிய உரிமை" என்னும் இரும்புச் சங்கிலித் தொடர் வலுவாக அமைந்துவிடவே, எம் ஊர் தர்மகர்த்தா அவர்கள், தமது உத்தியோகத்தை அதன் பாதுகாப்பில் பிணைத்துக்கொண்டார். கோயில் 'நிர்வாகத்தை' தன் சொந்த நலன்களை நிறைவேற்றிக்கொள்ளத் திருப்பிவிட்டார். அதனால் கோயிலிலே-கட்டிடமே அவரது சொந்த வீடு. அக்கோயிலுக்குச் சொந்தமான எல்லா வகையான வருமானமும் அவரது பெயரில் கணக்குப்பதிவாயிற்று. அக்கோயில் சிப்பந்திகளும் அக்கோயிலுக்கு "விஜயம்" செய்யும் பக்தர்களும், தர்மகர்த்தா அவர்களையே கோயில் மூலமூர்த்தியின் ஏகப்பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டு நடக்கலாயினர்.

தன் வீடு, பொதுக் கோவில் என்ற "பேதா பேத"மின்றி அவர் பாவித்து செயலில் காண

பித்துவந்தமைக்கு இரண்டொரு உதாரணங்கள் போதும்!

## அத்துவைத நடத்தை!

கோயிலைச் சுற்றிலும் நீண்ட விலாசமான தாழ்வாரங்களும் பெரிய மண்டபங்களும் இருக்கின்றன. தர்மகர்த்தா அவர்கள் தம் நஞ்சை புஞ்சை நிலங்களிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் நெல், மஞ்சள், வேர்க்கடலை, எள் முதலியவைகளை மூட்டைகளாகக் கட்டி மேற்கண்ட மண்டபங்களிலும் உள் புறச் சுற்றுத் தாழ்வாரங்களிலும் அடுக்கிவைத்து, பல மாதங்கள் கழித்து விலை உச்ச நிலையை அடைந்தபின், அவைகளை விலைக்கு விற்றுப் பணமாக்கிக் கொள்வார். அதுவரை கோயில் சுற்று கட்டிடங்களே 'வாடகையில்லாத மண்டிக் கிடங்காக' உதவின. சர்க்காருக்குத் தெரியக்கூடாத சில வகைச் சரக்குகளும், அவரது தனி வரவு செலவுக் கணக்குகளும் கோயில் நிலவறையிலிருந்த இரும்புப் பெட்டியில் யார் கண்ணிலும் படாமல் பாதுகாப்பாகப் பதுங்கியிருந்தன. கோவில் வெளிப்புற மதில் இடிந்தும் சிதைந்தும் இருப்பதைக் கண்டு (மனம் பொறுதவராய்), ஒரு சிறு கருங்கல்லைக் கூட விடாமல் இரவோடிரவாக வண்டியிலேற்றி, தமது பட்டா (சொந்த) சாகுபடி பூமியின் முள் வேலியை அப்புறப்படுத்திவிட்டு, முழுதும் அந்தக் கற்களைக் கொண்டே நிலத்திற்குப் பாதுகாப்பாக பெரிய நெடுஞ்சுவர் எழுப்பிவிட்டார் என்றால், அவர் கோயிலை, "பொது ஸ்தாபனம்" என்று ஒதுக்காமல், தனக்கே சொந்தமாக்கி அதனைத் தன் முழுப்பொறுப்பில் ஏற்றுக் கொண்டார் என்பது புலனாகிறதல்லவா?

தேவாலயத்திற்கு ஆண்டு தோறும் கிடைக்கும் வருமானம் முழுதும் தமது சொந்தப் பணம் போட்டிருக்கும் 'பாங்கியில்' தம் கணக்கிலேயே செலுத்திவிடுவார். அப்போதிருந்த தேவாலய 'அதிகாரிகளிடமிருந்து 'கோயில் கணக்கு என்று தனியாகப் பிரித்து, அந்தக் கணக்கிலேயே கோயில் வருமானத் தொகையை இருப்பு வைத்து, ஒழுங்காக வரவு செலவுக் கணக்கு எழுதி வைத்திருக்க வேண்டும்' என்று அவருக்கு உத்திரவு வரும்.

இந்த இடத்தில்தான் அவரது 'நானே நீ...' என்ற கொள்கை, கை கொடுத்தது! எப்படி?

தர்மகர்த்தா அவர்கள் அப்போதைக்கப்போது அந்த வட்டாரத்திலிருக்கும் பல முக்கியமான மனிதர்களை ஒருங்கு கூட்டி, தமக்கு வரும் இந்த எச்சரிக்கை கடிதங்களைப் படித்துக் காண்பித்து,—விஷயத்தைத் தலைகீழாக மாற்றி யமைத்து, "தேவாலய மேற்பார்வை பார்க்க இவர்கள் போன்ற ஞானமில்லாதவர்கள் அதிகாரிகளாக வந்துவிடுவது எவ்வளவு கொடுமை! ஆண்டவன் பணத்தோடு 'என் பணம்' என்று கலந்துவிடக் கூடாதாம்! இந்தப் பொய்யான உலகில் 'என்னுடையது' என்ற சொல்லுக்கே இடமில்லையே! 'நான்' என்று சொல்லிக்கொள்வதே அஞ்ஞானிகளின் பிதற்றலல்லவா? எல்லாம் அவனாக இருக்க, 'நாம்' நம்முடையது என்று சொந்தம் கொண்டாட இங்கு இடமேது? 'ஜீவன்' வேறு, 'பரமன்' வேறா? பரமாத்மாவே ஜீவாத்மா;-நாமே அவன்; அவனே நாம்; அவன் கணக்கு மதிப்பே நம் கணக்கு! இதை அறிந்துகொள்ளச் சக்தியில்லாத கோயில் மேலதிகாரிகள், நாளைக்குக் "கோயிலுக்குப்

போகாதே! ஆண்டவனை விட்டு நீ தனியாகப் பிரிந்து தனிகணக்கில் உன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று கூடக் கட்டளையிட்டாலும் ஆச்சரியப்பட இடமில்லை" என்று குட்டிப் பிரசங்கமே செய்துவிடுவார். பெரிய தனக்காரர்கள் அவரது உருக்கமான சொற்கள் அவர் அணிந்திருக்கும் சைவ திருச் சின்னங்களான நார்மடி ஆடை, திருநீற்றுப் பூச்சு, குங்குமப் பொட்டு, சந்தனக்கீற்று, கௌரீ சங்கர உருத்திராட்ச மாலை முதலிய ஆடம்பரங்களைக் கண்டு சொக்கிப் போய், "இந்த உத்திரவுகளுக்கெல்லாம் கீழ்ப்படியலாமா? உங்கள் கடமையை "வளமை மாருமல்" செய்து வாருங்கள்; மற்றவைகளுக்கு நாங்கள் இருக்கிரோம்" என்று உறுதி கூறி முத்தாய்ப்பு வைத்துவிடுவார்கள்.

## தணிக்கையாவது...?

'சிவோஹம்"என்ருல் "சிவன் நானே" என்று பொருளாம். ஆதி சங்கரர்தான் "எல்லாம் வல்ல பரம்பொருளின் பிரதிபலிப்புத்தான் மனிதன் உடலில் குடிகொண்டிருக்கும் "ஜீவன்"என்று கண்டு பிடித்தாராம்! மனிதனும் கடவுளும் இப்படி மாயையினுல் தோற்றத்தில் மட்டும் பொய்யாக இரண்டுபட்டு நிற்பது ஒன்றே ஒன்றுதான் என்பது அவரது அத்வைத மதவெளியீடு.

பிற்காலத்தில் எங்கள் கோயில் தர்மகர்த்தா அவர்களுக்கு இந்தக் கொள்கை பல விதத்திலும் வருமானத்தைக் கொடுக்கும் "காமதேனு"வாக உதவும் என்பது ஆதி சங்கரர் எதிர்பார்க்காததாய் இருந்தாலும், இப்பொழுது சங்கரர் பீடத்தை அலங்கரித்து நிற்கும் எல்லா ஆச்சாரியசுவாமிகளுக்கும் அவரது சிஷ்யகோடிகளுக்கும் இவை, விளங்காமலா இருக்கும்? அவர்களே கோயிலுக்கு எழுந்தருளி, தர்மகர்த்தா அவர்களின் "பாத பூஜை"யை அங்கீகரித்து, வண்டிக் கணக்காக ஆசீர்வாத வடமொழி, சுலோகங்களை சொரிந்து வாழ்த்திவிட்டுச் செல்லுகிருர்கள் என்ருல், எங்கள் தர்மகர்த்தா அவர்களை தேவஸ்தான 'இன்ஸ்பெக்டரோ,' 'கமிஷனரோ' அல்லது அவர்களுடைய உத்தரவுகளோ இம்மியளவாவது இடம் விட்டு அசைத்துவிட முடியுமா?

காந்தியவர்களின் 'ஆடிட்டர்' ஜே. ஸி. குமரப்பாவே வந்து தணிக்கை செய்தால்கூட அவருக்கே எங்கள் தர்மகர்த்தா அவர்கள் வைத்திருக்கும் 'கணக்கு' விளங்காது என்ருல் வேறு என்ன சொல்ல?

## க்விஸ்லிங் - விபீஷணன்

எவ்வளவு பெரிய வைணவ பக்தருங்கூட, விபீஷணன் 'ஆழ்வார்' பட்டம் பெற்றதைக் கருதி விபீஷணன் என்று தன் பிள்ளைக்குப் பெயர் சூட்டுவதில்லை. ஏன்? அப்பெயருடன் 'துரோகி' என்ற தத்துவம் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

இது போலத்தான் க்விஸ்லிங் ((Quisling) என்ற பெயரும், விட்குன் க்விஸ்லிங் (1887-1945) என்பவர் நார்வே நாட்டினர். இரண்டாவது உலகப் போரின் போது நார்வேயை- வென்ற ஜர்மானியர் இவரை அந்நாட்டுத் தலைவராக்கினர். ஆனல் போர் முடிந்தவுடனே நார்வே மன்றம் இவரை துரோகி என்று முடிவு செய்து சுட்டுக் கொன்றது.

தேவஸ்தானத்திற்கு பல வழிகளிலும் பெருக்கெடுத்து ஓடிவரும் 'வருவாய்' சுற்றிச் சுழன்று இறுதியில் தர்மகர்த்தா அவர்களது மடியிலேயே நூற்றுக்கு நாற்பது சத விகிதம் வந்து வீழ்ந்த செப்படி வித்தையைப் புள்ளி விவரங்களோடு விவரிப்பது என்றால் அதுவே தனி நூலாக ஆகிவிடும். ஆதலால் அதனை விடுத்துப் பொதுவாக அவர் அடிநாளில் கடனாளியாக இருந்ததையும் அவர் தர்மகர்த்தா உத்தியோகம் ஏற்ற பிறகு இன்று அவர் இருக்கும் நிலையையும் பொருளாதாரத்தில் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், சராசரி குடிமகனொருவனுக்கும் சர்க்காரின் 'பத்மவிபூஷண' பட்டம் பெற்ற ஒருவனின் நிலைக்கும் உள்ள ஏற்றத் தாழ்வையேதான் உதாரணமாகச் சொல்லிக் காட்ட வேண்டும்!

தர்மகர்த்தா போன்ற இவர்களின் கதையைப் படிக்கும்போது சில படிப்பினைகள் தெரிகின்றன. "பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை." ஆதலால் மனிதன் பொருளைத் தேடி அடைய வேண்டும். அதற்கு இரண்டே வழிகள் தாம் உலகில் உள்ளன; ஒன்று பொருளுக்கும் தமக்கும் நேருக்கு நேராகத் தொழில்புரிகிற மூலப்பொருளைச் சென்று அடைவது. (பொருள் என்பதை பணம் என்று மட்டும் கொள்ளாமல் விரிவான விளக்கத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.) இரண்டாவது வழி, பொருள் ஒன்றைப்போய் அடைந்த பின்பு —ஒருவருக்குச் சொந்தம் என்று ஏற்பட்ட பிறகு,—அந்தப் பொருளுக்கு உரிமை பெற்றவரிடமிருந்து "கறப்பது" ஆகும்.

பொருளுக்கும் தமக்கும் நேர்கோடு அமைத்துக்கொண்டு கண்ணிய முறையில் பொருளை அணுகுவதற்கு முயற்சி, ஊக்கம், உழைப்பு முதலிய பண்புகள் இன்றியமையாதன. இரண்டாவது குறிப்பிட்ட முறையைக் கொள்வதற்கு, பிறரது அறியாமை; பலகீனம் முதலியவைகளே மூலதனமாக அமைகின்றன.

இரண்டாவது வழியில், கோரியபடி வெற்றி கிடைக்கிறது என்று வைத்துக்கொண்டால் கூட அவ்வெற்றிக்கு ஈடாக-விலையாக-தன்மான இழப்பு பழிச்சொல், வஞ்சகம், ஏமாற்று முதலியவைகளைத் திருப்பிக்கொடுத்தே தீர வேண்டும். இது மனித குலத்திற்கே அவமான மல்லவா?

அதோடு இந்த இரண்டாவது வழியைக் கையாள்பவர்களுக்கு இயல்பாகவே தீராத 'இடைஞ்சல் முளைத்துவிடுகிறது. அந்த இடையூறுதான் நமது கதாநாயகரான தர்மகர்த்தாவை அவரது மனம் ஒரு விநாடி கூட ஓய்வு பெற விடாமல் வதைக்கிறது!

தர்மகர்த்தா அவர்களுக்கு மக்கட்பேறு இல்லை! தாம் சேகரித்த இவ்வளவு "பாக்கியங்களும்" நாய்வாய்த் துணியாக சிதறுண்டுபோகுமே, என்ற கவலையும், தமது தர்மகர்த்தா தலைமைப்பீடம், தமது எதிரிகளாக விளங்கும் பங்காளிகளினைக்கு மாறிவிடுமே என்ற கொதிக்கும் எண்ணமும் அவரை தூங்கவிடாமல் உள்ளுக்குள் தைத்து, கடித்துக் குதறி, அணு அணுவாக சித்திரவதை செய்கிறதாம்! இவ்வளவையும் பார்த்துக் கொண்டு பெருங்கோபுரத்தினடியில் வீற்றிருக்கும் எங்கள் 'சிவனார்' எப்பொழுதும் போல் எதிலும் கலக்காமல், கண்ணெடுத்தும் பாராமல், கருங்கல் தெய்வமா

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

மா. எழில் முதல்வன், எம்.ஏ.

# செய்தித்தாளும் இலக்கியமும்

[செய்தி இதழ்களில் இலக்கியம் உண்டா? இருந்தால் அது நிலையான இலக்கியமா? இது பற்றிய சிந்தனைக் கட்டுரை இது.]

இலக்கியம் காலப் போக்கில் வளர்ச்சியும் மாற்றமும் அடையும். அவ்வளர்ச்சியின் படிநிலைகள் பலதிறத்தன. இப் படிநிலைகளை ஆராய்வது இலக்கியத்தின் தன்மைகளை அறிந்து கொள்ள உறுதுணையாகும். இந்த வகையில் செய்தி இதழ்களுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள உறவையும், தொடர்பையும் சிறிது காண முயல்வோம்.

செய்தி இதழ்களை இலக்கியம் என்று கூறலாமா? இதிலே கருத்து வேறுபாடுகள் உண்டு. இவற்றை யாரும் இலக்கியம் என்று கூறமாட்டார்கள், இதழ்களில், கற்றறிந்த பெருமக்களால் அவ்வப்போது படைக்கப் படும் எழுத்தோவியங்களை இலக்கியம் என்று ஒத்துக் கொள்பவர்கள் கூட செய்தி இதழ்களை அப்படியே இலக்கியம் என்று ஒத்துக் கொள்வதில்லை. பொதுவாகச், செய்தி இதழ்களையும் இலக்கிய நோக்கோடு அணுகினால் அவற்றுள்ளும் சில அடிப்படைக் கூறுகளை நாம் உணரலாம். (இக் கட்டுரையில் கையாளப்படும் 'செய்தி இதழ்கள்' என்று தொடர் அன்றாடச் செய்திகளைத் தாங்கி வரும் ஏடுகளோடன்றி, கிழமை இதழ், திங்கள் இதழ் முதலியவற்றையும் அடக்கியே குறிக்கின்றது). பழங்காலத்துக் காவியங்களே தற்கால இதழ்களில் "தொடர்கதை" என்ற வடிவத்தைப் பெற்றுள்ளன. உதிரிப் பாடல்களே ''கவியரங்கம்" என்ற பெயரைப் பெற்றுள்ளன. எனவே, செய்தி இதழ்களிலும் இலக்கியத்தன்மை கலந்தே இருக்கிறது என்பது அறியத் தக்கது.

## இருவகை இலக்கியங்கள்

இலக்கியங்களை இருவகையாகப் பிரிக்கலாம். புலவன் ஒருவனால் எழுத்து வடிவம் கொடுக்கப் பட்ட இலக்கியங்கள் பெரும்பாலும் மாறுதல்கள் அடைவதில்லை. எழுத்து வடிவம் பெருத வாய் மொழி இலக்கியங்கள் அடிக்கடி மாற்றம் அடையும். இன்னணம்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கவே நிற்கிருரே, என்பதுதான் ஆத்திக மத பக்தர்களுக்கு இன்றுவரை புரியாத புதிராக இருக்கிறது!

ஆமாம்! இவ்வளவும் சொல்லி தர்மகர்த்தாவின் பெயர் முதலிய விவரங்களைக் காணோமே! என்று நினைக்கலாம். பெரிய இடத்துப் பெயரைச் சொல்லுவது "சம்பிரதாய"த்திற்கு விரோதமல்லவா? அதோடு எரிகிற கொள்ளியில், ஒரு கட்டைக்குமட்டும் பெயர் கொடுப்பானேன்?

மாறுதல்கட்கு உட்படாத இலக்கியங்களை நிலை இலக்கியங்கள் (Fixed Literature) என்றும், மாறுதல்கட்கு உட்படும் இலக்கியங்களை மிதவை இலக்கியங்கள் (Floating Literature) என்றும் வகுக்கும் முறை மேலை நாடுகளில் உண்டு. சில இலக்கியங்கள் தமக்கென ஒரு வடிவத்தைப் பெற்ற பின்னர் கூட மாறுதல் அடைவது உண்டு. எடுத்துக் காட்டாக சிலப்பதிகாரக் கதையை எடுத்துக் கொள்வோம். இக்கதை இளங்கோவடிகளால் காப்பிய மாக எழுதப்பட்ட பின்னரும், பல்வேறு மாறுதல்களோடு இன்றும் கூடத் தெருக் கூத்தாக நடிக்கப்படுகிறது. கோவலன் கோவிலன் என்றும், கண்ணகி கர்னகி என்றும் மாற்றப்பட்டுள்ளனர். கர்னகி வஞ்சிப் பத்தனின் குடலைப் பிடுங்கி மாலையாகக் கூட போட்டுக் கொள்கிறாள்! எனவே இதுபோன்ற மாறுதல்கட்கு உட்பட்ட கதைகளையும் 'மிதவை இலக்கியங்கள்' என்று அழைக்கலாம். செய்தி இதழ்கள் தமக்கென ஒரு வடிவம் பெற்று வெளிவந்தாலும் அவை மாற்றங்கட்கு உரியனவாக இருப்பதால் அவற்றையும் 'மிதவை இலக்கியம்' என்றே மௌல்டன் (R. G. Moulton — The Modern Study of Literature) குறிப்பிடுகிறார்.

## வியத்தகு தொண்டு

செய்தி இதழ்கள் இல்லாத நாடே இல்லை எனலாம்; இவை நாகரிகத்தின் அறிகுறியாகவும் கருதப்படுகின்றன. படித்தவர்களும், படிக்காதவர்களும் உலகச் செய்திகளை அறிந்து கொள்வதில் பேரார்வம் உடையவர்களாக இருக்கின்றனர். இந்த ஆவலே செய்தி இதழ்களின் வளர்ச்சிக்கும், வாழ்விற்கும் காரணமாக அமைகின்றன. உலக நிகழ்ச்சிகளையும், சிந்தனைக்கு விருந்தாக அமையும் சிறந்த கட்டுரைகளையும் உடனுக்குடன் தருவதே செய்தி இதழ்களின் தலையாய பணியாகும். எனவே, இவற்றை 'உலகப் பொது இலக்கியம்' (Universal Literature) என்றும் அழைக்கலாம். உலக மக்களின் பொதுவான ஆர்வத்தைச் செய்தி இதழ்களே தூண்டிவிடுகின்றன. உண்மையில் செய்தி இதழ்களின் தொண்டு வியக்கத்தக்க ஒன்றேயாம்.

செய்தி இதழ்களின் வளர்ச்சி படிப்போரின் எண்ணிக்கையைப் பொறுத்தது; படிப்போரின் தொகை அதிகமாக அதிகமாக, இதழ்களின் எண்ணிக்கையும்

### கென்யா

இது கிழக்கு ஆஃப்ரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் குடியேற்ற நாடு. 76 ஆண்டுகளுக்குப் பிறகு பிரிட்டிஷ் ஆட்சி முடிவடைந்து சென்ற மாதம் 12ஆம் தேதி முதல் சுதந்தர நாடாகியுள்ளது. இதன் தலைநகரம் நைரோபி.

இந்நாட்டின் முக்கியதொழில் பயிர்த் தொழில். காஃபி, மக்காச் சோளம், கோதுமை, தேயிலை, கரும்பு முதலியவை சிறப்பான விளை பொருள்கள். தங்கம், வெள்ளி, தாமிரம் போன்ற கனிப் பொருள்களும் உண்டு.

1962-ல் இந்நாட்டின் மக்கள் தொகை 8,676,000. இவர்களில் ஏறத்தாழ 56,000 பேர் அய்ரோப்பியர்; 1,76,000 பேர் ஆசிய மக்கள். நிலப் பரப்பு 2,24,960 சதுர மைல். பேசப்படும் முக்கிய மொழிகள்: இங்கிலீஷ், சுவாகிலி, இந்துஸ்தானி, அராபி.

பெருகுகிறது. இவ்வளர்ச்சி வர வேற்கத்தக்கதே. எனினும் இதி லும் சில குறைபாடுகள் உண்டு. செய்தி இதழ்களின் வளர்ச்சி அதிகமாக அதிகமாக மக்களி டையே "படிக்கும்" பழக்கம் குறைந்து வருகிறது. செய்தி இதழ்களைப் 'படிப்பவர்கள்' குறைவு; 'பார்ப்பவர்கள்' அதி கம் இடைவிடாது கவனமும், ஒருமுகமான சிந்தனையும் படிப் பதற்குத் தேவை. மன ஒருமைப் பாட்டோடு இதழ்களை யாரும் படிப்பதில்லை. மேலெழுந்த வாரி யாகச் செய்திகளை அறிந்து கொள்ளும் வகையிலேயே பார்க் கின்றனர். ஆதலில், படித்தல் நிலையிலிருக்கும் மக்களைப் 'பார்க் கும்' நிலைக்கு மாற்றி அமைப்பது பத்திரிகைகளே எனலாம்.

முன்காலத்தில் எல்லாம் யாரோ ஒருவர் படிக்க அதை மற் றவர்கள் கேட்கும் நிலைதான் இருந்து வந்தது. அச்சுப்பொறி களோ ஏடுகளோ பெருவாரியா கப் பரவாத காலம் அது. அக்கா லத்தில் கேட்பவர்கள் தம் செவிப் புலனைக் கூர்மையாய் வைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர். அதேபோல, நல்ல இலக்கியங்களை படிப்பவர்கட்கும் மன ஒருமைப்பாடும், நிறைந்த கவனமும் தேவைப்பட்டது. செய்தித் தாள்களையே பார்த்துப் பார்த்துப் பழக்கம் பெற்றவுடன் எதையும் நுண்மையாக "நோக் கும்" ஆற்றல் குறைகிறது. இது நம்மை அறியாமலே நம்மிடம் படிந்து விடுகிறது. எனவே, இலக்கியத்தின் உயிர்நாடியைத் தேடிப் பிடித்து உய்த்து உண ரும் ஆற்றல் மழுங்குகிறது. இந்த வகையில் செய்தித் தாள் களில் உருவாகும் குறைபாடு இது.

## ஆசிரியர் இல்லை

இலக்கியத்திற்கு அதை எழு திய ஆசிரியன் என்று ஒருவன் உண்டு. செய்தி இதழ்கட்கும் ஆசிரியன் ஒருவன் இருந்தா லும் அவை பல ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவே இருப்ப தால் தனிப்பட்ட பொறுப்பின ராக யாரையும் கூறுவதற்கில்லை. இதன் காரணமாக இதழ்களில் தவறான செய்திகளும், நன்கு அறியப்படாதனவும் இடம் பெற்று விடுவது உண்டு. பத்தி ரிகைகளின் சூடான தலையங் கங்களே படிப்போரைத் தன் பால் இழுக்கின்றன; படிப்போ ரும் அதை எழுதிய ஆசிரியனைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. இதுவும் ஒரு குறையே.

## வணிக நோக்கம்

இலக்கிய ஆசிரியனுக்கு அதை அவன் படைக்கக் காரணமாக அமைவது அவனது உள்ள உணர்ச்சியே ஆகும். செய்தி இதழ்கள் இத்தகைய இயற்கைத் தூண்டுதலால் எழுவதில்லை. வணிக நோக்கமே செய்தி இதழ்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைகிறது. எனவேதான் கண்டனங் களையும், வசைப்பாட்டுக்களையும், இதழ்கள் பெருவாரியாக வெளி யிட்டு மக்களின் கவனத்தைத் திருப்ப முயல்கின்றன. கவர்ச்சிப் படங்களையும், ஆபாசக் கதைக ளையும் வெளியிட்டு மக்களின் இழி உணர்ச்சிகளைத் தூண்டிவிடு கின்றன. செய்தி நிறுவனங்க ளும், இதழின் பொறுப்பாளர்க ளும் இதழின் தரத்தையும், சமு தாயத்தின் முன்னேற்றத்தை யும் கருதி உழைக்க முன் வரு வார்களேயானால் பத்திரிகை உலகத்தில் வணிக நோக்கம்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

**இலக்கியப் பகுதி :**

# இருட்டிலே கபிலர்?

மு. குழந்தைவேலன், பீ. ஏ.

*[தேசீய ஒருமைப்பாட்டின் பலநூற்றுண்டுகட்கு முற்பட்ட முதல் முயற்சி 'கபிலர் அகவல்'. ஆனால் அது இன்று தமிழ் இலக்கியத் தலைவர்களாலும், புலவர்களாலும், ஆட்சியாளராலும் இருட்டடிக்கப்பட்டுக் கிடக்கிறது. பாடப் புத்தகத்தில் நிலையான இடம் பெறவேண்டிய இது பதுங்கிக் கிடக்கிறது. "அந்தக் கபிலர் அல்லர் இவர்," என்று சொல்லத்தான் தெரியும், பல புலவர்களுக்கு! எவராயினும் சரி! "யார் யார் வாய்க் கேட்பினும், மெய்ப்பொருள் காணும் அறிவு" தமிழ்நாட்டில் மங்கிவிட்டது. அக்குறையைப் போக்கும் சிறு முயற்சியே இக் கட்டுரை.]*

ஆண்ட இனம் ஒன்று அடிமைப்பட்டு, மீண்டும் தன் நிலை பெற முடியாமல் தவிக்கும் கையறு நிலையில் உள்ளது என்றால் அது தமிழினமாகத்தான் இருக்க முடியும். அடிமையாக இருந்து, நாகரீகம் என்பது என்ன என்று அறியாமல் இருந்த இனத்தவர் உயர்ந்த நிலையிலே இருப்பதைக் காண்கிறோம். வாணிபத் துறையிலே சிறந்து தமிழகத்துக்கடல் முத்து ரோமாபுரி ராணிகளின் கொவ்வைச் செவ்வாய்களை முத்தமிட்ட அந்த நாளில், குகைகளிலே வசித்தவர்கள், பச்சை மாமிசம் உண்டு பரதேசிபோல், நாடோடிபோல் வாழ்ந்தவர்கள், நாடாளும் நிலையிலே இருக்கிறார்கள். ஆனால் ஏற்றம் பெற்ற தமிழ் இனம் பிற்போக்கான நிலையிலே இருக்கிறது. முக்கியமான காரணம், அறிவுக்கு வித்திடும் கருத்தை ஆபத்து என்று இருட்டடிப்புச் செய்த சுயநலக்காரருக்கு ஒத்துழைத்தது எனலாம்.

பண்டையப் பெருமைகளைப் பேசுகிறோமே தவிர, நாம் வாழ்ந்ததற்கும், வீழ்ந்ததற்கும் உரிய காரணங்களை உணரவில்லை. ஏற்றம் பெற முயற்சி செய்யவில்லை. முன்னேற்றத்துக்கு வழி சொல்லும் பெரியோர்களின், சிறந்தோர்களின் கருத்துக்களைமதிக்க

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

செல்வாக்கு இழந்து விடும். உண்மையான தரமும் உருவாக வழி ஏற்படும்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் பத்திரிகைகளிலும் இலக்கியக்கூறுகள் உண்டு என்றும், அவை மிதவை இலக்கியங்கள் என்ற வகையில் அடக்கத்தக்கன என்றும், இதன்கண் நிறையும் குறையும் உள்ளன என்றும், பத்திரிகை உலகில் வணிக நோக்கம் இல்லாது போனால் முன்னேற்றம் ஏற்பட வழி உண்டு என்றும் அறியலாம்.

-வில்லை. அறவழி நடக்கத் துணியவில்லை. நல்ல கருத்துக்களை இருட்டடிப்புச் செய்தால் 'ஏன்' என்று கேட்க நாதியில்லை.

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்று பாடுகிறோம். ஆனால் நடைமுறைக்குக் கொண்டுவர ஏனோ தயக்கம்? தமிழ் அறிந்த தமிழன், தமிழ் அறிந்த நண்பனுடன் பேசுவது தமிழில் அல்ல; ஆங்கிலத்தில். இது நாம் அன்றாடம் செய்யும் காரியம். பிழைக்க வந்தவன் அவன் மொழியேபேசுவான். ஆனால் நாம் அவன் மொழியை விரும்பிக் கற்று அவனை நண்பனாகப் பெறுவோம்!

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்"

என்று எந்த நிலையிலோ பாரதி கூறிச் சென்றார். இதே கருத்தை நாம் ஏழு தலைமுறைக்குச் சொன்னாலும் தகும். தமிழர் வாழ்வு அந்நிலையிலே இருக்கிறது. நல்ல கருத்துக்களை மொழி பெயர்த்துப் பரப்பினால் எங்கே சிலர் ஆதிக்கம் தகர்க்கப்படுமோ என்றஞ்சித் தான் அவ்விதச்செயலில் ஈடுபடவில்லையோ என்றுகூட எண்ண வேண்டியிருக்கிறது! வேண்டாத ஆராய்ச்சி நடத்தி வீண்பொழுது போக்குவோம்; ஆனால் செய்ய வேண்டியதைச் செய்ய மாட்டோம்!

## அதோ, ஆங்கிலம்!

நம் கண்கூடாகக் காண்கிறோமே நமது நிலையையும், செயலையும்; படிப்பின் தன்மையையும். நம்மைக் காட்டிலும் மிகவும் பின் தங்கி இருந்த ஆங்கிலேயர்கள், நம் மொழியோடு ஒப்பிடக்கூடத் தகுதி அற்றிருந்தஆங்கிலம், நம் தொன்மையை எல்லாம் தோற்கடித்து எண்ணிப்பார்க்க முடியாத அளவு வேகத்தில் முன்னேறி உலகத்தில் சிறந்த இனமாக, நாகரீகம் முதிர்ந்த இனமாக, தனிச்சிறப்பு உடைய மொழியாக உலகை ஆளும் நிலையிலே இருப்பதைக் காண்கிறோம். "என் தமிழ் — என் தமிழ் — பாரர்ண்ட தமிழ் - ஆரியனை வென்ற தமிழ் — தேந்தமிழ் - தீந்தமிழ்"—என்றெல்லாம் நாம் தமிழுக்கு அடைமொழி கொடுக்கிறோம். ஆனால் தமிழைப் பாராள வழி செய்கிறோமா? இல்லை. இங்கேகவிதையாகக் கட்டுரையாகத்தமிழைப் புகழ்கிறோம். அங்கே செயலில் காட்டுகிறார்கள், சிந்தனையாளர்கள். அதற்கு உதவுகிறார்கள் ஆட்சியாளர்கள். தாய் மொழிக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை—உணர்ச்சியைப் பதவி கொன்று விடவில்லை.

நேற்று இரஷ்ய மொழியிலே வெளிவந்த சிறந்த நூல் இன்று ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கப்படுகிறது. போன வாரம் ஜெர்மன் மொழியிலே வெளியான விஞ்ஞானக் கட்டுரைகள் இந்த வாரம் ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கப்பட்டு நூலகங்களிலே காட்சி தருகிறது. இலக்கியம், விஞ்ஞானம், கலை - இப்படி ஒவ்வொரு துறையிலும் வெளியாகும் நூல்கள், கருத்துக்கள் எம்மொழியில் வந்தாலும் உடனுக்குடன் தன்மொழியிலே ஆக்கும் திறமை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்; அவர்கள் அதைக் கலையாகத், தொழிலாகப், பண்பாடாக்க் கொண்டிருக்கிறார்கள். எக்கருத்தையும் இருட்டடிப்புச் செய்யும் இழிந்த முறை அவர்களிடையே இல்லை புரட்சிக் கருத்துக்களையும் பாராட்டி, வரவேற்று நாட்

டின் உயர்வுக்கு வழிவகுக்கும் முறையாக அமைத்துக்கொள்கிறார்கள். அதனால் வளமில்லா மொழி வளத்தோடு வாழ்கிறது. அதனால் அவ் இனமே எழிலோடு, ஏற்றத்தோடு வாழ்கிறது. நாம் காண்கிறோம்.

நாம் தாய் மொழியிலே கற்பிக்கும் அளவுக்கு நம்மிடம் விஞ்ஞான நூல் இல்லை. பொருளாதார, அரசியல் நூற்கள் இல்லை; அதனால் எப்படித் தாய் மொழியிலே கற்பிப்பது என்று ஏங்கும் பரிதாப நிலையிலே இருக்கிறோம், 1963ல். ஆனால் நாம் பேசுவது மட்டும் குறைவில்லை. பாராண்ட மன்னர் பரம்பரை; நாட்டாண்ட அரசர் எங்கள் இனம் என்று கூறுகிறோம். புதுமைக்கு வித்திடும் சிறந்த கருத்துக்களை அடுத்தவர் கண்ணுக்குப் புலப்படாமல் மூடிவைக்கிறோம். தப்பித் தவறி வெளி வந்தால் அது சிலரைப் பாதிக்கிறது; மதத்தைப் பாதிக்கிறது; ஒற்றுமையைப் பாதிக்கிறது என்று எதிர்ப்புக் கிளப்பி நாட்டில் நடமாட விடாமல் செய்கிறோம். நல்ல கருத்துக்களைப் பரப்பும் நல்லவர்கள் அன்றும் இருந்தார்கள்; இன்றும் இருக்கிறார்கள்; என்றும் இருப்பார்கள். நன்மை செய்பவர்களைத் தலைதூக்க விடலாகாது என்ற கருத்துக்கொண்டவர்கள், நல்ல கருத்துக்களை நாட்டில் பரவவிட்டால் சிலரின் உல்லாச வாழ்வை உருக்குலைக்கும் என்று அஞ்சி அக்கருத்தைப் பரவ விடாமல் தடுக்க வழி செய்யும் இருட்டடிப்புத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே இருக்கிறார்கள். இருட்டடிப்புப் பகுதியை வெளிக்காட்ட நல்லவர் முயன்று கொண்டே இருக்கிறார்கள். அதனால் இடைவிடாத போராட்டம் நடந்துகொண்டே இருக்கிறது. சில நல்லவர்கள் தம்மை அறிந்தோ; அறியாமலோ சூழ் நிலையால் சிக்குண்டு, விக்கவும் முடியாமல், கக்கவும் முடியாமல், பெற்றிருக்கும் பதவி, வீசப்பட்டிருக்கும் உரிமை; திணிக்கப்பட்டிருக்கும் கடமை, இவைகளைப் பொறுத்து, வாயிருந்தும் ஊமையாக, ஆமைபோல் அடங்கி நடக்கும் நிலையிலே இருக்கிறார்கள். அதனால் தவறு என்த் தெரிந்தும் செய்யப்படவேண்டியவை செய்யப்படாமல் இருப்பதை உணர்ந்தும் உணராதவர் போல் நடக்கவேண்டிய நிலையிலே இருக்கிறார்கள்.

## இதோ எடுத்துக்காட்டு!

கபிலர் என்பவரைப் பற்றிப் படித்தவர்களுக்குத் தெரியும். அவர் பிறந்த ஊர் வேதநாயகனூர் வாழும் திருவாதவூர் என்று திருவிளையாடற் புராணத்திலிருந்து தெரிகிறோம். கந்த புராணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் இவைகளைப் படிக்காதவர் இருக்கமாட்டார்கள். கணவனையே வணங்க வைத்துப் பெருமை பெற்ற சிவத்தொண்டரான காரைக்காலம்மையாரைப்பற்றித் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள்! ஒத்த வாழ்வு விரும்பிப்போற்றும் உயர் நிலையிலே நம் மனம் இருந்தாலும், கணவன், மனைவி அன்போடு, பாசத்தோடு வாழும் ஒழுக்க நெறியை நாம் மகிழ்ந்து போற்றும் தன்மையிலே இருந்தாலும், மனைவி மதம் என்ற பிடியிலே அகப்பட்டு, கொண்டவனை மறந்து, துறந்து பிள்ளைகளை விட்டு விட்டுப் பேயுருவாகும் நிலையையும் நாம் ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்! இதுபோல் நம்பக்கூடாத, நடக்கக்கூடாத, நடக்கமுடியாத செயல்களைச்செய்தார்கள் என்று கூறும் புராணம் படிக்கிறோம்.

ஆனால் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக, ஒளிகாட்டும் கலங்கரை விளக்கமாக, மனித சமுதாயம் அனைத்தும் நலம் பெற்று வாழ வழிவகுக்கும் உயர் கருத்துக்களை வெளியிடுவதில்லை.

அறிவுத் திறம் மிகுந்தோரும் ஒரு ஆசிரியர் பிறந்த ஊரையும், குலத்தையும், காலத்தையும் பற்றித்தான் மிகுந்த அக்கரையுடன் பொழுதைச்செலவழித்து ஆராய முற்படுகிறோமே தவிர அவர் சொன்ன சிறந்த கருத்தென்ன, அதன் சாரம் என்ன, அதனால் நன்மை என்ன, அக்கருத்தை எம்முறையில் மக்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாகப் பயன்படுத்தி ஏற்றம் பெற வழி செய்யலாம் என்று கருதுவதில்லை. நம் ஆராய்ச்சியை அதற்குப் பயன்படுத்துவதில்லை.

கபிலர் புறநானூற்றுப் பாடல் 201ல் " அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே " எனத் தம்மையே கூறுவதாலும் மாறோக்கத்து நப்பசலையார் புறம் 126ல் "புலன் அழுக்கற்ற அந்தணாளன்" என்று கூறுவதாலும் இவர் அந்தணர் என்று நாம் அவர் சாதி பற்றி முடிவுகட்டத் துணிகிறோம். சாதி, சாதி என்று தான் நாம் சாவை நோக்கி ஓடுவோமே தவிர அவர் சொன்ன கருத்து என்ன என்பதை அறிய அவ்வளவு முயற்சி எடுப்பதில்லை.

சாதி ஒழிந்த பின்பு காலம். கபிலர் இன்னார் இன்னாருடன் பேசியதால், இன்ன புலவர் வாழ்ந்த காலம் இத்தனையாவது நூற்றாண்டு, ஆகையால் அவர் காலமும் அதே நூற்றாண்டு என்று ஒருவர் சொல்ல; மற்றவர் இல்லை; அவர் பாட்டின் நடை இந்தக்காலத்துப் புலவர் நடைக்கு மாறுபட்டிருப்பதால் அவர் காலம் வேறு, இவர் காலம் வேறு என்று வேறுபாட்டை வளர்க்க, இப்படித்தான் பொழுதெல்லாம் வீண் நாளாகச் செய்து தமிழுக்கோ, தமிழ் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மை செய்வதை மறுக்கிறோம்.

அடுத்து, நாம் அவரைப்பற்றி அறிந்தது அவர் சார்ந்த மதம். இவர் சிவன், விஷ்ணு பலதேவர், பிரமன், முருகன், இவர்களைப்பற்றிப் பாடியுள்ளதால் விரிந்து பரந்த சமயக் கருத்துடையவர். எல்லா மதமும் சம மதம் என்றவர். இது ஒரு சாரார்

## எங்கே அவர்கள்?

"சரஸ்வதி மகாலும், லட்சுமி விலாசமும், பார்வதி மண்டபமும் கட்டி வைத்த தஞ்சாவூர் மன்னன் குடும்பம் எங்கே? தப்பித் தவறி சிந்திப்போன அந்த வம்சத்துக்கு ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலை கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறதே! காரணமென்ன? வீண் பூசைகளும், கும்பாபிஷேகங்களும் அல்லவா? அவர்கள் நடத்திய பிராமண போஜனமும், தட்சணையும், கோவில் பூஜையும் என்ன பலனையளித்தது? சரஸ்வதி பூஜையின் கொலுவினால் அல்லவா தஞ்சாவூரில் நாயுடுக்களின் ஆட்சி ஒழிந்தது? க்ளைவும், டூப்ளேயும் எந்த சரஸ்வதியை வணங்கினார்கள்? அவரவர்களின் முயற்சியும், கடமையும், எந்தத் தொல்லைக்கிடையிலும் எடுத்த காரியத்தை முடிக்கும் துணிச்சலும் இருந்தால் எல்லா லட்சுமிகளும் அங்கே வந்திடுவார்கள். இதுவே உலக அனுபவமும் சாஸ்திரங்களின் கருத்தும் ஆகும்."

—கைவல்ய சாமியார்

கொள்கை. மற்றொரு சாரார், அவர் அதிகமாக இன்ன கடவுளைப் பற்றிப் பாடி இருப்பதால் இன்ன கடவுள் இந்த மதப்பிரிவின் தலைவர்களில் ஒருவர்; ஆதலால் இவர் இந்த மதத்தில் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறுவர். இதிலே வாதம்.

கபிலர் பறம்பு மலையை ஆண்டு தமது கொடைச்சிறப்பால் மாரிக்கு உவமையாகப் பேசப் பட்ட வள்ளல் பாரியின் நண்பர். பத்துப்பாட்டிலும், எட்டுத்தொகையிலும், பதினெண் கீழ்க் கணக்குகளிலும் இவர் இயற்றிய இனிமையான பாடல்கள் திகழ்கின்றன. பாரியைத் தமதுள்ளத்து உறையும் தெய்வமாகப் போற்றி வாழ்ந்து அழுக்காருல் பறம்பைக் கொண்ட இழியுடைய மூவேந்தர் செயல் கண்டு வருந்தி, பறம்பை விட்டு வெளியேறிய பாரியின் மகளிர் அங்கவை, சங்கவைக்கு மணம் முடித்து வைக்க அரும்பாடு பட்டு, எடுத்த முயற்சியில் வெற்றி பெற்று, அதன்பின் வடக்கிருந்து உயிர் நீத்தார் என்று அறிந்திருக்கின்றோம். சிலர் பேரியாற்றங்கரையில் தீப் பாய்ந்து இறந்தார் என்றும், அங்கே அவர் நினைவின் பொருட்டு நடப்பட்ட கல் உள்ளதென்றும் அதனைக் கபிலக்கல் என்று வழங்குகின்றனர் என்றும் கூறுகிறார்கள், தமிழ்நாட்டில் எந்தக் கருத்தைத் தான் முழுமனதுடன் எல்லோரும் ஏற்றார்கள்? இன்று நம்முடன் வாழும் பெரியவர்களைப் பற்றியே நாளை கால ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஒன்றுக்கு மேற்பட்ட காலத்தை ஆதாரத்துடன் காட்டும் திறமைசாலிகள் இருக்கிறார்களே! தமிழ் நாடு செய்த தவப்பேறு! நிற்க.

## யார் இவர்?

காசுக்காக, உடலுக்காக, வாழாது உலகுக்கு அறிவூட்ட, நல்வழிப்படுத்த; வாழ்ந்த உயர் கவிஞர் கபிலர். மூவேந்தரையும் துச்சமென மதித்து "நீர் உம் மக்களுடன் ஆடிப்பாடிப் பரிசில் பெற வரும் இரவலர் போல் வந்தால் பாரி பறம்பை ஈந்து விடுவார் எளிதில் கைப்பற்றலாம்" என்று இகழ்ச்சியாகத் துணிவோடு கூறிய அஞ்சா நெஞ்சம் படைத்த, வாழ்தல் வேண்டி பொய் கூரு உண்மைக் கவிஞன். எல்லாரும் சாதியையும், மதத்தையும் போற்றும் வரை; இச்சகம் பேசுவதைக் கைவிடாத வரை; பச்சோந்தியாக மாருமல் இருப்பது வரை நானும் சாதியைக் காப்பாற்றத் தவற மாட்டேன். மதத்தை வளர்க்கத்தவற மாட்டேன்; இச்சகம் பேசுவதை விட மாட்டேன்; வேடமணிந்து பொய்யுரைப்பதை விட மாட்டேன். என்று கூறும் நாலாந்தரக் கவிஞன் அல்லர் கபிலர். வாழ்விற்காக அஞ்சிச் சாகாத மாவீரன்; இச்சகம் பேசாத மாண்புடைய நா பெற்றப் பேரறிஞன். இது நாம் படித்தது. நம் கண்ணுக்குக் காட்டப் பெற்றது.

இன்னும் ஒரு பகுதி ஏற்றமான பகுதியுள்ளது. அதை, என்றும் என் அன்புக்கும், மதிப்புக்கும் உரிய குத்தூசி ஆசிரியர் அவர்கள் சொல்லிய நாளுக்கு முன்பு வரை நான் பார்க்கவில்லை ;படிக்கவில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவிக்கிறேன். கூடுமானவரை பலர் என் நிலையில்தான் இருப்பார்கள் என்று நான் கூறு விட்டாலும் சிலராவது என்னைப் போல் இருப்பார்கள் என நம்புகிறேன்.

கபிலர் இயற்றிய செய்யுட்கள், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு; பதிற்றுப் பத்து; அகம்; புறம்; பத்துப்பாட்டு இவைகளில் காணப்படுகிறது. இன்னா நாற்பது இவரது தனி நூல். இவை பற்றித் தெரியும். ஆனால் கபிலர் பாடிய கபிலர் அகவல் 138 அடிகளைக் கொண்ட ஒரு நூல் இருக்கிறது என்பது தெரியாது.

அந்த 138 வரிகளில் உலக இயற்கை, மக்கள் இயற்கை, நிலையாமை; அறவுரை; கூற்றுவன் கொடுமை; மக்கள் அறியாமை; சூழ்ச்சி; சாதி வரலாறு; கலப்பு மணம்; கபிலர் வரலாறு; இயற்கையின் பொதுத் தன்மை; மக்கள் கடமை; இவ்வாறு பல தலைப்புக்கள் கொடுத்துச் சிறந்த கட்டுரைகள் எழுதும் அளவுக்கு உயர்ந்த கருத்துமணிகளை விதைத்துச் சென்றிருக்கிறார் கபிலர். அறிவு படைத்த ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய வரிகள். சிந்திக்க வைக்கும் சிறந்த வரிகள்.

“நான்முகன் படைத்த நானா வகை உலகில்'' என்று பிரமனிடம் இருந்து தொடங்கும் கபிலர் “எல்லாப் பிறப்பும் இயற்கையோ? செயற்கையோ?” என்று சாக்ரடீஸ் போல ஒரு சிறிய கேள்வி கேட்டுவிட்டுத்

''துஞ்சும் போதந்த பஞ்சேந்திரியம்
என்செயா நிற்குமோ? எவ்விடத்தேகுமோ?”

என்று பெரிய வினா எழுப்புகிறார். இவ்வினா மதவாதிகளின் பிறப்பு பற்றிய கொள்கைகளையே உடைத்தெறியும் அறிவு வேட்டன்றோ? இதனால்தான் கபிலர் அகவல் பலர் கண்களுக்குத் தட்டுப் படாமல் போய்விட்டதோ என்று நாம் எண்ணினாலும் தவறில்லையே?

நோன்பிருந்து உடலைத் தூய்மையாக்கி இறைவனை நாடிப் போக வழியைப் பழுது பார்த்துச் சுத்தமாக வைக்கும் நோன்பிகளைத் — துறவிகளை — ''ஆற்றலுடையீர்!” என்று அன்பாக அழைப்பதைக் கேட்கும்போது உண்மையிலேயே விசுவாமித்திரர், வசிஷ்டர் போன்றோர் ஆற்றலுடையவர்கள்தானோ என்று கூட நாம் எண்ண வேண்டி இருக்கிறது. ஆனால் அடுத்த வரிகள் நம் சிந்தனையைத் தூண்டி விட்டு நம்மை விழிப்படையச் செய்கின்றன.

''ஆற்றலுடையீர்! அருந்தவம் புரிந்தால்
வேற்றுடம் பாகுமோ? தமதுடம் பாகுமோ?
உண்டியை உண்குவது உடலோ? உயிரோ?''

எனக் கேட்டு மறைமுகமாக நோன்பிருந்து இறைவனைக் காண வழி வகுப்போரைத் தாக்குகிறார். தாக்கும் அதே எல்லையில் நில்லாமல் அவர்களுக்கு

## இராவணப் பெரியார்

''இராமாயணக் கதைப்படி எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் இராவணன் அறிவு மிக்கவன் என்பதும், நன்கு கற்றவன் என்பதும், வலிமை மிக்கவன் என்பதும், பெருந்தன்மையும் பரந்த உள்ளமும் கொண்ட சிறந்த பேரரசன் என்பதும், மனிதப் பிறவியிலேயே மிக உயர்ந்த, மிகச் சிறந்த பண்புடைய உலகச் சான்றோர்களில் ஒருவன் என்பதும் தெளிவாகும்.''

—M. S. பூர்ணலிங்கம் பிள்ளை
(''இராவணப் பெரியார்'' 1928–பக்கம்–71)

அறிவுரையும் சொல்கிருர். "வாழும் நாள் இளமையிலும், தூக்கத்திலும், முதுமையிலும் கழிந்தன போக எஞ்சியுள்ள நாள் மிகவும் கொஞ்சம். ஆற்றங் கரையில் நின்ற மரம் போன்றது வாழ்வு. அதனல் நல்ல காரியத்தை நாளை என்ளுது, இன்றே, இப்போதே செய்து புகழ் உடம்பு பெற்று சிறப்பாக வாழுங்கள். இறப்புக்கு நல்லவர், தீயவர், இளையவர், முதியவர் என்ற பாகுபாடு இல்லை" என்று தெளிவுரையும் கூறிச் செல்கிருர்.

## மடமைக்கு வேட்டு

இறந்த மூதாதையருக்குத் திதி கொடுக்கும் கண்மூடி வழக்கத்தையும். அதை நாட்டில் பரப்பிய புரட்டர்களையும் "இந்த நாட்டில் மூடத்தனம் இருப்பது போல் ஏட்டியர், மிலேச்சர்; ஊணர்; சிங்களர்; சோனகர்; யவனர்; சீனத்தர் முதலிய பறபல நாட்டினரிடையும் இப்பழக்கமும் இல்லை; இப்பழக்கத்தை ஏற்படுத்துவோரும் இல்லை'' என்ற ஆதாரத்துடன் வன்மையாகக் கண்டிக்கிருர்.

மாருேக்கத்து நப்பசலையார் கூறுவது போல், "புலன் அழுக்கற்ற அம் தண் ஆளர்" தான் கபிலர். நால்வகைச் சாதி புகுத்தி பல சங்கடங்களைப் புகுத்தியது குறித்து நொந்து பேசுகிருர்:

"பூசுரர்ப் புணர்ந்து புலைச்சியர் ஈன்ற
புத்திரர் ஆயினோர் பூசுரர் அல்லரோ......
மாந்தரிற் பேதமாம் வடிவு எவர் கண்டுளார்......
கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்......
சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும்......
......மேன்மைப்பட்டு மாதவ ராகி வயங்கினரன்றோ?''

எனக் கேட்கும் கேள்வி அறிவின் எல்லைக்குச் சிந்தனையின் அற்றத் துக்கே இழுத்துச் செல்வது போல் இருக்கிறது. இவரை ஒரு நாத்திகன் என்று சொல்லும் அளவுக்கு, ஓர் பகுத்தறிவுவாதி எனும் எல்கைக்கு, சாக்ரடீஸ் கபிலர் சார்புடையவரோ என்று ஐயுறும் அளவுக்கு நம் சிந்தனை ஓட்டம் செல்கிறது.

நாம் கபிலரைப் பற்றி அறிந்திருந்தது அவர் பார்ப்பன வகுப்பினர்; பல தெய்வ வழிபாடுடையவர் என்பதே. இது போன்ற கருத்துக்களை நாம் அறியவில்லை. இதை நாம் இருட்டடிப்பு என்பதா? அல்லது நாம் முயன்று படிக்கவில்லை என்று நம்மையே நாம் நொந்து கொள்வதா? எப்படி இருப்பினும் ஒரு உயர்ந்த சீர்திருத்தக் கவிஞரின் சிறந்த படைப்பையும், சிறந்த நீதியையும்; உயர்ந்த உள்ளத்தையும் நாம் புரிய வாய்ப்பு இல்லாமல் போயிற்று என்பதே ஆகும்.

உயர்ந்த உள்ளப் போக்கு கொண்ட ஞானியைப் போல் அவர் கூறும் அறிவுரையைக் காணும்போது இளங்கோவின் ஒளி முகத்தைக் காண்கிருேம். உயிர்க்கு உறுகண் செய்யலாகாது என வேண்டும் அவர் அறவுரையின் தெளிவிலே சமண மதச் சீலர்களின் திருமுகத்தைப் பார்க்கிருேம். சாதி சமய கருத்துக்களை வன்மையாகக் கண்டிக்கும் நிலையிலே சிறந்த மெய் ஞான சித்தர்களின் உருவத்தைப் பார்க்கிருேம். அஞ்சா நெஞ்சத்திலே தமிழ்ப் புலவனைக் காண்கிருேம். நமக்கு அவர் முதலில் காட்சி தந்தது எத்தனையோ சிறந்த புலவர்களில் ஒருவராகத் தான்.

"குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே" அதனால்
எந்நாளாயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையும், கொலையும், களவும் தவிர்த்து
நிலைபெற அறத்தில் நிற்பவை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி உரைப்பது பிழைஎனப் படாது
சிறப்பும், சீலமும் அல்லது
பிறப்பு நலம் தருமோ?..."

என்ற உயர்ந்த வினா எழுப்பிச் சிறந்து நின்ற கபிலர் அருளாளர் புத்தர், டால்ஸ்டாய், லிங்கன், ஏசு இவர்களின் முதல் உருவாம் அருள்உருவமாக நம் கண்ணுக்கு முதலாவது தட்டுப்படவில்லை.

சில நூலாசிரியர்களை நாம் புரிய முடியாமல் இருட்டடிப்புச் செய்து, சில காரணங்களுக்காக நம்மை வெறுக்கச் செய்கிறார்கள். சிலரைக் கவிநயம் இது போன்ற தன்மையை எடுத்துக் காட்டி, இருண்ட பகுதியை மறைத்துப் புகழவைத்து நம்மையே நாம் முட்டாள் என ஏற்றுக் கொள்ளச் செய்கிறார்கள். சில கருத்தைப் படித்தால் பாவம் என்று கதைகட்டிப் பயமுறுத்துகிறார்கள். சில கருத்துக்கு விளக்கம் தந்தால் தேவநிந்தனை என்று தீப்பட்டம் சூட்டுகிறார்கள். சில கருத்தைத் திருத்துகிறேன்' என்று சொல்லி விபரீதப் பொருள் கொடுத்து வெறுக்க வைத்து விடுகிறார்கள். வேண்டாத சில கருத்துக்குப் புது மெருகிட்டு, புராண மெருகிட்டு, புண்ணியம், மோட்சம் என்று விலை பேசி வலையில் இழுத்துப்போட்டு அறிவை மழுக்கி விடுகிறார்கள்.

ஒவ்வொரு ஆசிரியரையும் பற்றி அறிய மேனாட்டார் போல் அவர் எழுதிய நூலனைத்தையும் ஒன்றாக வெளியிடும் பழக்கம் வளர வேண்டும். அது ஒத்த கருத்தோ ஒவ்வாததோ; அறிவுள்ளதோ, இல்லாததோ; புலவன் பாடிய பாடல் அனைத்தும் வெளிவர வேண்டும். அந்நிலை வளர்ந்தால்தான் ஒரு புலவனின், எழுத்தாளனின் கருத்து இன்னது என்பது தெரிய முடியும்.

மதுரையில் எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றினார்கள்; அதனால் சிவன் சிரித்தார், சைவம் தளிர்த்தது என்று சிறிதும் வேதனையில்லாமல் கூறுகிறோம்! டென்சிங்கால் ஆண்டுக் கணக்காக எடுக்கப்பட்ட முயற்சியால் கடினப்பட்டு கண்டு பிடிக்கப்பட்ட இமயமலையின் உச்சிக்குக் காரைக்காலம்மையார் எறும்புருவில் தலைகீழாக ஏறிச்சென்று சிவனைக் கண்டார் என்பதை மூளை நோகாமல் எழுதினார்கள்; புன்னகையோடு அம்மையாரை மனக்கண்ணால் கண்டு 'ஆமாம்' என்று தலையசைக்கிறோம். பெற்றபிள்ளையை வாளால் அரிந்து சமையல் செய்த கோரக் கொலை நிகழ்ச்சியை வெளியிடுகிறார்கள்; புண்ணியம் என்று நாம் போற்றிப் படிக்கிறோம். சிவன் மகிமையை எண்ணி ஆடுகிறோம். பரதேசி பின்னால் கொண்டவளை அனுப்புவது நாயனார் செயலாக மாறுகிறது! நமக்கு மான உணர்ச்சி குறைந்ததாகத் தெரியவில்லை; வெறுப்பும் ஏற்படவில்லை; இயற்பகையைப் பாராட்டுகிறோம். ஆனால் வேண்டாத சாதி ஏன்? மக்களுக்கு உதவி செய்யாவிட்டாலும், தொல்லை கொடுக்காமலாவது இருக்கா்த மதம் ஏன்? அறிவுக்கும் ஆராய்ச்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

புலவர் வி. பொ. பழனிவேலன், பி. ஓ. எல்.

# வரவும் செலவும்

*[நாட்டிலும் வீட்டிலும் உள்ள கேடுகளையும் குறைகளையும் நாட்டுப் பற்று, மதப் பற்று, சாதிப் பற்று, வழக்கம், பழக்கம்—காரணமாக மூடி மூடி வைப்பது இந்நாட்டின் தனிச் சிறப்பு! இப்பண்புகளைப் பட்டுத் துணி போர்த்தி மூடாதபடி, அதை நீக்கிக் காட்டுகிறார், கட்டுரையாளர். புண்ணைக் கீறி மருந்து வைத்துக் கட்ட வேண்டிய பொறுப்பு மக்களுடையது; மக்களால் அமர்த்தப்பட்டுள்ள அரசாங்கத்தினுடையது.]*

இந்நிலவுலகில் உள்ள நாடுகள் பல. பெரிய நாடுகள் சில. சிறிய நாடுகள் பல. செல்வ நிலையில் சீர்பட்ட நாடுகள் பல. சீர்படாத நாடுகள் பல. நமது நாவலந்திட்டெனும் 'இந்தியா'வும் பொருள் நிலை வளப்படாத நாடுகளுள் ஒன்றேயாம்.

நாடு விடுதலையெய்தி பதினாறாண்டாகியும் நிலைமை சீர்பட்டிலது; ஏனெனின், அரசாங்கம் பல திட்டங்களைச் செயல்படுத்தப் பெருந்தொகை வேண்டியுளது. அயல்நாடுகளில் சென்று கடன் பெற்றும் போதவில்லை. உள்நாட்டில் பல்வேறு வகையில் பொதுமக்களிடமிருந்து பொருள் பெற்றும் நிறைவெய்தவில்லை.

நாளுக்கு நாள் நெருக்கடி முற்றுகிறதேயன்றி குறையவில்லை; குறைவதற்குரிய அறிகுறியும் தோன்றவில்லை. அரசுக்கு இருக்கும் தொல்லைகள் ஒருபுறமிருக்க, பொதுமக்கட்காவது நலமாயிருக்கிறதாவெனின், இல்லையென்றே கூறலாம்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

சிக்கும் தட்டுப்படாத, எதிர்த்து நிற்கும் ஆற்றல் அற்ற ஒன்றில் ஏன் நம்பிக்கை வேண்டும் என்ற கருத்துக்களைத் தாங்கி நிற்கும் கவிதைகள், கட்டுரைகள் வெறுக்கப்படுகின்றன; ஒதுக்கப்படுகின்றன; இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. அக்கவிஞர்களை மக்கள் வெறுக்கும் அளவுக்கு இருளிலே தள்ளுகிறார்கள். அப்படி எத்தனை முத்துக்கள், மாணிக்கங்கள் இருட்டிலே மறைக்கப்பட்டுக் கிடக்கின்றனவோ?

கபிலரைப் பற்றி எழுதி ஒரு குறை சிறிது போக்கினேன் என்று நினைத்தால் அப்பெருமை மறைந்திருந்த பகுதி—'கபிலர் அகவல்'— தந்து அப்பெரும் கவிஞனைப்பற்றி விளக்கம் கொடுத்த குத்தூசி ஆசிரியர். அவர்களையே சாரும்.

வாழ்க்கைச் செலவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உயர்ந்து கொண்டே போகிறது. நடுத்தர வருவாயுள்ளோரும், கீழ்த்தர அலுவல் புரிபவரும், நாட்கூலிக்குழைப்போரும் வாழ்க்கை நடத்துவது நாடோறும் கடினமாகிக் கொண்டே வருகிறது.

## அரசு செய்வதென்ன?

அரசினர் இயன்றளவு முயன்று வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுக்க ஆவன செய்தும் செம்மைப்படவில்லை. அரசாங்க அலுவலர்களிடையே நிலவும் 'கைக்கூலி' பெறும் கயமையைப் போக்க முடியவில்லை. அஃது நாடோறும் பல்கிப் பரவுகிறது.

அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருள் முட்டுப்பட்டால் கடன் திட்டங்களையும் திறைத்திட்டங்களையும் தீட்டி வெளியிட்டுக் கொண்டே உளது.

உணவுப் பொருள்கள் பற்றுக் குறையைப் போக்க மக்கள் தொகைக் குறைப்பு செய்ய, 'குடும்பக் கட்டுப்பாட்டு முறை' கையாளப்பட்டு துரிதமாக்கப்படுகிறது. சீனாவும் பாகிஸ்தானும் கூட்டாக இந்தியாவிற்கிழைக்கும் இடுக்கண்களால் ஏற்பட்டுள்ள செலவுக்கு அளவில்லை. அயல் நாட்டார் உதவியை நாட வேண்டிய நிலைமை உருவாகிறது.

பொதுவாக நோக்குமிடத்து அரசாங்கத்திற்கும் மக்கட்கும் பொருள் தட்டு முற்றுகிறதேயன்றிக் குறையக் காணோம்.

## வாணிகர் செயல்

நம் நாட்டிலுள்ள வணிகர்கள் பல துறையினர்: கூல வாணிகர், பல்பொருள் வாணிகர், பல சரக்கு வாணிகர், காய்கறி வாணிகர், துணி வாணிகர், அணிகல் வணிகர் ஏனைய தேவையான பொருள்கள் விற்கும் வாணிகர் ஆகியோராவர். இவர்கள் யாவரும் தங்கள் பொருட்பெருக்கத்தை தம் குறியாகக் கொண்டு செயலாற்றுகின்றனரே யன்றிப் பொதுமக்கள் நலனையும் போற்றுபவராக இல்லை. தந்நலனும் பிறர் நலனும் சமமாகக் கருதும் மனப்பான்மை வாணிகர்களிடம் இல்லை.

வாணிகம் செய்வார்க்கு
வாணிகம், பேணிப்
பிறவும் தம்போற் செயின்

என்ற வள்ளுவர் வாய்மொழியும்,

கொள்வதும் நிறை கொளாது
கொடுப்பதும் குறை கொடாது

---

### மதம் இதோ!

"மதம் என்றால் என்ன? அச்சமே மதம். அச்சமே பலி பீடத்தைக் கட்டுகிறது; பலியும் தருகிறது. அச்சமே ஆலயத்தைக் கட்டுகிறது; அதில் மனிதனின் தலையைக் கவிழ்த்து மண்டியிடச் செய்கிறது. மதம் அன்பை வளர்ப்பதாக நடிக்கிறது. ஆனால், அடங்கி நடத்தல், தன்னடக்கம், தன்னல மறுப்பு, மன்னிப்பு, பணிந்து போதல்—ஆகிய அடிமைப் பண்புகளைக் கற்பிக்கிறது. மதப்பற்றும் நடுக்கமும் கொண்ட உதடுகள், "அவன் என்னைக் கொன்றாலும் சரி, அவனையே நான் நம்புவேன்", என்று அடிக்கடி சொல்கின்றன. அவமானத்தின் — அழிவின்—உச்சமல்லவா இது? மதம் தன்னம்பிக்கையை, சுதந்தரத்தை. ஆண்மையை, துணிச்சலை, தற்காப்பு முயற்சியை-கற்றுக்கொடுப்பதில்லை.

—இங்கர்சால்.

பல்பண்டம் பகர்ந்து வீசும் புண்பினர்
வாழ்ந்த நாடென்பதையும் இவர்கள் எண்ணிப் பார்ப்பதே யில்லை.

சிறு பொருள்களைக் கொண்டு பெரும் பொருளையீட்டி, சுருக்கச் சீமானாக வேண்டுமென்பதே குறியாகக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். கள்ள வாணிகஞ் செய்தோ, கடு விலைக்கு விற்றோ, வஞ்சித்தோ, பொய்த்தோ, கவருடியோ பெரும் பொருளீட்ட வேண்டுமென்பதே இன்றைய வாணிகர்களின் கோட்பாடேயன்றிப் பிறிதன்று.

## செல்வர் நிலை

பெருஞ் செல்வம் பெற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை. பொருள்களின் விலையால் வாழ்க்கைத் தரம் மிகினும் குறையினும் சரி செய்து கொள்வர். ஏத்தனையோ செல்வர் தேவையற்ற வகையிலும், விரும்பத் தகாத வழிகளிலும் பொருளைப் பாழாக்குகின்றார்கள்; ஆரவாரத்தில் ஆழ்ந்து கிடக்கின்றார்கள். சிலர் பொருள் காத்த பூதமாகவும் இருக்கின்றனர்.

பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம், கவருடுதல், மது வருந்தி மயங்கிப்பிதற்றல், உந்தி லேறி உலா வருதல், ஆகிய வேண்டாத வழிகளில் பொருளைச் செலவிடுகின்றனர். பயனற்ற வகையில் பெரும் பொருள் பாழாகின்றமை அரசாங்கக் கவனத்திற்குரித்தே.

## கோவில்களின் நிலை

இந்நாட்டில் தெய்வத்தின் பேரால் செலவிடப்படும் செல்வம் சொல்லுந்தரமன்று. தேவ குலங்களில் பணி புரிவோரால் களவாடப்படும் பொருளும்கணக் கற்றதே. கோவில்கட்குத் திருப்பணி செய்வதாகப் பொது மக்கள் பால் பெரும் பொருளீட்டிப் பிழைக்கின்றவர் பலர்; உண்டியல் மூலம் கல் முதலாளிகட்குக் கிடைக்கும் பொருளோ திகைப்பையுண்டாக்குகின்றது.

திருப்பதி வேங்கடாசலபதி, பழனி மலையாண்டி, திருவரங்கப் பெருமாள் முதலியோருக்கு இலக்கக்கணக்கில் மாத வருவாய் வருவதாகச் செய்திகள் தாளிகைகளில் மாதந்தோறும் வெளியாகின்றமை யாவருமறிவர். இதனை எண்ணுங்கால் வியப்பும் வேதனையும் உண்டாகின்றன. மக்கள் எத்துணைப் பகுத்தறிவற்றவர்களாக இருக்கின்றனர் என்பதற்கு இதைத் தவிர வேறு சான்று தேவையில்லை.

கோபுரம் கட்டுவதிலும், கோவில்கள் கட்டுவதிலும், பாழடைந்த கோயில்களைப் புதுக்குவதிலும் அவற்றிற்கு குடமுழுக்காட்டுவதிலும்பாழாகும் செல்வம் அந்தோ! எத்துணை இலக்கங்கள்! இதனைக் கொண்டு நாட்டு நலத்திட்டங்கள் பல நிறைவேற்றி நடமாடுங் கோவில்கட்குரிய தொல்லைகளைத் தொலைக்கலாகாதா?

கல்விக்குப் பணமில்லை; தொழில் நடத்தப் பணமில்லை; அணை கட்டப் பணமில்லை; ஆக்க வேலைக்குப் பணமில்லை; அரசியல் செலவுகட்குப் பணமில்லை; நாட்டில் நெருக்கடி நிலை. இந்த நேரத்தில்தான் (கடவுள்) தெய்வத்தின் பேரால் பெரும் பொருள் பாழாக்கப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த அரசு முன்வரவில்லை.

## அரசியல் அலுவலர்...

அரசாங்கத்தில் அலுவல் பார்ப்பவர்கள், அமைச்சர், சட்ட மன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் பிறர் நலத்தையும்; அரசாங்கத்தின் நல்லாட்சியையும் நாடுபவர்களாயின் தமது ஊதியத்தைத் தேவைக்குமேல் வாங்காமல் இருக்கலாம். காந்தியாரின் அடிச்சுவட்டை அடியொற்றி வாழ்கிறோமென்று பறைசாற்றுகின்ற பெருமையுடையோர் தேவைக்குத் தக்கவாறு ஊதியத்தை நிலை பெறச் செய்யலாம். இதனால் அரசுக்குப் பெரும் பொருள் எஞ்சும்

பெரும்பொருள் செலவு செய்து மன்றங்களில் உறுப்பினர்களாகின்றவர்கள் பெரும்பாலும் செல்வர்களாகவே இருப்பர். அவர்கள் தந்நலமற்ற தொண்டர்களென்று பொதுமக்களிடம் புகன்று அவர்களது வாக்குகளைப் பெற்று அவர்களுக்குச் சேவை செய்ய முன் வருகின்றவர்கள் ஏன் மாத ஊதியம் பெற வேண்டும்? போக்கு வரவு, பிறவசதிகள் யாவும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளுகின்றதன்றோ?

ஆனால், இக்கால உறுப்பினர்களும் மற்றையோரும் பதவி மனப்பான்மையும் பண மனப்பான்மையும் மிக்கவர்களாகவே இருக்கின்றனர் என்பது ஒரு தலை. செல்வரும் ஒப்புரவாற்றும் உயர்பண்பு அற்றவராயுளர்.

## அறநிலையமும் மடமும்

இந்நாட்டில் அறநிலையங்களின் பேராலும், மடங்களின் பேராலும் உள்ள சொத்துக்கள் ஏராளம். ஆயிரக்கணக்கான, நூற்றுக் கணக்கான காணி நிலம் உடையனவாயிருக்கின்றன. அவற்றின் தலைவர்களாயிருப்போரும் பொறுப்பாளர்களாயிருப்போரும் ஆரவார வாழ்வு வாழ்வதற்கே அப்பொருள் பயன்படுகின்றது. அரசாங்கம் "அறநிலையக் காப்புக் கழகம்", நிறுவிய பின்னர் கண்துடைப்புப் பான்மையில் கல்வி நிலையங்கள் சில நிறுவியுள்ளனர்.

ஆயினும், வீணான வகைச் செலவுகள் குறைந்த பாடில்லை. துறவற வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை முதலியவற்றை விட்டவர்களென்பது தானே உட்பொருள்? அங்ஙனமிருக்க அத்தகையோர்க்கு ஏன் பெருஞ் செல்வம்? "இறைவன் திருவடி நீழலை எய்துவது", தானே அத்துறவிகளது குறிக்கோள்? அரசாங்கமே இத்தகையோர் செல்வத்தை எடுத்துக் கொண்டு அவர்களது துறவற வாழ்வுக்குரிய சில குறைந்த வசதிகளை மட்டும் செய்து கொடுத்து விடலாமன்றோ?

பெரிய பெரிய மடாதிபதிகள், சங்கராச்சாரியார் சுவாமிகள், ஜீயர்கள் ஆகியோர் மதத்தலைவர்கள் என்றும் மதத்தைக் காப்பவர்கள் என்றும் கூறிக் கொண்டு பெருந்தனத்திற்குத் தலைவர்களாயிருந்து கொண்டு ஆகுலநீர வாழ்க்கை நடத்துகின்றனர். வரவு செலவு பற்றி அவர்கட்கு எந்தக் கவலையும் இல்லை.

## பொதுமக்கள் போக்கு

நமது நாட்டில் பொதுமக்கள் செய்யும் வீணான, வேண்டாத செலவுகள் பல. ஆகவே, வரவுக்கு மேல் செலவு செய்து கடனாளியாகித் துன்புறுகின்றவர் பலர்.

நாட்கூலி பெறும் ஒருவர் செய்யும் செலவுகளை நோக்குக. காலையில் எழுந்ததும் "ஒரு டீ". பின் ஒரு சுருட்டு; வெற்றிலை பாக்கு புகையிலை; புகையிலைப் பொடி முதலியன: நண்பகலின் முன் "ஒரு டீ"; மாலையில் "ஒரு டீ"; மணி தோறும் "டீ" அருந்துவோர் பலர்.

வேலைமுடிந்து வீட்டிற்குச் செல்லுங்கால் இரண்டு உருபா கூலிக்கு ஒன்றரை உருபா தான் மிகும் ஐந்து பிள்ளைகள் இருக்கின்ற ஒரு குடும்பத்திற்கு இரண்டு படி அரிசியாவது வேண்டுமல்லவா? அரிசிக்கு மட்டில் ஒன்றேகால் உருபாயாகிறது: ஏனைய துணைப் பொருள்களுக்காக கால் உருபா போதுமா? அடுத்தநாள் எழுந்ததும் தேநீர ருந்தக் கூடக் கையில் காசிருக்காது, உடல் நலம் இல்லாது ஓரிருநாள் இருப்பின் யாதாகும்? திரைப்படக் காட்சிக்குச் சென்ருல் ஒரு நாள் கூலியே செலவாகிவிடும்.

குளிக்கிற சவர்க்காரம், துணிச் சவர்க்காரம் வேண்டுமானல் கடன் வரும். நாட்கூலிக்காரர் நிலை இது.

மாத ஊதியம் பெறுவோர் செலவு நாட்கூலிக்காரரைவிட சிறிது விரிவடைகிறது. சவர்க்கார வகை, முகத்தூள், மணத் தைலம், பல் பசை பனிப்பசை (Snow), தூர்வல்(Brush), குடி வகைச் செலவுகளையும் சேர்த்துக் கொள்க. மாத இறுதியில் பையில் காசிருப்பதில்லை; கடன் தானிருக்கும். ஊதியம் பெற்றவுடன் முன்கடன் கொடுக்கப்பெறும்; பின்கடன் வாங்கப் பெறும். மாதந்தோறும் என்ன மிச்சம் என்ருல் கடனே.

இன்னும் சிறிது மிகுந்த வருவாய் உள்ளவர்கள் மேற்கூறியவற்றுடன் உதட்டுச்சாயம், நகச் சாயம், பட்டாடை, பகட்டாடை, கண்மை, கருமை, கொண்டை வலை, கூந்தலூசி, நகர்பட்டை முதலிய தேவையற்ற பொருள்களுக்குச் செய்யும் செலவு மிகுகிறது. செல்வரைப் பார்த்து ஆடம்பரம் செய்கிறவர்களும் உண்டு.

வேளாண்மை செய்வோர் அறுவடை முற்றியதும் ஊரிலுள்ள காளி, மாரி, பேச்சி, பெரியாச்சி, பிடாரி, ஐயனர், வீரன், இருளன், காட்டேரி முதலிய தெய்வங்கட்குச் சிறப்பெடுக்கத் தொடங்குகின்றனர். காவடி கட்டியும், தலையை மொட்டையடித்தும் நேர்த்திக் கடன் கழிக்கின்றனர்.

சிலர், திருமணம், காதணியணி விழா, சூல்காப்பணி விழா, பூப்பு நீராட்டு, நீத்தார் கடன் முதலியவற்றைப் பிற செல்வரைப் போன்று தாமும் செய்ய முற்

## காதல்

"காதல் இயற்கை. அவ்வியற்கையுடன் இயைந்து வாழ்வதற்கென்று ஒருத்தியென்றும் ஒருவனென்றும் மன்பதை படைக்கப்படுகிறது. ஒருத்தியையும் ஒருவனையும் காதலால் ஒருமைப்படுத்துவது இல்வாழ்க்கை. இல்வாழ்க்கை ஒரு கழகம். அக்கழகம், காதற்குரியவர், "ஒருத்தியும் ஒருவனும்—ஒருவனும் ஒருத்தியுமே" என்பதையும், ஓரிடத்திற் செல்லுங் காதல் மற்றவரைத் தாய்தந்தையராகவோ உடன் பிறந்தவராகவோ கருதல் என்பதையும் அறிவுறுத்துவது."

—திரு. வி. க.

("வாழ்க்கைக் குறிப்புக்கள்".)

பட்டுக் கடனாளியாகின்றனர். கடன் தொல்லை மிகுந்தால் நகைகளையோ, நிலத்தையோ அடகுவைத்தும், பின்னர் விற்றும் கடனைத் தீர்க்க நேர்கிறது.

அலுவல் பார்ப்பவர்கள் பிற்காலச் சேமிப்பு நிதியிலும், உயிரீட்டுக் கழகத்திலும் கடன் பெற்றுக் குடும்பக் கடனைக் கொடுக்க வேண்டியவர்களாகின்றனர்.

வேளாண்மரபினர் முன்னர் கூறியாங்குச் செலவு செய்து ஆனி மாதம் பிறந்தவுடன் உண்டிக்கே திண்டாடும் மக்கள் பலர். ஆனால், அவர்களால் விழாப் பெற்ற தெய்வங்கள் அப்போது ஏன் உதவ முன் வரவில்லையோ?

இங்ஙனம் ஒவ்வொரு துறையினரும் தம் வரவுக்கு மேல் செலவு செய்வதாலே துன்பத்திற்குள்ளாகின்றனர். பெருஞ் செல்வர்களும், மதத்தலைவர்களும், இன்றைய கட்சித் தலைவர்களும் எந்த நிலையிலும் உல்லாச வாழ்வே வாழ்கின்றனர். அரசியல் நடாத்தும் அமைச்சர்களும், கைக்கூலி பெறும் அரசியல் அலுவலர்களும் கவலையற்றே வாழ்கின்றனர். நடுத்தர ஊதியம் பெறுகின்றவர்களும், வேளாண்மை செய்பவரும், நாட்கூலிக்குப் பணிபுரிபவரும், கடைநிலை ஊழியர்களும் வரவுக்கு மேல் செலவு செய்து பல தொல்லைகட்குள்ளாகின்றனர்.

ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை

என்பது வள்ளுவர் கண்ட வாய்மொழி.

இஃது அரசியலுக்கும், மக்கட்கும், பொருந்தும் பொருளுரையாகும். பொருட் செலவுக்கு வழி மிகுதியாக இல்லாதவிடத்து பொருள் வரும் வழி மிகக் குறைவாயிருந்தாலும் எந்தத் தீங்கும் நேராது. இந்த அறிவுரைக்கேற்ப வாழ்க்கைச் செலவைச் செய்தால் கடன்படா வாழ்க்கை எய்துதல் எளிதாகும்.

## வருவாயைப் பெருக்க...

எனது பட்டறிவுக்கெட்டிய சில வழிகளைப் பொதுப்படப் புகல்வன் :

அரசியல் வருவாய்க்கு :

நம் நாட்டு அரசாட்சி இன்று அயல்நாட்டுக் கடனாளியாக உளது. நாட்டு நலத்திட்டங்கட்குப் பொருள் வருவாய் போதியதாயில்லை. பெருந்தொகை தேவைப்படுகிறது. பொதுமக்கள் மீது பலவகை வரிகளைச் சுமத்துவதனால் பெரும்பயனளிக்காது.

(1) கோவில்களில் குவிந்து கிடக்கும் செல்வத்தையும், மடங்களில் முடங்கிக் கிடக்கும் பொருளையும், அறநிலையங்களில் அமுக்கப்பட்டிருக்கும் தொகையையும் அரசாங்கம் கடனாகப் பெறலாம்; அல்லது அவற்றின் நிர்வாகத்தை மேற்கொள்ளலாம்,

(2) தங்கத்தால் கோவில்களில் ஓடு போடுவதையும், குடமுழுக்குச் செய்வதையும், கோபுரங்கள் புனைவதையும், நகைகள் அணிவதையும் தடை செய்ய வேண்டும்.

(3) புதிதாகக் கோவில்கள் குடமுழுக்குச் செய்வதையும், கோபுரங்கள் கட்டுவதையும், புதுப்பிப்பதையும், அவற்றிற்காகப் பொதுமக்களிடம் நன்கொடைகள் வாங்குவதையும் தடுக்க வேண்டும்.

(4) ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு பூசாரியும் அவனுக்குரிய

செலவிற்கு ஒரு வேலி நிலமுமட்டில் வைத்து மற்ற நிலம் முழுவதும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

(5) பெருந்தனக்காரர்களிடம் அளவுக்கு மேல் இருக்கும் செல்வத்தை, அதாவது தேவைக்கு மேல் இருப்பதை, அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். தனிப்பட்டோரிடம் குவியும் பொருளைக் கைப்பற்றல் நலம் பயக்கும்.

(6) அரசியல் அலுவலர்கட்கும் அமைச்சர்கட்கும் வாழ்க்கைச் செலவுக்கு மேல் ஊதியமளிக்கக் கூடாது. எல்லா வசதிகளையும் அரசாங்கமே செய்துதரல் வேண்டும்.

(7) கைக்கூலி பெறும் ஊழியர்கள் யாவராயினும் கொடுந் தண்டனை விதிக்க வேண்டும். கள்ள வாணிகம், கள்ளத்தாள் பணம் அச்சிடுவோரையும் கொலைத் தண்டனைக்குட்படுத்தல் வேண்டும்.

பொது மக்கட்கு:

(1) சுருட்டுப் புகையுறிஞ்சல், பொடியுறிஞ்சல், வெற்றிலை பாக்கு புகையிலை மென்றல் முதலியவற்றை அறவே நீக்கிவிடல் வேண்டும்.

(2) தேநீர், காஃபி முதலிய ஊக்கத் தூண்டல் பொருள்களை (Stimulants)ப் பயன்படுத்துவதையும் விட்டு விடுதல் நன்றே.

(3) தெய்வங்கட்குச் சிறப்பு செய்யும் பழக்கத்தையும், ஆடு, கோழி பலியிடுவதையும், காவடி கட்டுவதையும், மொட்டையடிக்கப் பல கல்தொலைவு சென்று வீண் செலவு செய்வதையும் நிறுத்தல் வேண்டும்.

(4) மூடத்தனமான, பகுத்தறிவுக்குப் பொருந்தாத எந்தப் பண்டிகைகளையும் விட்டொழிக்கப்பழக வேண்டும்.

(5) கோவில் கட்டவும், குடமுழுக்குச் செய்யவும், கோபுரம் கட்டவும் நன்கொடையளிக்கக் கூடாது.

(6) திருமணம், இறுதிக்கடன், ஆண்டிறுதிக் கடன், மாதக் கடன் ஆகிய விழா செலவினங்களைக் குறைக்க வேண்டும்.

(7) காதணியணி விழா, பூப்பு நன்னீராட்டு, சூற்காப்பிடு விழா முதலிய ஆரவார விழாக்களை விட்டொழிக்க வேண்டும் திரைப்படம் பார்ப்பதையும் மிக மிகக் குறைக்க வேண்டும்; விட்டுவிடுவது மிகவும் பயன் தரும். ஆடம்பரவுடையணிதல் அகல வேண்டும்.

இத்தகைய தேவையற்ற செலவினங்களைக் குறைத்துக் கொண்டால் நமது தேவைக்கு வருவாய் ஓரளவு சரிக்கட்டுவதாகும். வரவுக்குமேல் செலவின்றேல் கடனாளியாகும் கடப்பாடில்லை.

மிகுதியாகச் செலவு செய்ய விரும்புவோர் மிகுந்த வருவாய்க்கு வழி செய்து கொண்டு அவ்வாறு செய்வது நலம்பயக்கும். குறைந்த வருவாய் உடையோர் நிறைந்த செலவு செய்து துன்பத்திற்குள்ளாவதை விட, சிக்கனமாக, இன்றியமையாத தேவைகளை நிறைவு செய்து வாழ்வதே எல்லோர்க்கும் நன்மையாகும்.

எந்தச் செலவு செய்தாலும் பகுத்தறிவையும் பயன்படுத்திப் பார்த்துச் செய்வதே நன்றாம்.

"பகுத்தறிவைச் சற்றும் பயன்படுத்தார் கல்வி<br>மிகுத்ததனால் ஏது பயன்?"

—ஞா. தே.

எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை, M.A., L.L.B., I.S.O., C.I.E.

# வான நூலும் சோதிடமும்

*[பன்மொழிப்புலவர், வானநூல் வல்லுநர், அரசாங்க உயர் பதவியாளர், சட்டமன்றத் தலைவர்—காலஞ் சென்ற தமிழ்ப் பெரியார் சுவாமிக்கண்ணுப்பிள்ளை சோதிடப் புரட்டுப்பற்றி 1925ல் எழுதிய கடிதத்தை அப்படியே வெளியிடுகிறோம். —1961 ம் ஆண்டுப் பதிப்பு: பக்கம்; — 97—99]*

கோட்டை, சென்னை
3, ஆகஸ்டு 1925.

அன்புள்ள ஐயா,

வான சாத்திரம் பற்றிப் பல நூல்கள் இயற்றிய ஆசிரியர் என்பதைவிடச் சென்னைச் சட்ட சபையின் தலைவர் என்றே நானே என்னைத் தங்களுக்கு அறிமுகம் செய்துகொள்வது மிகவும் நல்லதாக இருக்கும் அல்லவா? வானசாத்திர மாணவன் என்ற முறையிலேதான் தங்களுக்கு இதை எழுதுகிறேன்.

வானநூற் பயிற்சி, சோதிட ஆராய்ச்சியிலே என்னைச் செலுத்தியது இத்துடன் அடங்கிய, 'சோதிடத்தின் நம்பகம்' என்ற என் வெளியீட்டிலே பின் நிகழக்கூடிய நிகழ்ச்சியை முன்னதாகக் கணித்துக் கணித முறையால் நாள், மணி தவருது சரியாகச் சொன்ன சோதிடர் யாரும் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். கீழே காணும் முக்கிய சம்பவத்தின் பின்னரும் இந்த முடிவே வலியுறுகிறது.

1923 நவம்பர் 8 செவ்வாய்க்கிழமை வெளியான "சுதேசமித்திரன்" பத்திரிகை, 'வருங்கால உண்மை' என்ற தலைப்பிலே நிருபர் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதன் உள்ளுறை பின்வருவது: '1924 பிப்பிரவரி 5 இந்தியா முழுவதற்கும் ஒரு நல்ல நாள். அன்று காலை 7 மணிக்கு மகாத்மா காந்தி சிறையினின்றும் விடுதலை செய்யப்படுவார். காந்தியடிகளின் எண்ணங்கள் 1931- க்குள் நிறைவேறும். 1924 பிப்பிரவரி 5-ல் விடுதலை கிடைக்கவில்லை என்ருல் 1925 சனவரி 1–ல் நிச்சயம் அவர் விடுதலையாவார்.'

இதை எழுதிய நிருபர் திருத்தணிச் சோதிடர் சடகோபாச்சாரியார். காந்தி சோதிடர் என்றே அவர் இப்போது அழைக்கப்படுகிருர். 1924 பிப்பிரவரி 5-ல் காந்தியடிகள் விடுதலையாவார் என்று 1923 நவம்பர் 8-ல் எழுதியதைச் சுதேசமித்திரன் நற்சான்றுடன் விளம்பரத்துக்காக ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளார். அதிலே 1925 சனவரி 1 என்ற மறு தேதியும், காந்தியடிகளின் எண்ணம் நிறைவேறும் 1931–ஆம் வருடமும் விடப்பட்டு அடிகளின் சாதகம் வரையப்பட்டுள்ளது. 1924 பிப்பிரவரி 5 காலை 7 மணிக்கு அடிகள் விடுதலையாவர்' என்பதைச் சாதகத்தினின்றும் சோதிடரால் எப்படி சொல்ல முடிந்தது? அதுவும் மூன்றுமாதங்

களுக்கு முன்னம் 1923 நவம்பர் 8-ல் இந்த விடுதலை நாள் சோதிடர் மனத்திலே தோன்றுவானேன்?

இந்தியச் சட்டசபையும் இராசாங்கசபையும் 1923 ஆகஸ்டில் கலைந்தன. 1924 சனவரி 30-ல் கூடின. 1924 பிப்பிரவரி 4-ல் அடிகளின் விடுதலையை வற்புறுத்தி இராசாங்க சபையிலே வருவதற்கு இருந்த தீர்மானம் ஆர். கே சண்முகஞ் செட்டியார் சட்டசபையிலே 1924 பிப்பிரவரி 5-ல் கொணர்வதற்கிருந்த தீர்மானத்தை முன்னிட்டுக் கைவிடப்பட்டது. அன்று காலையிலேயே அடிகள் விடுதலை செய்யப்பட்டதால் இத் தீர்மானத்துக்கும் அவசியம் இல்லாமற் போய்விட்டது. இராசாங்க சபையிலே விடுதலைத் தீர்மானம் விவாதிக்கப்படும் என்ற வதந்தி சில மாதங்களாகவே உலாவி வந்தது. சனவரி முதல்நாள் அல்லது பிப்பிரவரி கடைசி நாள் சபை கூடுவது வழக்கம். தனி நபரின் தீர்மானம் முதலிலே வருவதுதான் மரபு. இவைகளைத் தெரிந்துள்ள சோதிடர் 1924 பிப்பிரவரி 5 காலை 7 மணிக்கு அடிகள் விடுதலையாகக் கூடும் என்று 1923 நவம்பரில் ஊகிப்பது சாத்தியமே. என்றாலும் இந்த ஊகமும் பெரிய காரியமே. கைதிகளைக் காலை 7 மணிக்கு விடுதலை செய்வது நடைமுறையில் இருக்கும் விஷயம், அதற்கு ஊகம் தேவையில்லை.

மேலும், 1923 ஆகஸ்டிலே இந்துப் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையில் அடிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள மூன்று தண்டனைகளுக்கும் இரண்டிரண்டு வருடச் சிறைவாசம் என்பது ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டியதா தொடர்ந்து ஆறு வருடம் அனுபவிக்க வேண்டியதா என்பது விவாதிக்கப்பட்டிருந்தது— ஏக காலத்தில் என்பதுதான் சரி; 1922 மார்ச்சு 14-ல் சிறை சென்ற அடிகள் இரண்டு வருடச்சிறை வாசத்துக்குப் பின் 1924 மார்ச்சு 14-ல் விடுதலை ஆதல் வேண்டும். நன்னடத்தைக்காகச் சில நாட்களுக்கு முன்னதாகவே அதாவது பிப்பிரவரியில் விடுதலை ஆதல் கூடும் என்பதை எதிர் பார்க்கலாம் அல்லவா? இதற்குத் தீர்க்க தரிசனம் எதற்கு? கிரகங்கள், இதற்கு எப்படிப் பொறுப்போ?*

---

* 1930 ஜூன் 14—இந்துப்பத்திரிகை: மகாத்மா காந்தியும் சரோஜினி நாயுடுவும் சிறை செய்யப்பட்டதை முன்னதாகவே தெரிந்து சொன்ன திருத்தணிக் காந்தி சோதிடர் சடகோபாச்சாரியார் மகாத்மா காந்தி 1930 ஜூலை 10 காலை 7.30 மணிக்கு விடுதலை செய்யப்படுவார் என்று தெரிவிக்கிறார். — நிருபர் செய்தி.

இது பலிக்கவில்லை. மகாத்மா காந்தி ஏரவாடாச் சிறையினின்றும் 1931 சனவரி 26-ல் விடுதலை செய்யப்பட்டார். காலை 7 மணிக்கு விடுதலையானார் எனினும் 11 மணிக்குத்தான் சிறையினின்றும் வெளியேறினார்.

 பி. என். பாலசுப்பிரமணியன், B.Sc., Dip. Re. Ed., D.H.M.P.

# மொழியறிவு

*[பன்மொழி அறிவு பற்றி வற்புறுத்துவது இக்கட்டுரை. ஆனால், இது சர்க்கஸ் போன்றது; கர்நாடக இசை போன்றது! அதாவது எல்லோராலும் முடியாதது; தேவையில்லாததும் கூட! கருத்தைத் தெரிவிக்கவும், அறிவை வளர்க்கவுமே மொழி. மொழியிடத்தில் வெறியும் தேவையில்லை; பக்தியும் தேவையில்லை; வெறுப்பும் தேவையில்லை. அறிவை வளர்ப்பது எம் மொழியாயினும் அதை விரும்பிக் கற்க வேண்டும். இல்லையேல் மனிதன் கிணற்றுத் தவளைதான்!]*

சமுதாயத்தின் நலனுக்காகச் சமுதாயத்தால் ஆக்கப்படுவதே மொழி. ஒரு சமுதாயமாய், ஓர் இனமாய், இணங்கிப் பழகி வாழவும் உறுதுணை புரிவது மொழி. மனிதனுக்கு விழியைப்போன்று பணி புரிவதும் மொழியே. மனித வாழ்வில் உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் அடிப்படையில் அமைந்த மொழி நாளடைவில் நாகரிகம் வளர வளர்ச்சியுற்று இற்றைஞான்று இன்றியமையாதொரு கருவியாய் இலங்கி வருகின்றது. இத்தகு இன்றியமையாக் கருவியாம் மொழி, திருந்திய மொழியெனவும் திருந்தா மொழியெனவும் இருவகைப்படும். இன்றளவில் உலகில் வழங்கி வரும் மொழிகள் 2796 (கிளை மொழிகள் நீங்கலாக) என்று மொழி நூற்றுறையறிஞர்கள் ஒருவாறு கணக்கெடுத்திருக்கின்றனர். [Gray's Foundation of Language tentatively places the total number of present-day spoken languages exclusive of minor Languages, at 2796—Mario A. Pei, The World's Chief languages, 15.] இம்மொழிகளில் பல எழுத்துக்களின்றி அவ்வம் மொழியினரால் பேசப்படுகின்றன. இலக்கண— இலக்கியங்களோடமைந்து அறிவியல் (Science), ஆன்மீகம் போன்ற அரிய துறைகளில் நிபுணத்வம் பெற உதவும் மொழிகளைக் கற்கவேண்டுவதன் அவசியத்தையும், மற்றும் மொழிகளைக் கற்பதால் உண்டாகும் பயன்களையும், ஆராய்வோம்.

இந்நாட்களில் மொழிப் பிரச்சினை தீராதவொன்றாய்த் திகழ்வது கண்கூடு. மொழியிடம் பற்றுக் கொண்டுள்ளோர், மொழியிடம் பற்றைத் தவிர்த்து வெறி கொண்டிருப்பதே மொழிச்சிக்கலின் மூலகாரணம்.

தாய் மொழியில் பாடங்கற்பின் பாடங்களை நன்கு கற்றுத் தேர்ச்சியுற முடியுமென மொழிவர் சிலர். இஃது உண்மையே. ஒரு மொழியில் அறிவியலையோ அன்றி மற்றொரு துறையையோ

போதிக்க வேண்டின் அம்மொழி அவ்வத்துறைகளைப் போதிக்கக் கூடிய அளவு வளம் பெற்றிருத்தல் வேண்டும். கல் தோன்றாக் காலத்தே தோன்றியதாகக் கருதப்படும் தேமதுரத் தமிழிலும் அத்தகைய அளவு இல்லை. இன்னும் சிறப்பிக்கப்பட வேண்டியுள்ளது. இலக்கிய இலக்கணங்களில் ஒரு மொழி சிறந்திருப்பதால் ஒரு மொழியில் அறிவியலைப் போதிப்பது கடினம். தாய் மொழியில் அறிவியல் போதிக்கப்பட வேண்டுமென வாதாடும் அறிஞர் மேலை நாடுகளை உதாரணம் காட்டுகின்றனர். மேலை நாட்டு மொழிகள் பல அறிவியலைப் போதிக்க வேண்டிய அளவு ஆற்றல் பெற்றவை. மேலும், மேலை நாட்டினர் நம் நாடு வந்து சிறப்புப் பயிற்சி பெற வேண்டிய நிலையிலில்லை. அறிவியலில் அதிக அளவு முன்னேற்றங் கண்டுள்ள மேலை நாட்டினர் அவர் தம் தாய் மொழியில், பிரதேச மொழிகளில் அறிவியலைப் போதிப்பதில் வியப்பொன்றுமில்லை.

## ஆங்கிலத்தின் சிறப்பு

இன்று அறிவியலைப் போதிக்க ஆங்கிலமே சிறந்த மொழியாகப் பயன் படுகின்றது. மிக அண்மைக்காலத்தில் தோன்றியதே ஆங்கிலம். [Only two or three centuries ago English was spoken by so few people that no one could dream of its ever becoming a world language— Otto Jespersen: Growth and structure of the English Language.] இம்மொழி பிறவற்றிலுள்ள நலமனைத்தும் தனதாக்கிக்கொண்டு செழிப்புற்றுச் சிறப்புடனிலங்குகிறது. பிறமொழிகளிலுள்ள நூல்களைத் தம் மொழியில் யாத்திடப் பெரிதும் ஆர்வம் கொண்டவர் ஆங்கிலேயர். நமது ஆன்மீக, இலக்கிய நூல்களில் பல மேலைநாட்டு அறிஞர்களது அரிய மொழியாக்கத்தால் இன்றளவும் உலக மகா காவியங்களாக உலவி வருவது கண்கூடு.

அறிவியல் அல்லது பொறியியல் துறைகளில் சிறப்புப் பயிற்சி பெற நம்நாட்டினர் அயல் நாடு செல்ல வேண்டியுள்ளது. நம் நாட்டில் பயிற்சி பெறக் காலம் பிடிக்கும். செர்மனி, ஃபிரான்சு, உருசியா ஆகிய நாடுகளுக்குச் செல்வோர் அந்நாட்டு மொழிகளைக் கற்க வேண்டியுள்ளது. அவ்வந்நாட்டு மொழிகள் தெரிந்திருப்பின் அந்நாட்டு அறிஞர்களுடன் நெருங்கிப்பழகி நமது ஐயங்களைத் தீர்த்து அறிவைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாகும். இதேபோன்ற இனிய பல உண்மைகளின் அடிப்படையில் தான் பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் கழகத்தில் (Indian Institute Of Science) செர்மன் போன்ற மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. அன்னிய மொழிகளைக் கற்பதால் அம்மொழிகளிலுள்ள அரிய நூல்களைப்பயின்று நமது அறிவினைப் பெருக்கிக் கொள்ள வழியேற்படுகின்றது. சென்னையிலுள்ள அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி, இந்தியாவில் சில பாகங்களிலுள்ள இந்திய தொழில் நுட்பக் கல்லூரி (Indian Institute of Technology) ஆகியவைகளில், அறிவியல், பொறியியல் அறிவினைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு அன்னிய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் அறிவியல், பொறியியல் நிபுணர்களில் பலர் அன்னிய மொழிகளைப் பயின்று சிறப்புச் சான்றிதழ் (Diploma) பெற்றுள்ளனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதே.

## பன்மொழிப் புலமை

பன்மொழிப் புலவர்களாய் விளங்க தமிழர்கள் என்றுமே விருப்பமுடையவர், பைந்தமிழ்ப் பாரதி, தமிழ், ஆங்கிலம், வடமொழி, இந்தி ஆகிய நான்கிலும் பாண்டித்யம் பெற்றிலங்கியது நாமறிந்த உண்மை. பழந் தமிழ்ப் புலவர்களிற் பலர் தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் விற்பன்னர்களாய்த் திகழ்ந்தது நாமறியாததா? கம்பனுக்கு வடமொழி தெரிந்திருக்காவிடில் கம்ப இராமாயணம் ஏற்பட்டிருப்பதெங்ஙனம்? இன்னபிற இனிய வடமொழியாக்கங்கள் எப்படி ஏற்பட்டிருக்கும்? தமிழறிஞர்களாய்த் திகழ்ந்த பலரும் பன்மொழிப் புலவர்களாயிலங்கியதும் நாமறிந்ததே. இன்றளவும் திரு. தெ. பொ. மீ., திரு கா. அப்பாத்துரை போன்றோர் பன்மொழிப் புலவர்களாய் விளங்கவில்லையா? பன்மொழிப் புலமை பலமொழியறிவு பெற்றதால் அவர்களது பெருமை மேன்மேலும் பெருகிறதேயன்றிக் குறையவில்லை.

கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பென்பது வழக்கு. ஆயின், பன்மொழியறிவு பெற்றோருக்குப் பாரெல்லாம் சிறப்பெனப் பகரலாம். அன்னிய நாடு செல்லும் அநேகர் அந்நாட்டு மொழியறியாது படும் சங்கடங்கள் சொல்லி மாளா. ஏ. கே. செட்டியார், 'சோம–லெ' போன்ற எழுத்தாளர்களது பிரயாண இலக்கியங்களில் இவ் உண்மையினைப் பரக்கக் காணலாம். டாக்டர் கமில் சுவலபிலோ என்னும் யுகோஸ்லோவியர் சென்னை வந்த போழ்து சிறப்பிக்கப்பட்டதன் காரணமும் அவர் தமிழறிந்தது குறித்துத்தான்.

*திறமான புலமை எனில் —*
*அதனை*
*வெளி நாட்டார் வணக்கஞ்*
*செய்தல் வேண்டும்,*

என்னும் பாரதியின் கூற்று மெய்த்திட, நாமே அன்னிய மொழியில் நமது அரிய செல்வங்களைப் பெயர்ப்பதே அழகு. அதுதான் சிறந்த செயலுங்கூட.

நமக்குப் பிறமொழி கற்பது எளிதே. தமிழர்தம் திறமைக்குச் சான்றாக ஒரு உதாரணங்கூற விழைகின்றேன். குமரகுருபர சுவாமிகள் ஒரு சமயம் வட இந்திய மன்னரொருவரைப் பேட்டி காண வேண்டியிருந்தது. அதற்காக அதிவிரைவில் இந்துஸ்தானி கற்று அம் மன்னரைப் பேட்டி கண்டார். அம் மன்னர் தம்மைக் காட்டிலும் இந்துஸ்தானியில் சுவாமிகள் அரிய பாண்டித்யம் பெற்றிருந்ததைக் கண்டு அதிசயித்தாராம். ஏன், நமது வாழ்நாளிலேயே கண்டவை இல்லையா? ஆங்கிலேயரே அதிசயிக்கும் வண்ணம் தமது ஆங்கில அறிவாலும், பேச்சாலும் அவரை வசப்படுத்திய அறிஞர்கள் ஆர். கே. ஷண்முகம், சர். ஏ. இராமசாமி முதலியார். சி. ஆர். ரெட்டி, சீனுவாச சாஸ்திரியார் ஆகியோரின் திறமையை என்னென்பது? இப்பெருமை அவர்கள் அன்னிய மொழி பெற்றிருந்ததால் தானே?

அறுசுவை உண்டியில் பலவும் சேர்ந்து சுவையூட்டுவது போல் நமது வாழ்வில் பன்மொழியறிவு பெறுவதால் உண்டாகும் உயர்வுகள் சொல்லிலடங்கா.

பலமொழிகளைக்கற்பதால் நம் வாழ்வு சிறப்புறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இக்கருத்தினை

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

நாக. நடராசன், எம். ஏ.

# மரபு நிலை (Heredity)

*[மிக்க ஊக்கத்துடன் பல ஆராய்ச்சிக்காரர்களின் கருத்துக்களைத் த்னிச் சிறப்புடன் திரட்டித் தருகிறார், கட்டுரையாளர். குடிப்பிறப்பும்—சூழ்நிலையும் எந்த அளவுக்கு மனிதனை உருவாக்குகின்றன என்பதை சலித்துக் காட்டுகிறார். பிலாயில் ஒரு நண்பர் வீட்டில் தங்கியிருந்தபோது அவரது வளர்ப்பு நாய் இறைச்சி, மீன், முட்டை எதையும் முகர்ந்துகூடப் பார்ப்பதில்லை என்பதை நேரில் காண நேர்ந்தது. காரணம், அக்குடும்பம் தாவர உணவுக் குடும்பம்; அந்நாய்க்குட்டி பிறப்பிலிருந்தே தாவர உணவில் வளர்க்கப்பட்டதாம். எனவே, புலி பசித்தால் புல்லைத் தின்னாது என்பது முழுத் தவறு. சென்னை மாடுகள் காகிதம் தின்பது கண்கூடு! சூழ்நிலை தான் மனிதனை உருவாக்குவதில் 100க்கு 95 பங்கு.]*

நாய்களுக்கு நாய்கள் பிறக்கின்றன. மனிதனுக்கு மனிதன் பிறக்கிறான். இது போன்று ஒன்று தன் வகையை உற்பத்தி செய்கின்ற போக்கிற்கு மரபு நிலை (Heredity) என்கிறார்கள். இந்த நிலையில் ஒருவன் தன் முன்னோர்களிடமிருந்து மனப் பண்புகளும், மெய்ப் பண்புகளும் பெறுகிறான் என்று கூறப்படுகிறது. "தாயைப் பார்த்துப் பெண்டு கொள்" என்றும், "மகனுரைக்கும் தந்தை நலத்தை" என்றும், "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா" என்றும், "அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறக்கிறான்" என்றும், பிறவியின் வன்மையைக் கூறுவர்.

ஆனால் மரபுநிலை மாறுபாட்டையும், மாறுதலையும் உள்ளடக்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

யொட்டி, நம் நாட்டுப் பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை பின்பற்றப்படுவது (Three Language Formula) நாமறிந்த உண்மை.

மொழி மனிதனின் சமுதாய நலனுக்காகத் தோன்றியது. வாழ்வில் சிறப்புற்றிலங்க பன்மொழியறிவு பெறுவதை நமது கடமையாகக் கொள்ள வேண்டும்.

"மக்களின் வாழ்வில் பிறந்த கலை மொழி; மக்களால் வளர்க்கப்படும் கலை மொழி; மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்திவரும் அரிய கலையும் மொழியே". எனவே பன்மொழி கற்று வாழ்வில் சிறப்புப்பெற வேண்டியது நம் கடமையாகும்.

கிக் கொண்டிருக்கிறது. குழந்தைகள் அப்படியே தங்கள் பெற்றேரைப் பிரதிபலிப்பது கிடையாது. கைரேகையையும், விரல் ரேகைகளையும் வைத்துக் கொண்டு குற்றவாளிகளை அடையாளம் கண்டுகொள்ளும் முறை இந்த உண்மையின் அடிப்படை மீதே எழுந்ததாகும். ஒரே விந்தில் உற்பத்தியான (Monozygotic) இரட்டைப் பிறவிகளும் வேறு வேறு விந்துகளில் உருவான (Dizygotic) இரட்டைப் பிறவிகளும் மாறுபட்டு விளங்குவதும் இந்த அடிப்படையில் தான். மரபு நிலையை ஆளுகின்ற-க்ரோமோஸோம் (Chromosome), ஜெனி (Gene) ஆகியவற்றின் புனரமைப்போ, மறு கலப்போ தான் மாறுதல்களைப் பிறவியில் தோற்றுவிக்கின்றன.

பன்னெடுங் காலமாக நிலவி வரும் கருத்து-தவருன கருத்து, இது: பெற்ருேரின் இரத்தம் மக்களுக்குப் பாய்கிறது. இந்த எண்ணத்தின் மீதே "இரத்த சுத்தம்", "இரத்த உறவு", "இரத்த சம்பந்தமான உறவு" என்பன போன்ற சொற்ருெடர்கள் எழுந்தன; இந்த எண்ணத்தின் மீதுதான் ஒரு பெற்ருேருக்குப் பிறந்த மக்கள் (Sibbings) மணம் புரிவதோ, ஒரு பரம்பரிய வழியில் வந்த மக்கள் (Parellel Cousins)—அதாவது தந்தையின் சகோதர மக்கள் அல்லது தாயின் சகோதரி மக்கள் மணம் புரிவதோ கெடுதல் என்றும், இரத்த உறவிற்கு முரணனது என்றும் கருதப்படுகிறது. இந்த எண்ணத்தின் மீதுதான் இன்று, மாமன் மக்களையோ, அத்தை மக்களையோ மணம் புரிவது நேர்மையன்று, அவர்கள் ஒரே இரத்த உறவில் கிளைத்தவர்களே என்றும் பேசப்படுகின்றது. இரண்டாம் உலகப் போரின்போது காயமுற்ற வெள்ளை வீரர்கள் நீக்ரோக்களுடைய இரத்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தது, "இரத்த சுத்தம் காக்கப்பட வேண்டும்" என்ற எண்ணத்தின்பால் எழுந்ததேயாகும்.

கருவில் இருக்கும் குழந்தைக்கும், தாய்க்கும் எவ்வித இரத்தத் தொடர்பும் இல்லை. கருவில் இருக்கும் குழந்தைக்குத் தனியே இரத்த ஓட்ட முறை உள்ளது. தாயின் உடலில் ஓடும் தமனிகளுக்கோ, சிரைகளுக்கோ கருவில் வளரும் குழந்தையின் உடலில் உள்ள தமனிகளுக்கோ சிறைகளுக்கோ, எந்த விதமான தொடர்பும் இல்லை. தாய்க்கும், கருவிலுள்ள குழந்தைக்கும் உள்ள தொடர்பு, தாய் தருகிற ஊட்டமே யாகும். அதனுல்தான், தாய் உண்ணுகிற உணவில் ஏற்படுகிற இரசாயன மாற்றங்களும் குழந்தையின் உடல் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. (ஆதாரம்: பீல்ஸ் (Beals) "An Introduction to Anthropology").

## மரபு நிலைப் பிரிவுகள்

சமூகவியல் வாதிகள் ஒருவனுடைய மரபு நிலையும், இயற்கைத் தன்மையும் (Original Nature) ஒரே பொருளைத்தான் குறிக்கின்றன என்கிருர்கள். ஒருவனுடைய இயற்கைத் தன்மையில் மூன்று அம்சங்கள் உள்ளன.

1. எல்லோருக்கும் பொதுவான குணங்கள் (Phylogenetic Characteristics): இரண்டு கண்கள், மார்பினுள் இதயம், இயங்கக்கூடிய தன்மை, வாய் முதலிய அம்சங்கள் எல்லா மனிதர்களிடத்திலும் காணப்படுகின்றன.

2. மாறுபட்ட குணங்கள் (Ontogenetic Variations):

இரண்டு மனிதர்கள் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை. இரட்டைப் பிறவிகளே ஒரே மாதிரியாக இருப்பதில்லை; ஒருவன் அறிவு மிக்கவனாயும், மற்றவன் அறிவு குறைந்தவனாயும் இருக்கக் கூடும். உருவம், உயரம், எடை, தோற்றம் முதலியன எல்லாரிடத்திலும் மாறுபட்டு விளங்கும்.

3. பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் பெறும் குணங்கள் (Dominant "Family" Traits): சில உயிரியல் வாதிகளும், சமூகவியல் வாதிகளும் அறிவு, உடல் நலம் போன்ற சில குணங்கள் பெற்றோரிடமிருந்து மக்களுக்குச் செல்கின்றன என்று கருதுகிறார்கள்.

மரபு நிலை ஒருவனுடைய தோற்றத்தையும், அறிவையும், அறிவைப் பெருக்கக்கூடிய ஆற்றலையும் நிர்ணயிக்கின்றது என்றும் கூறப்படுவதுண்டு. மரபு நிலை ஒருவனுடைய ஆளுமைப் பண்பையும் (Personality) நிர்ணயிக்கிறது என்றும் உரைக்கப்படுகிறது. ஆனால் மரபு நிலை ஆளுமைப் பண்பை நேரடியாக உருவாக்குவதில்லை; ஆனால் ஆளுமை வளர்ச்சியை ஒரு குறிப்பிட்ட வழியில் செலுத்துகிறது என்று மறுத்துரைக்கப்படுகிறது.

மரபு நிலையைப் பற்றி முதன் முதலாகத் தெளிவாக ஆராய்ச்சி செய்தவர் மெண்டல் (Mendel) என்பவர். அவருடைய கருத்துப்படி, ஒரு மனிதன் அப்படியே எல்லாக் குணங்களையும் பெற்றோரிடமிருந்து பெறுவதில்லை; எண்ணற்ற குணங்களைத் தனித் தனியாகப் பெறுகிறான்; நேர் பெற்றோரிடமிருந்து குழந்தை அரை அம்சமும், பாட்டனார்கள் பாட்டியார்களிடமிருந்து கால் அம்சமும், முப்பாட்டனார்கள் முப்பாட்டியர்களிடமிருந்து அரைக் கால் அம்சமும் பெறுகிறது, என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இப்படிப் பெறுகின்ற குணங்களை "யூனிட் குணங்கள்" (Unit Characters) என்கிறார் மெண்டல். இந்த யூனிட் குணங்கள் மாறுபட்ட ஒரு ஜோடியிடம் பொதுவாக அப்படியேயும் தோன்றலாம்; அல்லது தோன்றாமலும் இருக்கலாம்.

உதாரணமாக, அசல் குட்டையான ஒருவன் சாதாரண உயரம் கொண்ட ஒருத்தியை மணக்கிறான். அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தை சாதாரண உயரம் கொண்டதாக இருக்கும். ஆனால் அந்தக் குழந்தையிடம் குட்டைத் தன்மைக்கான 'ஜெனி' இருந்தே தீரும். ஆனால் அது சாதாரண உயரத்துக்கான 'ஜெனி'யால் அமுக்கப்பட்டிருக்கும். அந்தக் குழந்தை வயது வந்தபிறகு குட்டையான ஒருவனுக்கோ (ஒருத்திக்கோ) பிறந்த ஒருத்தியை மணக்கும் போது நிச்சயம் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளில் சில குட்டையாக இருக்கும். குழந்தைகள் அதிகம் இருக்குமேயானால், நாலில் ஒன்று குட்டையாக இருக்கும்.

எனவே, 'மெண்டல்' விதிப்படி ஒரு சந்ததி மக்கள் தமது பெற்றோரிடமிருந்து குறிப்பிட்ட அளவு சில குணங்களைப் பெறுகிறார்கள்; ஆனால் அந்தக் குணங்கள் அவர்களிடத்தே மறைந்திருக்கலாம்; என்றாலும், அவை அம்மக்களுடைய பாட்டனாரிடத்தோ அல்லது முன்னோரிடத்தோ வெளிப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு சந்ததியும் ஒரு புதிய கலவையே (Admixture) ஆகும். பாட்டனாருடைய பெயர்களைப் பெயரன்கள் (பேரன்கள்)

தாங்குகிறார்கள். ஆனால் பல பெயரன்களிடம் அவர்தம் பாட்டனாருடைய க்ரோமோசோம்ஸோ, மரபுநிலைக் குணங்களோ இருக்காது. ஒவ்வொரு தனி மனிதனும் உற்பத்தியாகும் போது ஒவ்வொரு பெற்றோரிடமிருந்து 'ஜெனி'க்களில் பாதி இழப்பு ஏற்படுகிறது. ஆனால் சில அரிதான சமயங்களில் இரண்டு மூன்றுபேர்களிடம் அத்தகைய 'ஜெனி'க்கள் நிறையக் கலந்து காணப்படும். போகப் போக, ஒரு சந்ததியிலே வாழ்ந்த மேதை ஒருவனுக்குப் பல சந்ததிகள் கடந்து திறமையற்றவனோ, மூடனோ, பித்தனோ வரலாம். (ஆதாரம்: E. G. கொங்க்லின் (Conklin): "Heredity and Environment").

'மெண்டல்' கருத்துப்படி, குட்டையான கைவிரல்கள், ஆறுவிரல் தன்மை, ஹண்டிங்க்டன்ஸ் கோரியா (Huntington's Chorea) என்ற நரம்புத் தளர்ச்சி, பின்னிக்கொண்டிருக்கும் விரல்கள், ஒழுங்கில்லாத பற்கள், குட்டைத் தன்மை, நிறமில்லாத தோல் (Albinism), இரத்தம் மெதுவாக உறையும்தன்மை(Haemophilia), நிறங்களை உணர்ந்துகொள்ள முடியாத சில குருட்டுத் தன்மைகள்(NightBlindness),குறிப்பிட்ட செவிட்டு ஊமைத்தன்மை வகைகள் முதலிய இயற்கைக்கு மாறுபட்ட நிலைகள் (Abnormalities) 'யூனிட்' குணங்களாகும். அதாவது மரபு நிலைக் குணங்களாகும் (Hereditary Traits).

வில்லியம் S. பாய்ட் ("Genetics and Races of man") என்ற தமது நூலில் தோல் நிறம், கண் நிறம், மயிர் நிறம், மயிர் அமைப்பு, உடல் மயிர், உயரம், மங்கோலியன் ஃபோல்ட் முதலியன மரபு நிலைக் குணங்கள் என்று கூறுகிறார்.

## நாடகமே நாடகம்!

பர்னார்ட்ஷாவின் "பிக்மிலியன்" என்ற நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு இரு அமெரிக்கர்கள் "மை ஃபேர் லேடி" என்ற பெயரால் ஓர் இசை நாடகம் அமைத்தனர். இது லண்டனிலுள்ள ஒரு நாடகக் கொட்டகையில் தொடர்ந்து 5½ ஆண்டுகள் நடைபெற்று அண்மையில் கடைசி நிகழ்ச்சி நடந்தது; மொத்த நிகழ்ச்சிகள் 2281.

இப்போது இந்நாடகம் மாஞ்செஸ்டர் நகரில் நடைபெறுகிறது. முதல் ஆறு மாதங்களுக்கான டிக்கெட்டுகள் இப்போதே விற்கப்பட்டுவிட்டன.

லண்டனில் மொத்தம் 43 லட்சம் பேர் இதைப் பார்த்திருக்கின்றனர்; இவர்கள் செலுத்திய கட்டணம் ஏறக்குறைய 36 லட்சம் பவுன். ஏப்ரல் 30-1958-ல் இங்கு முதல் நாடகம் துவக்கப்படுவதற்கு ஏழு மாதங்களுக்கு முன்பே அன்றைய டிக்கெட்டுகள் விற்கப்பட்டுவிட்டனவாம்.

இந்நாடகம் அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா, ருஷ்யா, மேற்கு ஜர்மனி, ஜப்பான், நியுசிலாந்து—போன்ற நாடுகளில் நடத்தப்பட்டிருக்கிறதாம்.

1956 முதல் 1962 வரையில் தொடர்ந்து நாள்தோறும் அமெரிக்காவில் (நியூயார்க் பிராட்வே தியேட்டரில்) நடந்ததாம். இந்நிகழ்ச்சிகளின் மொத்த வசூல் 70 லட்சம் பவுனாம்!

## மரபு நிலையும் அறிவாற்றலும்

மரபு நிலைக்கும் அறிவுக்கும் உறவுண்டா? மரபு நிலைக்கும் அறிவுக்கும் தொடர்புண்டு என்ற கருத்தின் மீதுதான் வெள்ளை இனத்தவர்கள் தங்களை அறிவில் மேம்பட்டவர்கள் என்றும், நீக்ரோக்கள் குறைந்த அறிவு கொண்டவர்கள் என்றும் உயர்வு மனப்பான்மை(Superiority Complex) கொண்டிருக்கிறார்கள். "ஜெர்மானியர் உலகாளப் பிறந்தவர்கள்" என்று அடால்ஃப் ஹிட்லர் சங்கநாதம் செய்ததும் இதே எண்ணத்தில்தான். "ஜெர்மனி விஞ்ஞான அறிவிற்கு உறைவிடம்'' என்று பலர் கருதுவதும் இதனால்தான்.

ஃப்ரான்சிஸ் கால்டன் தமது "Hereditary Genius'' (1869) என்ற நூலில் பெற்றோர்கள் உயர்ந்த அறிவு உடையோராக இருந்தால் அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளும் அறிவு மிக்குடையோராக இருப்பர் என்று கூறுகிறார். கார்ல் பியர்சன் என்பவரும் இதை ஆதரிக்கிறார்.

இதைப் பற்றி மேலும் பல ஆராய்ச்சிகள் நடந்தன. உயிரியல் வாதிகள், மனோவியல் வாதிகள், புள்ளிவிவர வல்லுநர் முதலானோர் இரட்டைப் பிறவிகளுடைய உடல் அமைப்புக் குணங்களையும், ஒழுகலாறுகளையும் படித்தனர். சில சோதனைகளில் இரட்டையர்களிடையே ஒரே விதமான உடல், மன ஒற்றுமை நிலவியது. அதைக்கொண்டு N. D. M. ஹிர்ஷ் (Hirsch) போன்றவர்கள் மரபுநிலை அறிவை மிகவும் நிர்ணயிக்கிறது என்று கருதினார்கள்.

ஆனால் விரிவான ஆராய்ச்சிகள் மேற்கொண்ட போது இரட்டையரிடத்தே (Identical Twins) —ஒரே விந்தில் உருவானவர்கள்) நெருங்கிய ஒற்றுமை நிலவுகிற போதிலும், சிறப்பான வேறுபாடுகளும் தென்படுகின்றன என்று தெரிய வந்தது. ஒரே விந்தில் உருவான ஐந்து பிறவிகளான டயோன்ஸ் (Dionnes) நோக்கத் தக்க உடல், மனமாறுபாடுகளை வெளிக்காட்டினர் என்பதே போதுமான சான்றாகும். (Ref: H. D. கார்டர் (Carter): "Intelligence: Its Nature and Nurture").

ஒரே விந்தில் உருவான இரட்டையர்களை வெவ்வேறு சூழ்நிலைகளில் வைத்தும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. H. J. ம்யூல்லர் (Muller) என்பவர் இரண்டு வார்–வயது இரட்டைப் பிறவிகளைப் பிரித்து வைத்து ஆராய்ச்சி நடத்தினார். அவர் கண்ட முடிவு இது: மனத்திறன் (Mental ability) பிறப்பினாலும், அறிவுக்குச் சம்பந்தமில்லாத மற்றைய குணங்கள் (Non-Intellectual Characteristics) சூழ்நிலையாலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

அண்மையில் H. H. நியூம்ன் என்ற உயிரியல் வாதியும் F. N. ஃப்ரீமன் என்ற மனவியல் வல்லுநரும், K. J. ஹோல்சிங்கர் என்ற புள்ளிவிவர வல்லுநரும் பத்தொன்பது ஜோடி (ஒரே விந்தில் உருவான) இரட்டையரை வெவ்வேறு வீடுகளில் வைத்து வளர்த்து ஆய்வு நடத்தினர். சூழ்நிலை வேறுபாடுகளால் உடல், மன, ஆளுமைப் பண்புகளில் ஏற்படும் மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும் நோக்கினர். ஆய்வின் முடிவில், உடலமைப்புக் குணங்கள் ஓரளவு சூழ்நிலையால் பாதிக்கப்படுகின்றன; பல்வகைத் திறன்களும், பேறுகளும் (Achievements) சூழ்நிலையால் பாதிக்கப்படக் கூடியன; ஆளுமைப் பண்புகள்

அதிகமாகப்பாதிக்கப்படுகின்றன என்று கண்டறிந்தனர். அந்த 19 ஜோடிகளில், ஐந்து ஜோடிகளிடையே அறிவுத் திறன்களில் வேறுபாடுகள் காணப்பட்டன. எனவே, அவர்கள் ஒருவனுடைய வளர்ச்சியை மரபு நிலையும், சூழ்நிலையும் சேர்ந்தே தீர்மானிக்கின்றன என்ற முடிவுக்கு வந்தார்கள்.

ஆகவே, ஒரே விந்தில் உருவான இரட்டையர்களிடம் கூட மரபுநிலை வேறுபாடுகள் இருக்கும். மரபுநிலை மட்டுமே ஒருவனுடைய மனத்திறனையோ, அறிவினையோ நிர்ணயிக்கும் என்பதோ, மரபுநிலைக் குணங்கள் நிலையானவை என்றோ முடிவு கட்ட முடியாது. ஒரே விந்தில் உருவான இரட்டையர்களில் ஒருவனை அமெரிக்காவிலும், இன்னொருவனை காங்கோ நாட்டிலும் வளர்த்தால், நிச்சயம் இருவர்களிடையே வேறுபாடுகள் தோன்ற இடமுண்டு.

F. N. ஃப்ரீமன், K. J. ஹோல்ஸிங்கர், B. C. மிட்செல், B. S. பர்க்ஸ் முதலானோர் மேலும் பல ஆய்வுகளை நடத்தினர். வேறுபட்ட மரபு நிலைகளைச் சார்ந்த குழந்தைகளை ஒரே சூழ்நிலையில் வைத்து வளர்த்து ஆய்வுகள் நடத்தினர். மிஸ் B. S. பாக்ஸ் மட்டும் மரபுநிலை ஒருவனுடைய ஆளுமையில் 80% மரபு நிலையும், 17% சூழ்நிலையும் உருவாக்குகின்றன என்று கண்டறிந்தார். ஆனால் அவர் நடத்திய ஆய்வுகளுக்குக் கிடைத்த பின்னணி தகுந்ததாக, பொருந்தியதாக, இல்லை.

F. N ஃபீரிமனும், K. J. ஹோல்ஸிங்கரும், B. C. மிட்செல்லும் சேர்ந்து நடத்திய ஆய்வுகளிலிருந்து, பராமரிப்பு விடுதிகளில் வளர்க்கப்படும் குழந்தைகளின் அறிவுத்திறன் அவற்றின் சூழ்நிலையால் பாதிக்கப்படுகின்றன; உயர்ந்த விடுதிகளில் ஆரம்பமுதல் வளரும் குழந்தைகள் அறிவின் வளர்ச்சியைக் காட்டுகின்றன; சில குழந்தைகள் தமது பெற்றோரைக் காட்டிலும் அறிவிலும், குணத்திலும் உயர்ந்து நிற்கின்றனர் என்று தெரிய வந்தது.

H.M. ஸ்கீல்ஸ், M. ஸ்கோடக் ஆகியோர் இயோவா பல்கலைக் கழகத்தில் 150 குழந்தைகளைக் கொண்டு ஆய்வு நடத்தினர். அவற்றில் பெரும்பாலானவை இழி பிறப்புடையவை. அவற்றில் 16 குழந்தைகளின் தாய்மார்கள் 'மந்த புத்தி' உடையவர்கள். அதாவது 71 அறிவு ஈவு (Intelligent quotient) உடையவர்கள். ஆனால் அந்தப் பதினாறு குழந்தைகளும் (ஒரே பராமரிப்பு விடுதியில் வளர்ந்தவை) இரண்டு ஆண்டுகள் கழித்து 116 அறிவு ஈவு கொண்டிருந்தனர்.

இத்தகைய ஆய்வு முடிவுகள் உணர்த்துவது, மரபு நிலையால் மட்டுமே அறிவு நிர்ணயிக்கப்படுகிறதில்லை என்பதே. இன்னும் சொல்லப் போனால், மரபு நிலை அறிவை வளர்க்கக் கூடிய ஆற்றலை நிர்ணயிக்கிறது எனலாம்.

## மற்ற ஆராய்ச்சிகள்

இந்தப் பிரச்னை பற்றி மேலும் பல ஆராய்ச்சிகள் நடந்தன. வகுப்பு (Class) ரீதியாகவும், தொழில் (Occupation) ரீதியாகவும் ஆய்வுகள் நடைபெற்றன. உயர்ந்த அறிவுத் திறமை கொண்ட வகுப்பினரிடையே சிறந்த மேதைகள் தோன்றுகின்றனர். உதாரணமாக, அரசு குடும்பத்தினரில், மற்றவர்களைக் காட்டிலும் அதிக அறிவுடையோர

ரும், பாதிரிமார் குடும்பங்களில் மற்றைய சிறந்த குடும்பங்களைக் காட்டிலும் அதிக அறிவுடையோரும் பிறக்கின்றனர். மற்றத் தொழிலாளர்களைக் காட்டிலும் உழவர்களிடத்திலும், உழவர்களைக் காட்டிலும் வணிகரிடத்திலும், வணிகரைக் காட்டிலும் உத்யோகஸ்தர்களிடத்திலும் அதிக அறிவுத் திறமை காணப்படுகிறது. F. A. வுட்ஸ் (Woods) எழுதிய "Mental and moral Heredity in Royalty" என்ற நூலிலிருந்தும், J. மக்கீன் காட்டெல் (Mckeen Cattell) எழுதிய "American Men of Science" என்ற நூலிலிருந்தும் அமெரிக்க விஞ்ஞானிகளில் அதிகம் பேர் உத்தியோக வகுப்பிலிருந்தும், மிகக் குறைந்த பேர் விவசாய வகுப்பிலிருந்தும் வெளி வருகின்றனர் என்று தெரிய வருகிறது.

S. S. விஷர் (Visher) என்பவர் 48,000 குழந்தைகளைக் கொண்டு ஓர் ஆய்வு நடத்தினர். அவர்களில், பாதிரிமார்களின் குழந்தைகளுக்கு அறிவால் உயர 2400 வாய்ப்புக்களும், உத்தியோகஸ்தர்களின் குழந்தைகளுக்கு 1035-ம் வணிகர்களின் குழந்தைகளுக்கு 600-ம், உழவர்களின் குழந்தைகளுக்கு 70-ம், திறமையான தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு 30-ம் திறமையற்ற தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு 1-ம் உள்ளன என்று கண்டுபிடித்தார்.

இதே போல, பல்வேறு தொழில் வகுப்புகளிலுள்ள குழந்தைகளின் அறிவுத் திறன் பற்றி ஓர் ஆய்வு நடந்தது. அதில் உத்யோக, நிர்வாக, வணிக அலுவல்களில் பணி புரிவோருடைய குழந்தைகளுக்கு 115 அறிவு ஈவும், உத்யோக, வணிகப் பணிகளில் முழுதும் ஈடுபடாதவர்கள், உழவர்கள், விற்பனையாளர்கள் முதலியோருடைய குழந்தைகளுக்கு 108 அறிவு ஈவும், எழுத்தர், திறமையான தொழில்களில் ஈடுபட்டோர் முதலியோருடைய குழந்தைகளுக்கு 104 ஈவும், சுமாரான திறமையுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 99 ஈவும், திறமையற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 97 ஈவும் உள்ளன என்று நிர்ணயிக்கப்பட்டது.

## ஆய்வின் குறைகள்

குறிப்பிட்ட வகுப்பினரில் (குறிப்பிட்ட காலத்தில்) அறிவுடையோர் அதிகம் பிறந்திருக்கிறார்கள் என்பது ஓரளவு உண்மையே. ஆனல் அதற்கு மரபு நிலையே காரணம் என்று முடிவு கட்டுவது தவறு. மேலே காட்டிய ஆய்வுகளின் முடிவுகள் காரணத்தைப் பற்றி (மரபு நிலை அல்லது சூழ்நிலை) நேரிடையாக எதுவும் தெரிவிக்கவில்லை. மேற் குறிப்பிட்ட ஒவ்வொரு வகுப்புக்கும் தனித் தனியான வேறுபட்ட சூழ்நிலை இருக்கிறது. திறமையற்ற தொழிலாளியின் மகனுக்கு வாய்க்கும் சூழ்நிலையும், வாய்ப்பு வசதிகளும் பாதிரியின் மகனுக்கு வாய்க்கும் சூழ்நிலையும் வாய்ப்பு வசதிகளும் வேறுபட்டவை யல்லவா? இந்த நிலையில் ஒருவனது அறிவுத் திறமையைக் கணிக்கும் போது மரபு நிலையைக் காட்டிலும், சூழ்நிலைக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். அப்போது தான் ஆய்வுகள் தெளிவான நிலையை எடுத்துக் காட்ட முடியும்.

"வெள்ளை இனம் அறிவால் நீக்ரோக்களைக் காட்டிலும் மேம்பட்டது" என்ற கருத்து அமெரிக்க வெள்ளையர்களிடையே தீவிரமாகப் பரவி வருகிறது. இன ரீதியாக மரபு நிலைக்கும்,

அறிவுக்கும் உள்ள தொடர்பை ஆராயவும் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. முதல் உலகப் போரின் போது, அமெரிக்கப் படையைச் சேர்ந்த நீக்ரோக்களிடத்தும், வெள்ளையர்களிடத்தும் மனவியல் ஆய்வுகள் நிகழ்த்தப் பட்ட போது, நீக்ரோக்களுக்குச் சராசரி மனேவயது (Mental Age) 10.1 ஆண்டுகள் என்றும், வெள்ளையர்களுக்கு 13.1 ஆண்டுகள் எனவும் தெரிய வந்தது. (Ref: ஆர். எம். யெர்க்ஸ் (Yerkes): "Psychological Examining in the U.S. Army, Memoirs").

இந்த ஆய்வு முடிவு ஏற்கக் கூடியதா? இல்லை. இந்த ஆய்வின் முடிவை எங்ஙனம் நீக்ரோக்கள் அனைவர்க்கும், வெள்ளையர்கள் அனைவர்க்கும் பொருத்த முடியும்? ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் சரியான, தகுந்த மாதிரிகள் தாமா (Samples)? இந்த ஆய்வு எப்படி எக்காலத்துக்கும் பொருந்தும்? திறமைகளைக் காண உதவுகின்ற ஓர் ஆய்வின் முடிவைக் கொண்டு எப்படி ஒருவனது இயற்கையறிவைக் கணிக்க இயலும்? இந்த ஆய்வு பாரபட்சம் அற்றதுதானா? இத்தகைய ஆய்வினை (களை) மனவியலார் அனைவரும் ஒப்புக் கொள்ளவில்லையே!

இவற்றிற்கு மேலாக, மேலே காட்டிய 'முடிவு' வெள்ளையர்களுக்கும் நீக்ரோக்களுக்கு மிடையே அறிவின் பாற் பட்ட மரபு நிலை அல்லது இன வேறுபாடுகளை எங்கே குறிக்கிறது?, வெவ்வேறு பயிற்சி, அநுபவம், வீட்டு வாழ்க்கை, சூழ்நிலை, சமூக வாய்ப்பு முதலியவற்றின் செல்வாக்கை இந்த ஆய்வு ஆராய்ந்தறியவில்லையே?

இத்தகைய கேள்விகள் இத்தகைய ஆய்வுகளை ஐயமுறச் செய்கின்றன.

அமெரிக்காவில் வெள்ளை ஆதிக்கமும், நிறவெறியும், இன பேதமும் தீவிரமாக நிலவுகையில், நீக்ரோக்களுக்குக் கீழான சூழ்நிலையே வாய்க்கிறது என்பது 'உண்மையல்லவா? சமூக வாய்ப்புகள் மறுக்கப்படும் போது ஒருவனது இயற்கையறிவு வெளிப்பட்டு வளர இடமேது? வழியேது?

பேராசிரியர் ஆட்டோ க்ளின் பெர்க் (Otto Klineberg) இன வேறுபாட்டைப் பற்றி ஆராயும் போது, அந்த ஆய்வு பேதம் நீங்கிய தன்மையும், சம வாய்ப்புக்கள் தரப்படும் நிலைமையும் நிலவும் நிலையில் நிகழ வேண்டும்," என்கிறார். இதன்படி நியூயார்க் நகரில் நடந்த ஓர் ஆய்வின் முடிவின் போது அமெரிக்காவுக்கு வடக்கே வாழும் நீக்ரோ குழந்தைகள் தெற்கே வாழும் நீக்ரோக் குழந்தைகளைக் காட்டிலும் ஏழு மடங்கு அறிவு உடையோராய் விளங்கினர் என்று தெரிய வந்தது. (காரணம், தெற்கே நிற வெறி தீவிரம். எனவே அறிவை வெளிக் காட்டி வளர்க்க வாய்ப்பில்லை.)

மரபு நிலைக்கும், மெய்ப் பண்புகளுக்கும் (Physical Traits) உறவுண்டு என்றும், மெய்ப்பண்புகள் மரபு நிலை மூலமாக வெளிப் படுகின்றன என்றும் உரைக்கப் படுவதையும் ஆராய்வோம். R. E. சேடாக் (Cheddock) என்பவர் நடத்திய ஒரு ஆராய்ச்சி மூலம், ஜப்பானியர் 63.24 அங்குலம் சராசரி உயரமும், அமெரிக்கர் 67.51 அங்குலம் சராசரி உயரமும் கொண்டவர்கள் என உணர்த்தப் பட்டது. இந்த ஆராய்ச்சி மூலம், மரபு நிலைக்

கும்; மெய்ப் பண்புகளுக்கும் உள்ள தொடர்பு நிலைநாட்டப் பட்டது. ஆனால் இருவருடைய வாழ்க்கை நிலைமைகள், உணவு வகைகள், ஊட்ட வகை, தட்ப-வெப்ப நிலை முதலியனவற்றை யும் நாம் ஆராய வேண்டுமே!

ஃப்ரான்ஸ் போஸ் (Franz Boas) என்பவர், அமெரிக்காவில் குடியேறி வாழ்கின்ற அந்நியரு டைய குழந்தைகள் (குறிப்பாக யூதர் (Jewish) மக்களும், ஜப்பா னிய மக்களும்) தமது பெற்றோ ரைக் காட்டிலும் சராசரி இரண்டு அங்குல உயரம் அதிகமாக வளர்ந்திருக்கிறார்கள் என்றும், தலையமைப்பில் வேறுபாடுகள் காட்டினர் என்றும் எடுத்துக் காட்டினார்.

எனவே, மரபுநிலை மட்டுமே தேசீய அல்லது இனவகுப்பா ரிடை நிலவும் மெய்ப்பண்பு வேறுபாடுகளுக்குக் காரணம் என்பது தெளிவற்ற வெறும் ஊகமேயாகும்.

## சூழ்நிலையே காரணம்

"ஒருவனுடைய உடல் வளர்ச் சியை 'ஜெனி'க்கள் மட்டுமல்லா மல் முக்கியமாகத் தாயின் நலம், வாழ்க்கை நிலைமைகள், சுரப்பிக் கோளாறுகள், உணவுப் பழக்கங் கள், தட்ப வெப்பநிலை, தொழில், உடற்பயிற்சி, நடக்கின்ற, தூங்கு கின்ற முறைகள் முதலியனவும் நிர்ணயிக்கின்றன" என்று ஷெய்ன்ஃபெல்டு (Scheinfeld) என்பவர் "You and Heredity" என்ற தம் நூலில் குறிப்பிடு கிறார். இன்றைய அமெரிக்க மாணவர்கள், இளைஞர்கள் சென்ற முப்பதாண்டுகளுக்கு முன் வாழ்ந்த முன்னோரைக் காட் டிலும் உயரமாயும், பருமனாயும் இருப்பது இதற்கு ஏற்ற உதார ணம்.

ஒரு குடும்பத்தின் நல்ல பண்பு களோ, தீய பண்புகளோ பரம் பரை பரம்பரையாக வருமா? மனி தத் தலைகளை வேட்டையாடும் (Head Hunting) நாகர்களின் வழக்கமும், தாசிகளின் தொழி லும் இதற்கு ஆதாரவாய்க் காட் டப்படுகின்ற உதாரணங்கள். ஆனால் இவை இன்று மறைந்து வருவதும் (விட்டதும்), அவர்க ளுடைய குழந்தைகளை வேறு சூழ்நிலையில் பிரித்து வைத்து வளர்த்தால் அத்தகைய பண்பு அவர்களிடத்தே எழ முடியாத நிலை ஏற்படும் என்ற உண்மை யும் மேற்கூறியதைப் பொய்ப் பிக்கும். வைதீகமான குடியிற் பிறந்த ஒருவன் முற்போக்கான குடியில் ஆரம்பமுதல் வளர்க்கப் படுவானாகில் அவன் பிறந்த குடியின் பண்புகளின் சாயலை அவனிடம் நாம் காண இயலாது.

ஒருவனுடைய பெரும்பாலான இயல்பு (Nature) மரபு நிலையின் பாற் பட்டதா? அனைவரும் பொதுவாக நம்புகிற இதனை W. F. ஆக்பர்ன் (Ogburn) என் பவர் மறுக்கிறார். ஒரு தாய்ப் பறவையிடமிருந்து ஒரு குஞ்சு பிரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட போது அது தன் இனத்துக் குரிய குரலையோ, ஒலியையோ எழுப்பவில்லை. புலிக்குட்டியை அவ்விதமே வளர்த்தால் அதற்கு பாய்வதற்கோ, விலங்குகளைக் கொன்று தின்னவோ தெரியாது. ஒரு பறவை தன் இனத்துக் குரிய குரலை - ஒலியை எழுப்பு வதோ (உ-ம். 'கீச் கீச்' சென்ற கிளிகளின் ஒலி), புலி தன் இனத் துக்குரிய செய்கைகளைப் புரி வதோ இயற்கையிலே வாய்ந் தவையல்ல. அவை கற்றலின் (Learning) மூலமாகப் பெற் றவை. ஒருவனுடைய செயல்கள், குணங்கள், இயல்புகள் முதலி யன கற்றலின் மூலமே பெறப்படு

கிறது என்பது ஆக்பர்ன் கருத்து. புலாலுண்ணுபவை, மரக்கறியுண்ணுபவையாகவும், பின்னவை முன்னவையாகவும் மாற்றப்பட முடியும்.

இதற்கொரு சீரிய சான்று: ஓநாய்க் குழந்தைகள் (Ferals). மான்சிங் (1905), கமலா (1929), பரசுராமன் (1957), ராமு (1962) ஆகிய ஓநாய்க் குழந்தைகள் இயற்கையிலே மனிதப் பிறவிகள். இவை ஓநாய்களால் எடுத்துச் செல்லப்பட்டு வளர்க்கப் பட்டதனால் ஓநாய்க் குணங்கள் பெற்றமை சீரிய சான்றாகும். ஆனால் அவை முற்றும் மரபு நிலையில் வாய்த்த இயல்பினை இழக்கவில்லை என்பது அவை பராமரிப்பு விடுதிகளில் சேர்க்கப்பட்டுக் கற்பிக்கப்பட்டபோது தெரிய வந்தது.

எனவே, ஒருவனுடைய இயல்பின் பெரும்பாலான குணங்கள் மரபுநிலையின்பாற் பட்டவையல்ல என்பதை நாம் உணர முடியும்.

மொழியையும் மரபு நிலைக்கு இணைத்துக் காட்டுவர். மொழி பரம்பரையாக வரும் என்பதும், கீழ்க்குடியிற் பிறந்து வளர்கின்ற ஒருவன் கீழான சொற்களைப் பேசுவதும், மேற்குடியிற் பிறந்த ஒருவன் மேலான சொற்களைப் பேசுவதும் இதற்குச் சான்றுகளாகத் தரப்படுகின்றன. ஆனால், உதாரணமாகத் தமிழ்ப் பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தை ஓர் ஆங்கிலோ-இந்தியக் குடும்பத்தில் வளர்க்கப்படுமானால் அதன் தாய்மொழி தமிழாக இல்லாமல், இங்கிலீஷாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலான குடியிற் பிறந்த சிறுவன் கீழ்க்குடிப் பிள்ளைகளோடு நெருங்கிய தொடர்பு வைப்பானேயாகில் அவன் கீழ்த்தரமான சொற்களையே பேசுவான். எனவே மொழியும் கற்றலின் மூலமே பெறப்படுகிறது என்பது தெளிவு.

மரபு நிலைக்கும் குற்றங்களுக்கும் தொடர்புண்டா? சில குற்ற இயல்வாதிகள் திருடன் வழியில் திருடன் பிறப்பான் என்றும், குற்றமிழைக்குந் தன்மை பரம்பரைக்குணம் என்றும் கூறுவர். ஆனால் இன்றைய குற்றவியல் உலகம், "ஒருவன் பிறப்பினால் குற்றவாளியாவதில்லை; சுற்றுப்புற சூழ்நிலைகளினாலே தான் ஆகிறான்" (A Criminal is not born but made by circumstances) என்று கூறுகிறது.

மரபுநிலை வழியாய்வரும் நோய்களுண்டா? தொழுநோய் பரம்பரை நோய் என்ற கருத்து பரவலாக உள்ளது. ஆனால் உலகச் சுகாதார நிறுவனம் (W. H. O.) இதை ஆதாரத்தோடு மறுத்துள்ளது. ஆனாலும் புணர்ச்சிபற்றிய நோய்கள் (V. D.) பெற்றோர்களிடத்தில் குழந்தை உருவாகும் போது தொற்றியிருக்குமேயானால் அவைபிறக்கும் குழந்தைகளையும் பாதிக்கும் என்பது உண்மை.

எனினும், நாம் மரபு நிலையைத் தள்ளிவிட முடியாது. சூழ்நிலையால் மாறுதலை உண்டாக்கிக் கொள்ள ஒருவனுக்கு 'இயற்கையில் ஓர் ஆற்றல் தேவை;' நிச்சயம் உண்டு. அந்த ஆற்றலை மரபு நிலை தருகிறது என்பதில் ஐயமில்லை. சமூகவியல், மனவியல், பிறப்பியல், உயிரியல் வல்லுநர்களும், நடத்தை ஆய்வாளரும் (Behavioural Scientists) மரபு நிலையை ஒரு வலிமையான கூறாகவே (Potential Factor) கருதுகிறார்கள். அதுவே உண்மையுங் கூட.

★★

குறள்: இன்பத்துப்பால்

# 4. நலம் புனைந்து உரைத்தல்

[புணர்ந்து பிரிந்தபின் அதை நினைத்து மகிழ்ந்த காதலன் தன் சேர்க்கைக்குக் காரணமான காதலியை எண்ணியெண்ணி அவள் இல்லாத இடத்தில் அவளது உறுப்புக்களை வர்ணித்துத் தனக்குள்ளாகவே சொல்லிக்கொள்வது. இதனால் ஆண் மகனின் வேட்கை சிறிது தணிகிறது போலும்!]

அனிச்சப்பூவே! நீ மிகவும் மிருதுவான தன்மையுடைய மலர் தான்; உன்னை வாழ்த்துகிறேன். ஆனாலும் நான் விரும்பும் காதலி உன்னைக் காட்டிலும் மிருதுவான தன்மையுள்ளவள்.

நெஞ்சமே! இவளுடைய கண்கள் பலரால் காணப்படுகின்ற மலர்களைப்போல் இருக்கின்றன என்று எண்ணி, நீ மயங்குகின்றாய். மூங்கிலை ஒத்த தோளையுடைய இவளுக்குத் தளிரே உடல்; முத்தே பல்; இயற்கை மணமே உடல் மணம்; வேலே கண்!

இது மட்டுமா? குவளை மலருக்குப் பார்க்கும் சக்தி இருக்குமேயானால், "இவள் கண்ணுக்கு நான் ஈடாக மாட்டேனே", என்று வெட்கித் தலை குனியும்.

இவள் தனது மென்மை அறியாமல் மென்மைமிக்க அனிச்ச மலரைக் காம்பு கிள்ளாமல் சூடிக்கொண்டாள்; இதனால் இவளது இடை நொந்து வருந்துகிறது; இந்த இடைக்கு மகிழ்ச்சி தரும் பறை ஒலி இருக்காது!

விண் மீன்கள் இவளது முகத்துக்கும் திங்களுக்கும் வேறுபாடு கண்டு உணர முடியாதபடி நிலை கலங்கித்திரிகின்றன. குறைந்து நிறைகின்ற மதியைப்போல இவள் முகத்துக்குக் குறைவோ, களங்கமோ கிடையாது. திங்களே! இவள் முகத்தைப்போல உன்னால் ஒளி வீசக் கூடுமானால், உன்னையும் நான் காதலிப்பேன். மலர் போன்ற கண்களைக் கொண்ட இவளுடைய முகத்தை ஒத்திருக்க நீ விரும்புவாயானால், பலரும் காணும்படியாக நீ தோன்றாதே!

அனிச்ச மலரும் அன்னப் பறவையின் (மென்மையான) இறகும் மாதரின் மென்மையான அடிகளுக்கு நெருஞ்சிமுள் குத்துவதைப் போன்ற துன்பத்தைத் தரக்கூடியவையாகும்.

## மதிப்புரை :

### 1. "வேலன் சிந்தனைப் பூங்கொத்து"

[விலை : ரூ. 1-00
பக்கம் : 114
வெளியீடு : தமிழ் பாதுகாப்புக் கழகம், அரண்தாங்கி.]

ஆசிரியர்: திரு. வி. பொ. பழனிவேலன் தம் நூலுக்குச் சூட்டிய பெயர் தகுதியான பெயர். ஒவ்வொரு கட்டுரையும் சாதாரண அறிவு படைத்தவரையும் சிந்திக்கவைக்கத் தவருது. மொழியையும் நாட்டையும் அடிப்படையாகக்கொண்டு பதினன்கு கட்டுரைகளை எழுதுகிருர் ஆசிரியர்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற முதலாவது கட்டுரையில் அற்றைத் தமிழர் சாதி, கடவுள் பற்றி கொண்ட எண்ணம் என்ன? இந் நாளில் நிலை என்ன? ஏன்; எப்படி வந்தது இம்மாற்றம் என்பதை நுணுக்கமாக ஆய்ந்து விளக்குகிருர்.

இது போன்றே அக்காலத் தமிழர் யாரை உயர்ந்தவர் என்று கருதினர்கள்; இன்று உயர்ந்தவர் எனப்படுவோர் எந்த அளவுகோலால் அளக்கப்பட்டு நிர்ணயிக்கப்படுகிருர்கள் என்பதை விளக்கமாக, விவரமாக எழுதுகிருர்: இன்றையப் பெரியவர்களின் தகாத செயலால் உளம் நொந்து கடினமான சொல் அம்புகளால் தாக்குகிருர்; வேதனையாகத்தான் இருக்கிறது. ஆனல் புரையோடிய புண்ணுக்கு அறுவைச் சிகிச்சை தவிர, வேறு வழியில்லையே.

"தமிழில் பிற மொழி கலக்கலாமா?; எது தமிழ்ப்பற்று?" எனும் பகுதிகளில் ஆசிரியர் தம்மையும் மறந்த நிலையில் "பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி செய பான்மை கெட்டு நாமமது தமிழரெனக் கொண்டு வாழும்" சிற்றுயிர்களை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிருர். தமிழ் எங்கள் உயிர் என்னும் உயர்ந்த கருத்து அந்த உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்ட காரணத்தால், மொழிக்கு ஊறு தேடுபவர்களை அடிபட்ட சிங்கம் போல் சீற்றத்துடன் பாய்ந்து தாக்குகிருர். எல்லோருக்கும் இப்பற்று வேண்டும்; இதைப் படிப்பவருக்காவது அப்பற்று நிச்சயம் வரும்.

"பேய்; புராண-ஆராய்ச்சிகள்" பகுத்தறிவுக்கு ஒரு நல் விருந்து. தமிழர் திருமணமுறையில் "களவும் கற்றுமற" என்பதற்குக் கொடுத்த விளக்கம் பாராட்டுதலுக்குரியது. "திரைப்படக் காட்சி"யில் படப்பிடிப்பை அரசாங்கமே மேற்கொள்வது. நல்லது என்ற கருத்துப் பொருளாதார அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் வரவேற்கப் பட வேண்டிய கருத்தே.

"இந்தி எனும் வரைவின் மகளுக்கு" என்று ஆசிரியர் கூறுவது இந்தியால் தமிழகம் அடைந்த வேதனைகண்டு, தமிழகத்து நல்லவர் படும் துயரம் கண்டு, அல்லலுற்று ஆற்ருது, கோபத்துடன் கூறிய வார்த்தைகளே என்ருலும்-நாம் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தாலும்-முழு மனதுடன் அவ்வார்த்தைகளை

ஏற்க முடியாது. நம் தாயைப் புகழ அடுத்தவரின் தாயை இகழ்வாகப் பேசும் கருத்து அவ்வளவு உகந்ததல்ல.

''சிந்தனைப் பூங் கொத்து'' பல வித வண்ண மலர்களால், தமிழ், தமிழகம் என்னும் நாரினுல் பிணைக்கப்பட்ட அழகிய பூச்செண்டு. ஒவ்வொரு மலரிலும் மணம் உண்டு, அழகுண்டு. அது நம் அறிவுக்கு விருந்தளித்து மூடக் கொள்கை எனும் முடை நாற்றத்தைப் போக்கி வீட்டை மணத்துடன் வைக்கும் என்பதில் ஐயமில்லை. இது போன்ற நூற்கள் தமிழகத்தில் நல்லவரை உருவாக்க உறுதுணையாக இருக்கும். வாழ்ந்து, வீழ்ந்த தமிழகத்துக்கு இது போன்ற நூற்கள் தான் தேவை.

—குழந்தைவேலு

## 2. ''தமிழ் அன்னை சொல்கிருள்''

(ஆசிரியர் மா. பஞ்சனதம். பக்கம் 72. பதிப்பாளர் தமிழ்ச் செல்வி நிலையம், பெ. பொன்னேரி, பெண்ணுகடம் அஞ்சல் (தெ. ஆ. மாவட்டம்).

இந்நூல் தமிழ்த்தாய் தன் வாயிலாக தனது குறைகளை எடுத்துக் கூறி அறிவுரைகளைப் புகலும் முறையில் எழுதப்பட்டுளது. தமிழ்நாடு தனியரசு உடையதாக இராதுபற்றியும், தமிழ்நாட்டில் இந்தி நுழைவால் ஏற்படும் இழிவுபற்றியும், தமிழ் ஆட்சிமொழியாக வேண்டுவது பற்றியும் இந்நூல் பேசுகிறது. ஆசிரியர் முன்னுரையில், ''இந்நூல் எந்த சமயத்தினரையும் தாழ்த்தி ஆக்கப்பட்டது அன்று'' என்று கூறியிருந்தும் கிருத்துவ சமயத்தினரிடமும், அதன் வளர்ச்சிபற்றியும் வெறுப்புணர்ச்சியுடன் எழுதியுள்ளார். ஆசிரியர் தமக்குத்தோன்றிய பல எண்ணங்களை ஆராயாது அப்படியே இந்த நூலில் பெருக்கெடுத்து ஓடச்செய்துள்ளார். ''காந்தி அண்ணல் எந்த ஒரு மதத்திற்கோ சமயத்திற்கோ புதுமையாக அடிமையாகவில்லை; பிறரையும் அடிமைப்படுத்த விரும்பவில்லை. ஏசு அப்படி அன்று; ஒரு மதத்தையே ஏற்படுத்திவிட்டார்'', என்று ஆசிரியர் எழுதியிருப்பது அவருடைய தெளிவின்மையை எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய கூற்றுகள் பல இந்த நூலில் பரவிக்கிடக்கின்றன. இனி எழுதும் நூல்களையாவது, நன்ருக சிந்தித்துத் தெளிவாக எழுதுவது நல்லது.

## 3. ''தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்''

(ஆக்கியவர்: பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு. பக்கம் 539+6 கிடைக்குமிடம்: முப்பால் நிலையம்; 40 எ. கிரி அம்மன் கோவில் வீதி, பூ ளை மேடு, கோவை 4. விலை ரூ. 10-0)

பண்டிதர் அ. கி. நாயுடு அவர்கள் எழுபத்தி நான்கு வயது நிரம்பிய முழு பெரும் புலவர். இவர் தமிழ்மொழிமட்டும் அன்றி வடமொழியும் கற்றுத்தேர்ந்த அறிஞர். இருக்குவேதம், பகவத் கீதை, பாகவதம் போன்ற, வடமொழி நூல்களிலிருந்து மேற்கோள் பல இவ்வாராய்ச்சி நூலில் விரவிக் கிடக்கின்றன. இவர் இருபது ஆண்டுகளாக பல நூல்களை இயற்றியதுடன், தொல்காப்பியரின் இலக்கணத்தையும் ஆராய்ந்து, அறிந்து, தெளிந்த உண்மைகளை இந் நூலாக வடித்துள்ளார். இது தமிழுக்கு ஓர் அணி; தமிழருக்கும் பெருமை தரும் ஓர் நூல்.

தொல்காப்பியர் கண்ட இலக்கணமே நமக்குக்கிடைத்திருக்கும் நூல்களில் மிகப் பழமையானது. இவர் எக்காலத்தவர் என்பது பற்றி பல மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இவர் பல்லவர்கள் காலத்தில் வாழ்ந்தவர் என்று கூறுவோரிலிருந்து எகிப்து நாட்டு 'ஃபாரோ' மன்னர்கள் காலத்திற்கும் முன்பிருந்தவர் என்று கூறுவோர் வரை, பல ஆராய்ச்சியாளர்கள் இவர் காலத்தை ஆராய்ந்தும் முடிவு கண்டாரில்லை. திரு. நாயுடு அவர்கள் தொல்காப்பியர் கி. மு. 10-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்று கருதுகிறார். அது மட்டும் அல்ல. வரலாற்றுத் தொடக்க நூல்களுள் தமிழருக்கு முதல் நூலும் முன்னூலுமாக இருப்பது தொல்காப்பியரின் இலக்கணமே என்றும், இது ஆரியரின் இருக்கு வேதத்திற்கும் காலத்தால் முற்பட்டது என்றும் துணிந்து கூறுகிறார்.

தொல்காப்பியரின் இலக்கணத்தை, "தொல்காப்பியம்" எனவோ, 'தொல்காப்பியன்' எனவோ அழைப்பது தவறு என்றும், "ஐந்திறம்" எனக் கொள்வதே ஏற்புடைத்து என்றும், தக்க இலக்கண, இலக்கிய ஆதாரங்களுடன் திரு. நாயுடு இந்நூலில் விளக்கி உள்ளார்கள். ஐந்திறத்திற்கு உரைகண்ட இளம்பூரணர் முதலிய பழைய ஏழு உரையாசிரியர்களும், இந்த நூற்றாண்டில் 'ஆராய்ச்சிகள்' எழுதிய மகா வித்துவான் ரா. இராகவையங்கார் முதல் புலவர் குழந்தை அவர்கள் வரை பலரும் பல கோணங்களிலிருந்து ஐந்திற சூத்திரங்கள் பலவற்றுக்குக் கொண்ட பொருள்களில் உள்ள தவறுகளை இந்நூல் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. உரையாசிரியர்கள் வைதீக, பௌத்த, சமண சமயங்களின் கொள்கைக்கு ஏற்ப உரைகண்டுளார்கள். இக்கால ஆராய்ச்சியாளர்களில் திரு. இராகவையங்கார் போன்றோர் தமிழும் தமிழர் பண்பாடும், ஆரிய மொழிக்கும் கலைக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளன என்று எடுத்துக்காட்டவே தம் ஆராய்ச்சிகளை செய்து முடித்துள்ளார்கள், திரு. இராகவையங்கார் தொல்காப்பியரை வேத மதத்தினர் என்று கூறுகிறார். திரு. நாயுடு இந்நூலில் திரு. அய்யங்கார் கூற்றை மறுத்தும் தொல்காப்பியர் தமிழர் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் இலக்கணம் கண்டவர் என்பதையும் பசுமரத்தாணிபோல் படிப்போர் உள்ளத்தில் பதியுமாறு எழுதியுள்ளார்கள். இது, திரு. நாயுடு அவர்களே பெருமிதத்துடன் இந்த நூலில் குறிப்பிட்டபடி மூவாயிரம் ஆண்டுகளாக எந்த தமிழனும் செய்ய முன்வராத செயல்.

தொல்காப்பியரின் ஐந்திறத்திற்கு முன்பே தமிழில் பல இலக்கிய இலக்கணங்கள் இருந்தன. தொல்காப்பியரின் நூல்போன்ற பெரியதொரு இலக்கணம், மிக விரிவான இலக்கிய சூழ்நிலையில் தான், தோன்றி யிருக்கவேண்டும் என்பது வெள்ளிடை மலை. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இவற்றில் ஒவ்வொன்றையும் பற்றி தனித்தனி இலக்கண நூல்களும் இருந்திருக்கவேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டே தொல்காப்பியரின் ஐந்திறம் தோன்றியுளது. எழுத்து முதல் அணிவரை ஐந்து திறங்களைப் பற்றியும் கூறும் ஒரு நூல் இதுவே. இது ஒரு முதல் நூல்; வழி நூலன்று; தனி அமைப்புடைய நூல்; ஒருங்கே இலக்கணமும் இலக்கியமும் ஆகிய

நூல்; கலைச்சுவை நிரம்பியது; ஒரு முழு ஞான வாழ்க்கை நூல். என்னே இதன் சிறப்பு!

தொல்காப்பியரின் ஐந்திறம், ஐந்து திறங்களைப்பற்றி கூறிய போதிலும் எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரங்களே கொண்டுளது. பொருள் அதிகாரத்திலேயே உவமைத் திறத்தையும், யாப்பு திறத்தையும், உவமை இயல், செய்யுள் இயல் எனக்கண்டு வைத்துளார். பொருள், யாப்பு, உவமைத்திறங்களை ஒரு அதிகாரத்திலேயே பொருத்தி யிருப்பதற்கு, பல காரணங்களை திரு. நாயுடு இவ்வாராய்ச்சியில் கூறியுள்ளார். முறைப்பட எண்ணி, எழுத்து முறை காட்டிச் செய்த ஐந்திறத்தில் ஏனோ செய்யுளியலுக்குமுன் உவம இயல் அமைந்தது? இந்த இடமாற்றத்திற்குக் காரணம் என்ன? "இடம்மாறிச் செருகலாக" இருக்கலாம். இந்த முரண்பாட்டைப்பற்றி திரு. நாயுடு போதிய விளக்கம் கூறவில்லை.

திரு. நாயுடு அவர்கள் ஐந்திறத்தில் பொருள் திறத்தைப் பற்றியே இவ்வாராய்ச்சியில் எழுதியுளார். அகம், புறம், களவு, கற்பு, பொருள், மெய்ப்பாடு, மரபு, எனும் ஏழு இயல்களில் தொல்காப்பியர் காலத்து தமிழ்ச் சமுதாயத்தின் அமைப்பையும், அதன் பண்பாடுகளையும், அதன் குறிக்கோள்களையும் ஆராய்ந்து; தமிழர் வாழ்க்கை இன்பமும், அமைதியும் நிறைந்த சமத்துவ. சமுதாய வாழ்க்கை என்பதை திறம்பட விளக்கியுள்ளார்கள். தமிழ் சமுதாயம் தொல்காப்பியருக்குப்பின், பிற இன, சமூக, சமய தொடர்புகளால் எவ்வளவு மாற்றமும் முரண்பாடுகளும் கொண்டதாக் அமைந்துளது என்பதை திரு. நாயுடு அவர்களுடைய நூலிலிருந்து நாம் அறியலாம்.

திரு. நாயுடு அவர்களுடைய ஆராய்ச்சியிலிருந்து இன்றையத் தமிழன் அறிய வேண்டிய உண்மைகள் பல. அவற்றில் சில: எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம் என இன்று முழங்கும் முழக்கத்திற்கு முதல் காரணமான தமிழ் சமுதாய இனத்தை (Socialist Society) உலகம் அறியச்செய்வது ஐந்திறம்.' தொல்காப்பியர் திருமணம் செய்து கொள்ளும் ஆண் மகனுக்கும், மகளுக்கும் கூறும் பொருத்தம் பிறப்பு, ஒழுக்கம், ஆளும் தன்மை, வயது, வடிவம், காமக் காதல், நிறைவு, 'அருள், அறிவு, திரு எனப் பத்தாகும். இன்றோ! ஐம்பது ஆண்டுகளுக்கு முன் 10-20 பக்கங்களிலிருந்த வருடாதி நூல்களும், பஞ்சாங்கங்களும் இன்று 100-200 பக்கங்கள் கொண்டனவாகிவிட்டன! இவ் வளர்ச்சியில் திருமணப் பொருத்தங்கள் மண்ணுலகத்தைப் பார்த்து வளராது, அண்ணாந்து விண்ணுலகத்தை நோக்கி வளர்ந்துவிட்டன! இதன் பயனுக்குப் பொருந்தா மணங்களும், போலி இல்லறமும் நாட்டில் மலிந்துவிட்டன. தொல்காப்பியர் காலத்தில் ஒத்த வயதுடைய ஆணும் பெண்ணும், திருமணம் இன்றியே, "அன்புடைய நெஞ்சம் தாம் கலந்து" வாழ்வதுண்டு. ஆயினும் களவு மணம் நிகழ்ந்த இரண்டு திங்களில் கரணமணம் நிகழ்த்தவேண்டும். கரண கர்ட்சி ஐந்திற ஓவியத்தில் இடம்பெறவில்லை. கரணச்சடங்குகள் எவை என் ஐந்திறத்திலிருந்து அறிய முடியாது. பெற்றோர்களும், மற்றோர்களும் " அறிய, உண்டு, உறங்கி, 'யாறும் குளமும் காவும் ஆடி', 'பதியிகந்து நுகர்தலுமே' போதும் எனக் கொண்டார்

போலும்! களவின்றி கற்பில்லை என்பதும், அவை இயற்கை என்பதும் அறிந்த தமிழர் களவையும், கற்பையும் வெளிப்படையாகப் பேசுவது பெருமை எனக் கொண்டிருந்தனர். (பக்கம் 426) இப்பண்பாட்டை இற்றைநாளில் மேலைநாடுகளில் காணலாம்.

மரபியல் 71 வது பாட்டில் "தெரிவுகொள் செங்கோல் அரசர்" என்ற சொற்றொடர் வருவதால் அரசன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவன் என்பது ஐந்திறகாலத்து தமிழன் கருத்தாகும். உலகில் முதன் முதல் குடியரசு கொள்கையைச் சொன்னவர் தொல்காப்பியர் தாம். அவ்விதம் குடியரசு மன்னர்களாக வருபவர்களில் பெரும்பாலோர் வேளாளர் என்பதும் தமிழருக்குப் பெருமை தரும் செய்தி ஆகும்.

தொல்காப்பியத் தமிழர் கூல உணவு உண்டாட்டத்தில் திளைத்தனர்; புலாலையும், கள்ளையும் உண்ணவில்லை. புலவும், கள்ளும் சங்ககாலத் தமிழருக்கு உடன்பாடாகும்.

புறத்திணை 54ம் பாட்டில் வரும், 'இளமை நீர்திறம்' என்ற சொற்றொடருக்கு திரு. நாயுடு அவர்கள் தரும் விளக்கத்தில் அமைந்துள்ள சொல்லோவியம் காம இயல் பற்றி எழுதுவதில் வல்லுனரான D. H. லாரன்சின் சொல்லோவியத்தையும் மிஞ்சி விடுகிறது.

நாடகத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் ஆங்கிலக் கவியரசர் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள், படித்து இன்புறத்தக்கனவே அன்றி நடிக்கத்தக்கன அல்ல, என்று திரு. நாயுடு அவர்கள் எழுதியுள்ளது தவறு. ஷேக்ஸ்பியர் ஓர் தலை சிறந்த நடிகன். தானும் தன் தோழர்களும் நடிப்பதற்கென்றே தம் நாடகங்களை எழுதியுள்ளார். அவை இன்றும் நடிக்கப் பெறுகின்றன. பல்லாயிரம் மக்கள் கண்டு களிக்கின்றனர்.

திரு. நாயுடு அவர்கள், ஐந்திறத்திற்கு பண்டை நாளில் உரைகண்ட உரையாசிரியர்களும், இக்காலத்தில் இதுவரை தோன்றியுள்ள பதின்மூன்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சியாளர்களும் வெளியிட்ட பல கருத்துக்களை ஒட்டியும் வெட்டியும் தம் நூலை எழுதியுள்ளார்கள். குறிப்பாக, திரு. வி. இராகவையங்கார் எழுதியுள்ள 'தமிழ் வரலாறு' என்னும் அரும் பெரும் நூலில் அமைந்த பல தவறுகளையும் பொய்க் கூற்றுகளையும் திடமுடன் கண்டித்துள்ளார்கள்.

இந்த நூலில் பல இடங்களில் அச்சுப்பிழைகள் உள. குறியீடுகள் பொருத்தமாய் அமையவில்லை. இந்தச்சிறந்தநூலை இன்னும் நல்ல முறையில் பதிப்பித்திருக்கலாம். இவ்வளவு சிறந்த நூலை ஆக்கித்தந்தமைக்கு திரு. நாயுடு அவர்களுக்கு தமிழர் பெரிதும் கடமைப்பட்டுளர். திரு. நாயுடு அவர்கள் போற்றும் திரு. தொல்காப்பியரின் திருவடி பின்பற்றி நாம் வாழ்வோமாக.

—சி. சுப்பையா. B. A.

மதிப்புரைக்கு அனுப்புவோர் ஒவ்வொரு நூலிலும் இரண்டு புத்தகங்கள் அனுப்பவேண்டும்.

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29.
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனய் நகர், சென்னை-30

தபால் பெட்டி எண்: 3 தொலைபேசி எண்: 14

தோற்றம்: 1910

# ஸ்ரீ கமலாம்பிகா

## கோவாப்பரேடிவ் அர்பன் பாங்கு லிமிடெட்,

திருவாரூர் : : தஞ்சை ஜில்லா

---

53 ஆண்டுகளாக பணியாற்றிவரும் பாங்கு.

31—10—1963-ல் உள்ளபடி

| | | ரூ. |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... | 7,50 000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ... | 5,00,375 |
| டெப்பாசிட்டுகள் நிலுவை நிற்பது | ... | 31,48 295 |
| கடன்கள் நிலுவை நிற்பது | ... | 30,32,276 |
| நடைமுதல் மூலதனம் | ... | 37,23 670 |

*எல்லாவிதமான டெப்பாசிட்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.*

### வட்டி விகிதம் :

பிக்ஸட் டிபாசிட்டுகள்

| | | |
|---|---|---|
| 6 மாத கெடுவுக்கு | ... | 5 சதவிகிதம் |
| 1 வருஷ கெடுவுக்கு | ... | $5\frac{1}{2}$ ,, |
| 2 வருஷங்களும் அதற்கு மேலும் | ... | 6 ,, |

விவரங்களுக்கு காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்.

TELEGRAMS:
"SWITCHES"

PHONE:
51436

MACHINE
TOOLS
MADE
TO
Gr. I.
LIMITS

# KASIMARI

ADDS ONE MORE LINE

**WATCH FOR THE PRODUCTS**
**SHORTLY APPEARING**
**IN THE MARKET**

(1) $\frac{3}{4}$" CAPACITY H. DUTY DRILL PRESS
BENCH MODEL

(2) 6"x10" TOOL & CUTTER GRINDER
BENCH MODEL

## KASIMARI MACHINE TOOLS CO.,

KASIMARI BUILDINGS
295 THIRUVOTTIYUR HIGH ROAD
MADRAS 21